# இஸ்லாம்

## தரம் 6

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**

*முதலாம் பதிப்பு - 2014*
*இரண்டாம் பதிப்பு - 2015*
*மூன்றாம் பதிப்பு - 2016*
*நான்காம் பதிப்பு - 2017*
*ஐந்தாம் பதிப்பு - 2018*
*ஆறாம் பதிப்பு - 2019*

*எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.*

ISBN 978-955-25-0070-1

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக,
இல. 439/3/3, ஹோகண்டராசாலை, பன்னிபிட்டி
விஸ்வா கிராபிக்ஸ் அச்சகத்தினால்
அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

<u>கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி</u>

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமுகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமுகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமுகத்தில் மிக உயர்ந்ததோர் இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

## முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தரம் 1 முதல் தரம் 11 வரையிலான சகல பாடநூல்களும் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

***டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க***
*கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

## வழிகாட்டல்

***டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி***
*கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி),*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

## இணைப்பாக்கம்

***அஷ்ஷைக் எம்.ரீ. அப்துர் ரஹ்மான்***
*உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

## எழுத்தாளர் குழு

***அஷ்ஷைக் எம்.எஸ். அப்துல் பாரி***
*முதுநிலை விரிவுரையாளர், அரபு இஸ்லாமிய நாகரிகத்துறை,*
*பேராதனை பல்கலைக்கழகம்.*

***மௌலவி யூ.எல். ஏ. அமீர்***
*விரிவுரையாளர், அரபு இஸ்லாமிய நாகரிக அலகு, கொழும்பு பல்கலைக்கழகம்.*

***மௌலவி எம்.எல்.எம்.யூஸுப்***
*அதிபர், ரீ.பீ. ஜாயா ஸாஹிராக் கல்லூரி, கொழும்பு - 02.*

***அஷ்ஷைக் எம்.ஆர்.எம். மிஹ்ளார்***
*சிரேஷ்ட ஆசிரியர், குமாரிமுல்ல மு.ம.வி. பூகொடை.*

***மௌலவி கே.பீ*** (B) ***நஸார்தீன்***
*அதிபர், நாச்சாதுவ மு.ம.வி, நாச்சாதுவ (அனுராதபுரம்).*

***மௌலவி எஸ்.எஸ். ரமழான்***
*சிரேஷ்ட ஆசிரியர், எருக்கலம்பிட்டி மு.ம.வி, நாகவில்லு, பாலாவி.*

***ஜனாப். எம்.ரீ.எம். முதஹ்ஹர்***
*பிரதி அதிபர், அரபா மத்திய கல்லூரி, வெலிகம.*

***மௌலவியா ஏ.ஆர். பஷீரா***
*ஆசிரியை, அல் மதீனா தேசிய கல்லூரி, சியம்பலாகஸ்கொட்டுவ.*

***ஜனாப் எம்.எப்.எம். நள்ரி***
*அதிபர், அல் ஹம்ரா ம.வி. தர்காநகர்.*

***ஜனாப் எஸ்.ஏ.ஸீ.எம். கராமத்***
*ஒய்வு பெற்ற அதிபர், எட்மண்டன் வீட்டுத்திட்டம், கொழும்பு - 06.*

## பதிப்பாசிரியர் குழு

***அஷ்ஷைக் ஏ.ஸீ. அகார் முஹம்மத்***
*பிரதிப் பணிப்பாளர், நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவலை.*

***ஜனாப் எம்.எம்.எம். ஸாபிர்***
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*அரபு, இஸ்லாமிய நாகரிக அலகு, கொழும்பு பல்கலைக்கழகம்.*

***அஷ்ஷைக் எம்.ஆர்.எம். இர்ஷான்***
*உதவிக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை நூல் நிலையப் பிரிவு,*
*கல்விச் சேவைகள் அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல.*

***அஷ்ஷைக் ஜே.எம். ஜஸார்***
*விரிவுரையாளர் (சமயப் பிரிவு)*
*தேசிய கல்வி நிறுவகம், மகரகம.*

***அஷ்ஷைக் எம்.ரீ. அப்துர் ரஹ்மான்***
*உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

## மொழிப் பதிப்பு

***ஜனாப் எம்.எம்.எம். ஹாரூன்***
*சிரேஷ்ட ஆசிரியர், அல் பத்ரியா ம.வி, கஹட்டோவிட்ட.*

## இறுதி மதிப்பீடு

***மௌலவி எம்.என்.எம். இஜ்லான் (காஸிமி)***
*பிரதம கதீப், கொழும்பு பெரிய பள்ளிவாசல்,*
*பணிப்பாளர், பாதிபிய்யா அரபுக் கல்லூரி, கஹட்டோவிட்ட.*

***மௌலவி ஏ.ஆர்.எம். மஹ்ரூப் (கபூரி)***
*இணைப்பதிகாரி, உலக இஸ்லாமிய அழைப்பு இயக்கம், கொழும்பு - 07.*

## சரவை பார்த்தல்

***ஜனாப் ஏ.எம்.ஏ. இஜ்லான்***
*சிரேஷ்ட ஆசிரியர், ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரி, கொழும்பு - 12*

## கணினி தட்டெழுத்து

***எச்.எப். ரிஸ்னா***
*கணினி வடிவமைப்பாளர்,*
*கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.*

## தளக்கோலம், படங்கள், அட்டை வடிவமைப்பு

***ஜனாப் எம்.டப்ளிவ்.ஏ. அஸார்***
*கணினி வடிவமைப்பாளர், மீள்பார்வை ஊடக மையம்,*
*ஸ்ரீ மகிந்ததர்ம மாவத்தை, கொழும்பு - 09.*

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. ஈமான் பற்றிய அறிமுகம் | 1 |
| 2. தவ்ஹீத், ரிஸாலத், மஆத் | 5 |
| 3. அல்லாஹ் படைப்பாளன் | 10 |
| 4. அல்லாஹ்வின் படைப்புக்கள் | 13 |
| 5. அல் இஸ்லாம் | 16 |
| 6. இஸ்லாத்தின் கடமைகள் | 20 |
| 7. அத்தஹாரத் - I | 24 |
| 8. அத்தஹாரத் - II | 28 |
| 9. தொழுகை - I | 32 |
| 10. தொழுகை - II | 36 |
| 11. நோன்பு நோற்போம் | 42 |
| 12. பெற்றோரைப் பராமரிப்போம் | 45 |
| 13. ஆசிரியரை மதிப்போம் | 49 |
| 14. நாவைப் பேணுவோம் | 52 |
| 15. அனுமதி பெறுவோம் | 55 |
| 16. பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்குவோம் | 59 |
| 17. அல்குர்ஆன் அறிமுகம் | 63 |
| 18. அல்குர்ஆனை ஓதுவோம் - I | 66 |
| 19. அல்குர்ஆனை ஓதுவோம் - II | 72 |
| 20. அல் ஹதீஸ் | 75 |
| 21. ஸீரதுர் ரஸூல் - I | 80 |
| 22. ஸீரதுர் ரஸூல் - II | 85 |
| 23. உம்மஹாத்துல் முஃமினீன்களை அறிந்து கொள்வோம் | 89 |
| 24. நபி صلى الله عليه وسلم அவர்களின் உத்தமத் தோழர்கள் இருவர் | 94 |
| 25. அஹ்லுல் பைத்களை அறிந்து கொள்வோம் | 97 |
| 26. ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் | 99 |
| 27. அயலவருடன் நல்லுறவைப் பேணுவோம் | 102 |
| 28. சுற்றாடலைப் பாதுகாப்போம் | 106 |
| 29. உயிர்களுக்கு அன்பு காட்டுவோம் | 110 |



அறிவைத் தேடி சுதந்திரம் மிக்க ஆனந்தத்துடன் நுழையுங்கள்
The National e-learning Portal for the General Education
www.e-thaksalawa.moe.gov.lk

# முக்கிய குறிப்பு

இப்பாட நூலில் சிலரின் பெயர்களுடன் சேர்த்து அடைப்புக்குறிக்குள் சுருக்கமாக இடப்பட்டுள்ள சில சொற்களுக்கான முழுமையான வடிவம் கீழே தரப்படுகின்றது. அவற்றை முழுமையாக உச்சரிப்பதே இஸ்லாமிய முறையாகும். எனவே அவ்வாறு உச்சரித்துப் பூரண பயனைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| *(ஸல்)* | | *ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்* |
| *(அலை)* | ஒரு ஆணாயின் | *அலைஹிஸ்ஸலாம்* |
| | ஒரு பெண்ணாயின் | *அலைஹஸ்ஸலாம்* |
| | இருவராயின் | *அலைஹிமஸ்ஸலாம்* |
| | பலராயின் | *அலைஹிமுஸ்ஸலாம்* |
| *(ரழி)* | ஒரு ஆணாயின் | *ரழியல்லாஹு அன்ஹு* |
| | ஒரு பெண்ணாயின் | *ரழியல்லாஹு அன்ஹா* |
| | இருவராயின் | *ரழியல்லாஹு அன்ஹுமா* |
| | பலராயின் | *ரழியல்லாஹு அன்ஹும்* |
| *(ரஹ்)* | ஒருவராயின் | *ரஹ்மஹுல்லாஹ் / ரஹ்மதுல்லாஹி அலைஹி* |
| | பலராயின் | *ரஹிமஹுமுல்லாஹ் / ரஹ்மதுல்லாஹி அலைஹிம்* |

# 1

# ஈமான் பற்றிய அறிமுகம்

*ஆமன்து பில்லாஹ் - அல்லாஹ்வை விசுவாசித்தேன்*

*என்னைப் படைத்தவன் அல்லாஹ். அவன்தான் மனிதர்களை ஆண் - பெண் என ஜோடிகளாகப் படைத்தான். பல நிறங்களிலும், பல்வேறு வடிவங்களிலும் படைத்தான். பல இனங்களை ஆக்கினான். பல மொழி பேசுபவர்களையும் உருவாக்கினான். குடும்ப உறவுகளை ஏற்படுத்தினான். சொந்தபந்தங்களை அன்பு, பாசத்தால் பிணைத்தான். மனிதர்களை எல்லாப் படைப்புகளை விடவும் உயர்த்தி வைத்தான்.*

*அல்லாஹ்தான் நாம் வாழும் பூமியைப் படைத்தான். சூரியன் சந்திரன் உட்பட வானத்தை முகடு போல படைத்தான். பூமியில் முனைகள் போல உயரமான மலைகளையும் நட்டினான். மேகங்களைப் பஞ்சு போன்று பரவச் செய்தான். கடல்கள், நதிகள் மற்றும் நீர்ச் சுனைகளை ஓட வைத்தான். மனிதன் வாழ்வதற்காக பூமியை அமைத்தான். ஆமன்து பில்லாஹ்! அல்லாஹ்வை நான் விசுவாசித்தேன்.*



அல்லாஹ் பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்காக வளிமண்டலத்தைப் படைத்தான். இவ்வளிமண்டலத்தில் மனிதன் சுவாசிப்பதற்கு ஒட்சிசனையும், தாவரங்களின் ஒளித் தொகுப்புக்காக காபனீரொட்சைட்டையும் உருவாக்கினான். மனிதன் வெளியேற்றும் காபனீரொட்சைட்டைத் தாவரங்கள் ஒளித்தொகுப்புக்காகப் பயன்படுத்தி மனிதன் சுவாசிப்பதற்காக ஒட்சிசனை வெளியேற்றுகின்றன. இதன் மூலம் மனிதர்களுக்கும், ஜீவராசிகளுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தினான். அல்லாஹ்தான் இந்த ஒழுங்கான சுற்றுவட்டத்தை அமைத்துள்ளான். ஆமன்து பில்லாஹ்! அல்லாஹ்வை நான் விசுவாசித்தேன்.

சூரியன் காலையில் உதிக்கிறது. உலகம் விழிக்கிறது. மக்கள் இயங்க ஆரம்பிக்கின்றார்கள். உழைக்கிறார்கள். பணி செய்கிறார்கள். சூரியன் மாலையில் மறைகிறது. உலகம் இருளடைகிறது. களைத்த மக்கள் இரவில் நித்திரை செய்கிறார்கள். களைப்பு நீங்க, நித்திரை அகல மீண்டும் காலையில் விழிக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் தொடரும் இந்த ஒழுங்கமைப்பை அல்லாஹ் தான் உருவாக்கினான். ஆமன்து பில்லாஹ்! அல்லாஹ்வை நான் விசுவாசித்தேன்.

வானத்திலிருந்து மழை பொழிகிறது. வரண்ட நிலம் நனைகிறது. புற்கள் முளைக்கின்றன. கொடிகள் படர்கின்றன. செடிகள் தளிர்க்கின்றன. மரங்கள் வளர்கின்றன. ஒரே நீர்தான் பாய்ச்சப்படுகின்றது. புற்கள் வளர்ந்து பச்சைப் பசேலெனக் காட்சி தருகின்றன. பூக்கள் வண்ண வண்ண நிறங்களில் பூத்துக் குலுங்குகின்றன. அதோ பாருங்கள்! பச்சைப் புற்றரையில் கால்நடைகள் மேய்கின்றன. பூச்சிகள் பூக்களில் தேனை உறிஞ்சி மகிழ்கின்றன.





பறவைகள் கனிகளை உண்டு பாடி மகிழ்கின்றன. மனிதனும், அனுமதிக்கப்பட்ட தாவரங்களையும், பிராணிகளையும் சமைத்து உண்கிறான். அல்லாஹ்தான் இந்த அற்புத ஒழுங்கமைப்பை ஏற்படுத்தினான். ஆமன்து பில்லாஹ்! அல்லாஹ்வை நான் விசுவாசித்தேன்.

மனித உடம்புக்குள்ளும் அல்லாஹ்வின் அற்புத ஒழுங்கமைப்பைக் காணுகிறேன். சுவாசத் தொகுதி, நரம்புத் தொகுதி, சமிபாட்டுத் தொகுதி, குருதித் தொகுதி அனைத்துமே சீரான ஒழுங்கில் செயற்படுகின்றன. பார்ப்பதற்காகக் கண்கள், கேட்பதற்காகக் காதுகள், சுவைப்பதற்கும், பேசுவதற்கும் நாவு இவற்றிலெல்லாம் அல்லாஹ்வின் அற்புதப் படைப்பாற்றலை காணுகிறேன். ஆமன்து பில்லாஹ்! அல்லாஹ்வை நான் விசுவாசித்தேன்.

இவ்வாறாக, அனைத்துப் படைப்புகளிலும் அல்லாஹ்வின் அற்புத ஒழுங்கமைப்பைக் காணுகிறேன். இவை தற்செயலாகவோ, சடுதியாகவோ தோன்றியவை அல்ல. அறிவும் ஆற்றலும் உள்ள அல்லாஹ்தான் இவற்றைப் படைத்தான், இயக்குகிறான் என உறுதியாக நம்புகிறேன். அல்லாஹ்வை விசுவாசிக்கும் முஸ்லிமாகிய நான் அவனது மலக்குகளை விசுவாசித்தேன். அவன் இறக்கிய வேதங்களை விசுவாசித்தேன். அவன் அனுப்பிய தூதர்களை விசுவாசித்தேன். இறுதிநாள் உண்டென விசுவாசித்தேன். அவனது திட்டப்படியே (கத்ர்) யாவும் நடக்கின்றன எனவும் விசுவாசித்தேன். ஆமன்து பில்லாஹ்! அல்லாஹ்வை நான் விசுவாசித்தேன்.

**பயிற்சி**

**பொருத்தமான சொற்களை வைத்து வெற்றிடங்களை நிரப்புங்கள்**

1. அனைத்தையும் படைத்தவன் ..................
2. அவன் மனிதர்களில் .................... என சோடிகளாகப் படைத்தான்.
3. மழையைப் பொழிவித்துப் பல ................ உடைய பழங்களை உருவாக்கினான்.
4. ................. பூமியில் முளைகள் போல அமைக்கப்பட்டுள்ளன.
5. ................. ஒட்சிசன், காபனீரொட்சைட் என்பன கலந்துள்ளன.

**சுருக்கமாக விடை தருக**

1. ஆமன்து பில்லாஹ் என்பதன் பொருள் யாது?
2. அல்லாஹ் தாவரங்களை முளைப்பிப்பதற்காக எதனை வழங்குகின்றான்?
3. மனிதன் இரவில் களைப்பாறுவதற்காக அல்லாஹ் என்ன செய்துள்ளான்?
4. அல்லாஹ்வின் படைப்பினங்கள் நான்கைக் குறிப்பிடுக.
5. நீங்கள் அனுபவிக்கும் அல்லாஹ்வின் அருட்கொடைகள் ஐந்தைக் குறிப்பிடுக.

# 2

# தவ்ஹீத், ரிஸாலத், மஆத்

ஆசிரியை:-

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹூ.

மாணவிகள்:-

வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹூ.

ஆசிரியை:-

பிள்ளைகளே! நாங்கள் எல்லோரும் முஃமின்கள் அல்லவா? 'முஃமின்' என்றால் யார் என்பதை உங்களில் எவரேனும் சொல்ல முடியுமா?



அர்வா:-

டீச்சர் எனக்குத் தெரியும். எங்கட உம்மா எனக்கு சொல்லித தந்திருக்கிறார். நான் சொல்லவா?



ஆசிரியை:-

சரி சற்று சத்தமாகக் கூறுங்கள் அர்வா.

அர்வா:-

ஆமன்து பில்லாஹ்வில் உள்ளடக்கிய வற்றை விசுவாசித்தவரே'முஃமின்' ஆவார்.

ஆசிரியை:-

சரியாகச் சொன்னீர்கள் அர்வா. பாரகல்லாஹு லகி (அல்லாஹ் உங்களுக்கு பரகத் செய்வானாக!)

பிள்ளைகளே! அர்வா கூறியது போல் 'ஆமன்து பில்லாஹ்' என்ற தொடரில் அடங்கியுள்ள ஆறு அம்சங்களையும் சந்தேகமில்லாமல் நம்பி விசுவாசித்தவர் தான் 'முஃமின்'. இன்றைய பாடத்தில் அந்த ஆறு அம்சங்களையும் உள்ளடக்கிய மூன்று அடிப்படைகளை சுருக்கமாக நோக்குவோம்.

அமானா:-

டீச்சர்! ஈமானின் ஆறு விடயங்களில் மூன்று விடயங்களை இன்று விரிவாக சொல்லித் தரப்போகிறீர்கள் அப்படித்தானே!

ஆசிரியை:-

இல்லை மகளே! அந்த ஆறு விடயங்களும் இந்த மூன்றிலும் உள்ளடங்கும். அவை தான் தவ்ஹீத், ரிஸாலத், மஆத் என்ற பதங்களாகும்.

ஸைனப்:-

டீச்சர்! அந்த பதங்களின் பொருள் என்ன?

ஆசிரியை:-

தவ்ஹீத் என்றால் ஏகத்துவம், ரிஸாலத் என்றால் தூதுத்துவம், மஆத் என்றால் மீண்டும் எழுப்பப்படும் மறுமை என்பது பொருள்.

ஷைமா:-

இவற்றின் பொருள்களை இன்னும் விளக்கமாக சொல்லித் தருவீர்களா?

ஆசிரியை:-

நல்லது ஷைமா! அல்லாஹ் தான் எம்மைப் படைத்தான். அவன் ஒருவன். அவன் மாத்திரம் தான் வணங்கப்படவும் உதவி தேடப்படவும் தகுதியானவன். அவன் நிகரற்றவன். அவனுக்கு இணை துணை கிடையாது, எந்த தேவையும் அற்றவன், எந்தவொன்றையும் ஹலால் - ஹராம் ஆக்கும் உரிமை அவனுக்கு மட்டுமே உரிய அதிகாரமாகும். நன்மை - தீமை அனைத்தும் அவனிடமிருந்தே கிட்டுகின்றன. இவ்வாறு விசுவாசிப்பதே தவ்ஹீத் (ஏகத்துவம்) ஆகும்.

அர்வா:-

தவ்ஹீதின் எதிர்ப்பதம் 'ஷிர்க்' என்பதாக எங்களது உம்மா சொன்னார். அதன் பொருள் இணைவைப்பது என்பது தானே டீச்சர்!

ஆசிரியை:-

ஆம்! அப்படியே தான் அதனால் தான் இறைவனுக்கு இணைவைப்பவர்கள் 'முஷ்ரிகுகள்' என அழைக்கப்படுகின்றனர். சரி இனி நாங்கள் ரிஸாலத் எனப்படும் தூதுத்துவம் பற்றிப் பார்ப்போம். மனிதனைப் படைத்த அல்லாஹ் அவன் உலகில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கும் வழிகாட்டினான்.

அல்லாஹ்வின் வழிக்காட்டல்களை உள்ளடக்கியவையே வேதங்கள் ஆகும். இந்த வேதங்களைப் போதிப்பதற்காக மனிதர்களுக்கு மத்தியில் நல்லவர்களையும் பொருத்தமானவர்களையும் அல்லாஹ் தெரிவு செய்தான். அவர்களையே நபிமார்கள் என அழைக்கின்றோம். இந்நபிமார்களுக்கு மத்தியில் விசேடமானவர்கள் ரஸூல்மார்கள் என அழைக்கப்படுகின்றனர்.

பிள்ளைகளே! மலக்குகளில் மிகவும் முதன்மையானவர் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் ஆவார். இவருக்கூடாகவே அல்லாஹ் வேதங்களையும்

ஸுஹுபுகளையும் நபிமார்களுக்கு அனுப்பி வைத்தான். இதனையே நாம் ரிஸாலத் (தூதுத் துவம்) என அழைக்கிறோம்.

அர்வா:-

டீச்சர்! ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் நபிமார்களுக்கு வஹீ கொண்டுவருவதாக உம்மா சொன்னார். இதனைத்தானே நீங்கள் ரிஸாலத் என்று கூறுகிறீர்கள்.

ஆசிரியை:-

மாஷா அல்லாஹ் அர்வா! நீங்கள் சொன்னது சரி. உங்களது உம்மா உங்களுக்கு நிறைய மார்க்க விடயங்களை சொல்லித் தருகிறார் என்பது விளங்குகின்றது. பிள்ளைகளே! நீங்களும் அர்வாவைப்போல மார்க்க விடயங்களை பெற்றோர்களிடம் கேட்டும், நூல்களை வாசித்தும் அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அன்புச் செல்வங்களே! நீங்கள் அவ்வாறு செய்வீர்கள் தானே?

மாணவிகள்:-

இன்ஷா அல்லாஹ் டீச்சர். நிச்சயம் நாங்கள் செய்வோம்.

ஆசிரியை:-

பிள்ளைகளே! இனி மஆத் எனப்படும் மறுமை நம்பிக்கை பற்றிப் பார்ப்போம். மனிதன் மரணிப்பதோடு அவனது வாழ்க்கை முடிவடைந்து விடுவதில்லை. கப்ரில் மனிதர்கள் மீண்டும் உயிரூட்டப்படுவார்கள். அவர்கள் முன்கர் - நகீர் எனும் மலக்குகளால் விசாரிக்கப்படுவார்கள். விசாரணையின் பின்னர் கப்று வாழ்க்கை சுவர்க்கத்தின் பூங்காவாக அமையும். அல்லது நரகின் கிடங்காக அமையும்.

இல்மா :-

டீச்சர்! இரண்டாவது ஸூர் ஊதப்பட்டதும் மக்கள் மஹ்ஷர் மைதானத்தில் ஒன்று கூட்டப்படுவார்கள் என ரஸானா ஆசிரியை கூறினார். அது கப்றுடைய வாழ்க்கையின் பின்னர்தானே?

ஆசிரியை :-

ஆமாம். முதல் ஸூர் ஊதப்பட்டதும் உலகின் அழிவு ஏற்படும். அனைத்து உயிரினங்களும் மரணித்துவிடும். குறிப்பிட்ட காலத்தில்

இரண்டாம் ஸூர் ஊதப்பட மரணித்தவர்கள் உயிர்பெற்று எழுவார்கள். அவர்கள் மஹ்ஷர் எனும் வெளியில் ஒன்று கூட்டப்படுவார்கள். பின்னர் பகிரங்க விசாரணை நடைபெறும். நன்மை செய்தோர் சுவனம் செல்வார்கள். தீமை செய்தோர் நரகம் போவார்கள். இவை அனைத்தையும் உள்ளடக்கியதையே மஆத் என்கிறோம். இப்போது தவ்ஹீத், ரிஸாலத், மஆத் என்ற பதங்களின் பொருளை நீங்கள் தெளிவாக அறிந்திருப்பீர்கள். இன்ஷா அல்லாஹ் அடுத்த பாடத்தில் சந்திப்போம்!

மாணவிகள்:-

ஜஸாகல்லாஹு ஹைரன்

## பயிற்சி

1. பின்வரும் அறபுச் சொற்களின் பொருளைக் குறிப்பிடுக.

   (அ) தவ்ஹீத்

   (ஆ) முஃமின்

   (இ) ஆமன்து பில்லாஹ்

   (உ) ரிஸாலத்

   (ஊ) மஆத்

2. அல்லாஹ்வைப் பற்றி நீங்கள் எவ்வாறு விசுவாசிக்கின்றீர்கள்?

3. ரஸூல்மார்கள் எனப்படுவோர் யாவர்?

4. ஸூர் ஊதப்பட்டதும் நிகழ்வன யாவை?

5. பின்வரும் மலக்குகளின் பணியைக் குறிப்பிடுக

   அ) ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம்

   ஆ) முன்கர் - நகீர் அலைஹிமஸ்ஸலாம்

# 3

# அல்லாஹ் படைப்பாளன்

மனிதர்களாகிய எங்களைப் படைத்தவன் யார்? நாம் வாழும் இந்த உலகைப் படைத்தவன் யார்? பூமியிலுள்ள கடல்களை, நதிகளை, காடு களை, மலைகளைப் படைத்தவன் யார்? மிருகங்கள், பறவைகள், மீன்கள், பூச்சிகள் போன்றவற்றைப் படைத்தவன் யார்? இந்த வினாக்கள் முக்கியமானவை. மனிதர்கள் எல்லோரின் உள்ளங்களிலும் இந்த வினாக்கள் தோன்றும். இது ஓர் அடிப்படையான வினாவாகும். இதற்கான சரியான விடையை நாம் அறிய வேண்டும்.

நாம் கற்கும் வகுப்பறை, அதிலுள்ள கதிரைகள், மேசைகள், கற்பித்தல் உபகரணங்கள் என்பன தாமாகவே இங்கு தோன்றினவா? நிச்சயமாக இந்தப்





பாடசாலையையும் அதன் வகுப்பறைகளையும் மேசன் கட்டியிருக்க வேண்டும். இங்குள்ள தளபாடங்களைத் தச்சன் செய்திருக்க வேண்டும். நூல்களை எழுத்தாளர்கள் எழுதி பதிப்பித்திருக்க வேண்டும். இப்படி இல்லாமல் இவை சுயமாக உருவாகி இருக்க முடியுமா? நிச்சயமாக முடியாதல்லவா?

பாண் தயாரிக்கும் ஒரு வெதுப்பகத்தை (பேக்கரி) எடுத்துக் கொள்வோம். அங்கு, கோதுமை சுயமாக மா மூடைகளாக மாறுகின்றது. அந்த மா மூடைகள் இயந்திரங்களில் தானாகவே போய் விழுகின்றன. இயந்திரங்கள் சுயமாக இயங்குகின்றன. பாண்கள் தானாகவே உருவாகி கீழே விழுகின்றன என்று யாரும் கூறினால் நீங்கள் நம்புவீர்களா?

இதேபோன்று உங்கள் வீட்டு சமையலறையில் தேநீர், சோறு, கறி போன்றன தானாகவே தயாராகின்றனவா? அல்லது அறிவும் ஆற்றலும் உள்ள உங்கள் தாயார்தான் அவற்றைத் தயாரித்து உங்களுக்கு வழங்குகின்றாரா? உங்கள் சாப்பாட்டு மேசையில் உணவுகள் தாமாகவே வந்து சேர்கின்றன என்று உங்கள் தாயார் சொன்னால் கூட நீங்கள் நம்புவீர்களா? இந்தப் பணிகளை படிமுறையாக இயக்கி வைக்க ஒருவர் இருக்க வேண்டுமல்லவா?

இவற்றிலிருந்து நாம் எதனை விளங்குகின்றோம்? எந்தவொரு படைப்பையும் உருவாக்கிய ஒரு படைப்பாளன் இருக்க வேண்டும். படைப் பாளன் இல்லாமல் எந்தவொரு படைப்பும் உருவாகாது. இவ்வாறான எந்தவொன்றையும் முதலில் இயக்கி வைக்கக் கூடிய ஒருவன் இருக்க வேண்டும்.

அந்த இயக்குபவன் அறிவுள்ளவனாக இருக்க வேண்டும். சக்தியும் ஆற்றலும் உள்ளவனாக இருக்க வேண்டும்.

இப்போது இந்த பாரிய உலகை நோக்குங்கள். அதில் பரந்து விரிந்துள்ள சமுத்திரங்களை நோக்குங்கள். உயர்ந்து கம்பீரமாகக் காட்சி தரும் மலைகளை உற்று நோக்குங்கள். வானத்தில் பஞ்சு போன்று மிதக்கும் மேகக்கூட்டங்களைப் பாருங்கள். காட்டில் உலாவும் யானை, சிங்கம், சிறுத்தைகளைப் பாருங்கள். காகம், கிளி, பருந்து என வானில் பறக்கும் பறவைகளைப் பாருங்கள். பூனை, நாய், பசு போன்ற தோட்டத்தில் சுற்றித் திரியும் செல்லப் பிராணிகளை நோக்குங்கள்.

இவை அனைத்தும் நிச்சயமாக அறிவும், ஆற்றலும் உள்ள ஒருவனால் தானே படைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தப் படைப்பாளனே அல்லாஹ்!

மனிதர்களாகிய எங்களையும் எங்கள் மூதாதையர்களையும் படைத்தவன் அல்லாஹ்தான். ஆரம்ப மனிதரான ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களைப் படைத்தவனும் அல்லாஹ்தான். அவரின் விலா எலும்பிலிருந்து ஹவ்வா அலைஹஸ் ஸலாம் அவர்களைப் படைத்தவனும் அல்லாஹ்தான். அவர்களிருவரிலிருந்தும் இன்று வரையும் இனிமேலும் மனித சந்ததிகளைப் படைப்பதும் அல்லாஹ்தான். மனிதனையும் ஏனைய எல்லா படைப்புகளையும் அல்லாஹ்தான் படைத்தான் என நாம் உறுதியாக நம்புவோம்.

அல்லாஹுு ஹாலிகுனா அல்லாஹுு ராஸிகுனா
அல்லாஹுு ஹாதீனா சுப்ஹான மௌலானா
அல்லாஹ் எம்மைப் படைத்தவன்
அல்லாஹ் எமக்கு உணவளிப்பவன்
அல்லாஹ் நேர்வழி காட்டுபவன்
தூய்மையான எசமானன்

**செயற்பாடு**

1. வானத்தில் பறந்து செல்லும் ஒரு சிட்டுக் குருவியை அவதானியுங்கள். அதற்கு அல்லாஹ் வழங்கியுள்ள அருள்களைப் பட்டியற்படுத்துங்கள்.
2. அல்லாஹ்வின் படைப்பான மனிதனுக்கும் அவன் நிழல் பெறும் ஆல மரத்துக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை அட்டவணைப்படுத்துங்கள்.

# 4

# அல்லாஹ்வின் படைப்புக்கள்

*பிள்ளைகளே! மனிதன் உட்பட ஏனைய படைப்புக்கள் அனைத்தையும் அல்லாஹ் தான் படைத்தான் எனப் பார்த்தோம் அல்லவா!*

*அல்லாஹ்வின் படைப்புக்களில் உயிர் உள்ளவைகளும் உள்ளன. உயிரற்றவைகளும் உள்ளன. அவற்றுள் மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், பூச்சிகள், தாவரங்கள், மீன்கள் போன்றன உயிர் உள்ளவை. இவற்றுள் தாவரங்களுக்கு நடமாட முடியாது. கிருமிகள், நுண்ணங்கிகள் மற்றும் பக்றீரியாக்கள் போன்றன எமது வெற்றுக் கண்களுக்குப் புலப்படாது இயங்கும் மிகச் சிறிய உயிரினங்களில் அடங்கும்.*

*மண், நீர், நெருப்பு, மலைகள், மற்றும் ஆறுகள் போன்றன உயிர் இல்லாத சடப்பொருட்கள் ஆகும். காற்று, மின்சாரம், வெப்பம், காந்தம் போன்ற அல்லாஹ்வின் படைப்புக்களான சக்திகளுக்கும் உயிர் கிடையாது.*

*நாம் வாழும் உலகுக்கு அப்பால் உள்ள அல்லாஹ்வின் சில படைப்புக்களாக சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், கோள்கள் போன்றன காணப்படுகின்றன. பிரபஞ்சத்தில் காணப்படும் பிரமாண்டமான இறைவனது படைப்புக்களான இவை இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. இருப்பினும் இவைகளுக்கும் உயிர் கிடையாது.*



உலகில் காணப்படும் உயிருள்ள, உயிரற்ற படைப்புக்கள், பிரபஞ்சத்தில் காணப்படும் பிரமாண்டமான ஏனைய படைப்புக்கள் அனைத்தும் அற்புதமானவையாகும். அவை திட்டமிட்ட அடிப்படையில் படைக்கப் பட்டுள்ளன. ஓர் ஒழுங்கில் அவை இயங்குகின்றன. இதன் மூலம் அறிவும் சக்தியும் மிக்க அல்லாஹ்தான், அவற்றைப் படைத்துள்ளான் என்பது தெளிவாகின்றது அல்லவா!

பிள்ளைகளே! நமது புலன்களுக்கு அப்பாற்பட்ட இன்னொரு உலகமும் உண்டு. அவ்வுலகிலும் இறை படைப்புக்கள் உண்டு. அவர்களில் மலக்குகள் முக்கியமானவர்கள். அல்லாஹ்வை நம்பும் முஃமின்கள் அவனது மலக்கு களையும் விசுவாசிக்க வேண்டும்.

இது பற்றி அல்குர்ஆன் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றது.

'(விசுவாசிகள்) யாவரும் அல்லாஹ்வையும் அவனுடைய மலக்கு களையும் அவனுடைய வேதங்களையும், அவனது தூதர் களையும் விசுவாசி க்கின்றனர்' (2:285)

அல்லாஹ், முதல் மனிதன் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களை மண்ணால் படைத்தான். ஆனால் மலக்குகளை ஒளியால் படைத்தான். மலக்குகள் ஆண்களுமல்லர்; பெண்களுமல்லர். அவர்களுக்குப் பெற்றோர்களோ பிள்ளைகளோ இல்லை. மனிதனைப் போன்று அவர்களுக்குப் பசி, தாகம், ஆசை, களைப்பு, தூக்கம், முதிர்ச்சி, தளர்ச்சி போன்றன ஏற்பட மாட்டாது. அவர்களுக்குத் தெய்வீகத் தன்மையும் கிடையாது, அல்லாஹ்வினால் ஏவப்பட்டதை அவர்கள் செய்து முடிப்பார்கள்.

மலக்குகள் எண்ணில் அடங்காதவர்கள். அவர்களின் எண்ணிக்கையை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள். இருப்பினும் அவர் களில் பத்துப்பேர் முக்கியமானவர்கள். மலக்குகளில் ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் மிக முக்கியமானவர். அவர்தான் அல்லாஹ்விடம் இருந்து வஹீயை நபிமார்களுக்குக் கொண்டு வந்தவர். இவருக்கு 'அர்-ரூஹ்', 'நாமுஸூல் அஃழம்' மற்றும் 'ரூஹுல் குத்ஸ்' என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு.

இவரைத் தவிர, 'மீக்காயீல்' அலைஹிஸ் ஸலாம் காற்று, நீர், நெருப்பு போன்றவற்றிற்குப் பொறுப்பாயிருக்கிறார்கள். 'இஸ்ராபீல்' அலைஹிஸ் ஸலாம் கியாமம் நெருங்கும் பொழுது ஸூர் ஊதுவார்கள், 'மலகுல் மவ்த்' அலைஹிஸ் ஸலாம் உயிர் வாங்குவார்கள்.

'ரகீப் அலைஹிஸ் ஸலாம், அதீத்' அலைஹிஸ் ஸலாம் இருவரும் மனிதன் செய்யும் நன்மை தீமைகளைப் பதிவு செய்கிறவர்கள். 'முன்கர் அலைஹிஸ் ஸலாம்- நகீர் அலைஹிஸ் ஸலாம்' இருவரும் கப்ரில் விசாரணை செய்வார்கள். 'ரிழ்வான் ' அலைஹிஸ் ஸலாம் சுவர்க்கத்தின் அதிபதியும் 'மாலிக்' அலைஹிஸ் ஸலாம் நரகத்தின் அதிபதியும் ஆவார்கள்.

புலனறிவுக்கு அப்பாற்பட்ட அல்லாஹ்வின் படைப்புகளுள் இன்னொரு பகுதியினரும் உள்ளனர். அவர்களே 'ஜின்கள்' ஆவர். இவர்கள் நெருப்பினால் படைக்கப்பட்டுள்ளனர். மனிதர்களைப்போன்று இவர்களுக்குப் பசி, தாகம், உறக்கம், ஆசை, குடும்பம் போன்றன காணப்படும். ஜின்களும் மனிதர்களைப் போன்றே அல்லாஹ்வை வணங்கி வழிபடுமாறு ஏவப்பட்டுள்ளனர்.

ஜின்களுக்கு மத்தியில், இறைக்கட்டளைகளுக்கு மாறு செய்யும் பிரிவினர் 'ஷைத்தான்கள்' என அழைக்கப்படுகின்றனர். குழப்பம் விளை விக்கும் ஷைத்தான்களின் தலைவனே 'இப்லீஸ்' ஆவான்.

பிள்ளைகளே! அல்லாஹ்வின் படைப்புக்கள் இவ்வாறாக அற்புத மாகவும் ஆச்சரியமாகவும் உள்ளன. இதன் மூலம் அனைத்தினதும் படைப் பாளன் வல்ல அல்லாஹ் என நம்புவோம்.

**பயிற்சி**

1. அல்லாஹ்வின் பிரமாண்டமான இரு படைப்புகளைக் குறிப்பிடுக.
2. ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் எதனால் படைக்கப்பட்டார்கள்?
3. ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் இரு சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடுக.
4. மனிதர்களுக்கும் மலக்குகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.
5. இறை படைப்புகளின் அற்புதங்களைக் காணும்போது உமது உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களைப் பட்டியற்படுத்துக.
6. ஜின்கள் பற்றி நீர் அறிந்தவற்றை சுருக்கமாக எழுதுக.
7. பிரதான மலக்குகளின் பெயர்களைத் தருக.

# 5

# அல் இஸ்லாம்

ஸிமாம்:-

அஸ்ஸலாமு அலைக்கும், நிஹாத்!

நிஹாத்:-

வஅலைக்குமுஸ்ஸலாம், ஸிமாம்!

ஸிமாம்:-

நீங்கள் நேற்றுப் பாடசாலைக்குச் சென்றீர்களா?

நிஹாத்:-

ஆம் நீங்கள் ஏன் பாடசாலைக்கு வரவில்லை?

ஸிமாம்:-

எனது மாமா சுகவீனமுற்றிருக்கிறார். நலம் விசாரிக்க வாப்பாவுடன் போயிருந்தேன்.

நிஹாத்:-

மாஷா அல்லாஹ்! நல்ல விடயம்தான். நாங்கள் நேற்று இஸ்லாம் பாடத்தில் அல் இஸ்லாம் என்ற தலைப்பில் பல விடயங்களைக் கற்றோம்.

ஸிமாம்:-

அதைப்பற்றி எனக்கும் சொல்லித் தாருங்களேன்.



*நிஹாத்:-*

இஸ்லாம் என்ற அரபுச் சொல்லுக்கு சாந்தி, சமாதானம், கட்டுப்படுதல், சரணடைதல் முதலான கருத்துக்கள் உண்டு. அது அல்லாஹ்வினால் அருளப்பட்ட இறுதி மார்க்கமாகும். அது ஐந்து அர்கான்களைக் கொண்டது.

*ஸிமாம்:-*

அர்கான் என்றால் என்ன?

*நிஹாத்:-*

அர்கானுல் இஸ்லாம் (இஸ்லாத்தின் தூண்கள்) என்பது ‘ஷஹாதா’, ‘ஸலாத்’, ‘ஸக்காத்’, ‘ஸவ்ம்’, ‘ஹஜ்’ ஆகிய ஐந்து கடமைகளையும் குறிக்கும்.

*ஸிமாம்:-*

ஷஹாதா என்றால் என்ன?

*நிஹாத்:-*

ஷஹாதா என்பது வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு

எவருமில்லை என்றும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனது ரஸூல் என்றும் சாட்சி பகர்ந்து ஈமான் கொள்வதாகும்.

ஸிமாம்:-

ஏனைய கடமைகள் பற்றியும் கூறுங்கள்.

நிஹாத்:-

ஸலாத் என்பது ஐவேளை நிறைவேற்றப்பட வேண்டிய தொழுகையையும் ஸகாத் என்பது வசதியுள்ளவர்கள் தமது செல்வத்திலிருந்து ஒரு பகுதியை குறிப்பிட்டவர்களுக்கு வழங்குவதையும், ஸவ்ம் என்பது ரமழான் மாதத்தில் நோற்கப்படும் நோன்பையும், ஹஜ் என்பது வசதி வாய்ப்பு உள்ளவர்கள் புனித மக்கா சென்று நிறைவேற்றும் கடமையையும் குறிக்கும். இவை தவிர இஸ்லாத்துக்கு வேறு பல சிறப்பம்சங்களும் உண்டு.

ஸிமாம்:-

அவை பற்றியும் கூற முடியுமா?

நிஹாத்:-

இஸ்லாம் அல்லாஹ் அருளிய இறுதி மார்க்கம். அது இயற்கையான மார்க்கம். மனித வாழ்க்கையில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும், எக்காலங்களிலும் எவ்விடங்களிலும் பின்பற்றத்தக்க மார்க்கம். நீதி, நேர்மை, உண்மை, சகிப்புத்தன்மை. சகவாழ்வு முதலானவை அதன் சிறப்புக்களில் உள்ளன வாகும். வாழ்க்கையில் எல்லா விடயங்களிலும் இஸ்லாம் கூறும் வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நற்குணங்களும் நற்பண்புகளும் வளர்கின்றன. மேலும், அல்லாஹ் எம்மை அவதானிக்கின்றான். மறுமையில் எமது செயல்கள் பற்றி விசாரிப்பான் என்ற உணர்வு நல்வழியிற் செயற்படத் தூண்டுகின்றது.

ஸிமாம்:-

இஸ்லாமிய வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதன் மூலம் எதிர்பார்க்கப் படுவது யாது?

*நிஹாத்:-*

*உலக வாழ்வில் நிம்மதியும் அல்லாஹ்வின் திருப்தியும் மறுமையில் சுவன வாழ்வுமாகும்.*

*ஸிமாம்:-*

*நல்ல விடயங்கள் பலவற்றைச் சொல்லித் தந்தீர்கள். ஜஸாக்கல்லாஹு கைரா.*

*நிஹாத்:-*

*நாம் வாழ்வில் இவற்றைப் பின்பற்றியொழுகுவோம். இன்ஷா அல்லாஹ்!*

**பயிற்சிகள்**

*பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.*

1. *இஸ்லாம் என்ற அரபுச் சொல்லின் கருத்து கட்டுப்படுதல், சரணடைதல் ஆகும்.* ( )
2. *அர்கானுல் இஸ்லாம் என்பது இஸ்லாத்தின் அடிப்படைகளைக் குறிக்கும்.* ( )
3. *இஸ்லாம் ஐந்து தூண்கள் மீது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.* ( )
4. *சகிப்புத் தன்மை, சகவாழ்வு என்பன இஸ்லாத்திற்கு அப்பாற்பட்டவை.* ( )
5. *இஸ்லாமிய வழிகாட்டலை அலட்சியம் செய்பவர்கள் சுவனம் செல்வர்.* ( )

# 6

# இஸ்லாத்தின் கடமைகள்

ஒருமுறை முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது ஸஹாபாக்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்தார்கள். அப்போது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மனித உருவில் வந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னால் அமர்ந்தார்கள். 'இஸ்லாம் என்றால் என்ன?' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வினவினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'இஸ்லாம் என்பது, வணங்கத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமில்லை, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்று (ஷஹாதா) சாட்சி கூறுதல், தொழுகையை நிலைநாட்டுதல், ஸக்காத் கொடுத்தல், ரமழானில் நோன்பு நோற்றல், முடியுமானவர்கள் ஹஜ் செய்தல்' என விடையளித்தார்கள்.

இந்த ஹதீஸ் இஸ்லாத்தின் கடமைகள் ஐந்தையும் தெளிவாகக் குறிப்பிடுகிறது. அவை பற்றி நோக்குவோம்.

### ஷஹாதா

ஷஹாதா என்பது ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்காகச் சொல்கின்ற உறுதி மொழியாகும். இதனை ஒவ்வொருவரும் தூய எண்ணத்துடன் மொழிவது இன்றியமையாததாகும். 'லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்று கூறுவதே ஷஹாதா என்று அழைக்கப்படுகின்றது. இந்தக் கலிமா அல்லாஹ்வையும் அவனது தூதரையும் ஈமான் கொள்வதை உள்ளடக்கியுள்ளது.

ஒருவர் இக்கலிமாவை மொழிந்து இஸ்லாத்தில் நுழைவதன் மூலம் சுவர்க்கம் நுழையும் வாய்ப்பைப் பெறுகின்றார். 'எவர் லா இலாஹ




இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்று கூறி, அதன்படி செயற்படுகின்றாரோ அவர் சுவர்க்கம் நுழைவார்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (புஹாரி, முஸ்லிம்)

## தொழுகை

இஸ்லாம் கூறும் கடமைகளில் இரண்டாவது தொழுகையாகும். இதனை ஒரு முஸ்லிம் நாளாந்தம் ஐவேளை உரிய நேரங்களில் நிறைவேற்றுவது கடமையாகும். இது பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள். 'முஸ்லிமுக்கும் காபிருக்குமிடையில் உள்ள வேறுபாடு தொழுகையை விடுவதாகும்' (புஹாரி)

ஒருமுறை இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், 'என்னை சுவர்க்கத்தில் நுழையச்செய்யும் ஓர் இபாதத்தைச் சொல்லித்தாருங்கள்' எனக்கேட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள். தொழுகையை நிலை நாட்டுங்கள்' எனக் கூறினார்கள். (புஹாரி)

## ஸக்காத்

இஸ்லாம் கூறும் கடமைகளுள் மூன்றாவது ஸக்காத் ஆகும். இது வசதி படைத்த ஒவ்வொரு முஸ்லிமும் தமது செல்வத்திலிருந்து ஒரு பகுதியை ஸக்காத் பெறத் தகுதியுடைய கூட்டத்தினருக்கு வழங்குவதைக் குறிக்கும். இதன் மூலம் செல்வம் தூய்மையடைகின்றது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யமன் நாட்டுக்கு முஆத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை கவர்னராக அனுப்பிய போது, ஸக்காத்தின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதில்..

'அல்லாஹ் ஸக்காத்தைக் கடமையாக்கியுள்ளான். அது செல்வந்தர் களிடமிருந்து பெறப்பட்டு ஏழைகளுக்கு வழங்கப்பட வேண்டும்' எனக் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)


## நோன்பு

அல்லாஹ்வால் விதிக்கப்பட்டுள்ள நான்காவது கடமை நோன்பு ஆகும். ஒவ்வொரு முஸ்லிமும் வருடாந்தம் ரமழான் மாதம் குறிப்பிட்ட நேரம் வரை உண்ணாமலும், பருகாமலும், நோன்பை முறிக்கும் ஏனைய காரியங்களில் ஈடுபடாமலும் நன்மையை எதிர்பார்த்து அல்லாஹ்வுக்காக நோன்பு நோற்ற லாகும். நோன்பின் மூலம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன; சுவனம் செல்லும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

'யார் ரமழான் மாதத்தில் ஈமானோடும் நற்கூலியை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கின்றாரோ, அவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படும்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (புஹாரி முஸ்லிம்)

## ஹஜ்

இஸ்லாம் விதித்துள்ள கடமைகளுள் ஐந்தாவது, ஹஜ் ஆகும். வசதிவாய்ப்பும் தேகாரோக்கியமும் உள்ள ஒவ்வொரு முஸ்லிமும் தமது



வாழ்நாளில் ஒருமுறை இக்கடமையை நிறைவேற்றுவது கட்டாயமாகும். இதன் மூலம் அவரது பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டு அன்று பிறந்த குழந்தையைப் போன்று பரிசுத்தமடைகிறார்.

'ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு சுவர்க்கத்தைத் தவிர வேறு சன்மானம் இல்லை' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். *(திர்மிதி)*

இக்கடமைகள் ஒவ்வொன்றுக்குமிடையில் பரஸ்பர தொடர்புகள் காணப்படுகின்றன. அவற்றை நிறைவேற்றுவதால் தனி மனிதனுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பு வலுப்பெறுகின்றது. எனவே இஸ்லாம் கூறும் கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றி அல்லாஹ்வின் அன்பையும் திருப்பொருத்தத்தையும் பெற்றுக்கொள்வோமாக.

**பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. இஸ்லாம் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் விளக்கம் கேட்டவர் யார்?
2. தொழுகையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் ஒரு ஹதீஸைக் குறிப்பிடுக.
3. செல்வத்தைத் தூய்மையாக்கும் கடமை எது?
4. பர்ளான நோன்பு எந்த மாதத்தில் நோற்கப்படும்?
5. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு அல்லாஹ்வால் வழங்கப்படும் சன்மானம் யாது?

# 7

# அத்தஹாரத் - I

## நீரும் நஜீஸும்

'சுத்தம் ஈமானின் பகுதியாகும்' என்பது நபி மொழியாகும். இஸ்லாம் சுத்தத்தை வலியுறுத்துகின்ற மார்க்கமாகும். இஸ்லாத்தில் சுத்தம் இபாதத் களோடு பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்றது. அர்கானுல் இஸ்லாத்தில் அடங்குகின்ற இபாதத்களும், ஏனைய இபாதத்களும் ஏற்றுக்கொள்ளப் படுவதற்கான ஒரு முக்கிய நிபந்தனையாக இஸ்லாம் சுத்தத்தைக் கருதுகின்றது. அதனால் தான் சுத்தமாக இருப்போரை அல்லாஹ்வும் விரும்புகின்றான் என அல்குர்ஆன் கூறுகின்றது. அகமும் புறமும் சுத்தமாக இருப்பது 'அத்தஹாரத்' எனப்படுகிறது.

பொறாமை, வஞ்சகம், பெருமை, கபடம், அகங்காரம், முகஸ்துதி போன்ற துர்க்குணங்களிலிருந்து உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவது அகச்சுத்தம் எனப்படுகிறது. அல் குர்ஆன் ஓதுதல், திக்ர் செய்தல், தஸ்பீஹ் செய்தல், பாவ மன்னிப்புக் கோரல், ஸலவாத் கூறுதல் போன்றன உளச் சுத்தத்தை ஏற்படுத்தும் நல்லமல்களாகும்.

நஜீஸ்களிலிருந்து உடல், உடை, வாழிடம், சுற்றாடல் என்பவற்றைச் சுத்தமாக வைத்திருப்பது புறச்சுத்தம் எனப்படுகிறது. முஸ்லிம்கள் எப்போதும் சுத்தம் பேண வேண்டியது கட்டாயமாகும். புறச்சுத்தம் பேணுவதற்கு நஜீஸ் களிலிருந்து தூய்மையாகி இருப்பது அவசியமாகும். நஜீஸை அகற்றும் முறையை அடிப்படையாகக்கொண்டு அது மூன்றாகப் பிரித்து நோக்கப்படுகிறது.

1. கடுமையான நஜீஸ்
2. சாதாரண நஜீஸ்
3. இலகுவான நஜீஸ்

### கடுமையான நஜீஸ்

நாய், பன்றி என்பவற்றின் உமிழ்நீர் இதற்கான உதாரணமாகும். இந்த வகை நஜீஸை சுத்தம் செய்வதற்கு ஏழு முறை தண்ணீர் ஊற்றிக் கழுவ வேண்டும். அதில் முதலாவது முறையில் சுத்தமான மண்ணைப் பயன்படுத்த வேண்டும்.

### சாதாரண நஜீஸ்

இரத்தம், செத்த பிராணிகள், வாந்தி, மதுபானம், மலம், சலம், வாய்க்கோழை போன்றன இவ்வகையில் அடங்கும். இதனை (மாஉன் தஹூர்) பரிசுத்தமான நீரால் கழுவி சுத்தம் செய்ய வேண்டும். இதற்காகச் சலவைத் தூள் அல்லது சவர்க்காரம் போன்றவற்றையும் பயன்படுத்தலாம்.

### இலகுவான நஜீஸ்

இரண்டு வயது பூர்த்தியடையாத, தாய்ப்பாலை மட்டும் உணவாக உட்கொள்கின்ற ஆண் குழந்தையின் சிறுநீர் இதில் அடங்கும். இதனைச் சுத்தம் செய்வதற்கு நீரை அதன் மீது தெளிப்பது போதுமானது.

## நீரும் அதன் வகைகளும்

தண்ணீர் அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட அருட்கொடையாகும். மனிதன் தன்னைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு நீர் அவசியமாகும். அதன் தன்மையையும் கொள்ளளவையும் பொறுத்து நீர் மூன்று வகையாகப் பிரிக்கப் படுகின்றது.

1. மாஉன் தஹூர் (பரிசுத்தமான நீர்)
2. மாஉன் தாஹிர் (சுத்தமான நீர்)
3. மாஉன் நஜிஸ் (அசுத்தமான நீர்)

### மாஉன் தஹூர் (பரிசுத்தமான நீர்)

இவ்வகை நீர், இயல்பால் சுத்தமானதாகும். அதனால் அசுத்தங்களைச் சுத்தம் செய்வதற்கு இவ்வகை நீரே பயன்படுத்தப்பட வேண்டும். குளித்தல், வுழூச்செய்தல், நஜீஸ்களைத் துப்பரவு செய்தல் போன்ற தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும். கடல் நீர், மழை நீர், குளத்து நீர், ஆற்று நீர், ஊற்று நீர், கிணற்று நீர் போன்றன இவ்வகை நீருக்கான உதாரணங்களாகும்.

### மாஉன் தாஹிர் (சுத்தமான நீர்)

இவ்வகை நீர் சுத்தமானதாக இருந்தாலும் சுத்தப்படுத்தும் தன்மையற்றதாகக் காணப்படும். இவை பருகுவதற்கும் சமைப்பதற்கும் மட்டும் பயன்படும். தேநீர், கோப்பி, இளநீர், பன்னீர், குளிர்பானம் போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

### மாஉன் நஜிஸ் (அசுத்தமான நீர்)

210 லீற்றரை விடக் குறைவான நீரில், நஜீஸான பொருட்கள் கலப்பதன் மூலம் நிறம், சுவை, மணம் என்பன மாற்றமடைந்தால் அந்நீர் இவ்வகையில் அடங்குகின்றது. இதனை முன்னர் குறிப்பிட்டது போன்ற எவ்விதத் தேவைகளுக்கும் பயன்படுத்தக்கூடாது. சாக்கடை நீர், சிறுநீர் போன்றன இதற்கான உதாரணங்களாகும்.

**பயிற்சி**

1. நஜீஸின் வகைகளை உதாரணங்களுடன் தருக.
2. பின்வரும் நீர்வகை எவ்வகையைச் சார்ந்தவை என இனங்கண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துக.

   (மழை நீர், மதுபானம், குளத்து நீர், கோப்பி, ஆற்று நீர், பன்னீர், கள் (பதநீர்), இளநீர், கடல் நீர், சாக்கடை நீர், தேநீர்)

| பரிசுத்தமான நீர் | சுத்தமான நீர் | அசுத்தமான நீர் |
|---|---|---|
| | | |

3. சுத்தம் பேணுவதன் அவசியம் யாது?

4. உள்ளத்தை சுத்தப்படுத்தும் விதம் யாது?

5. புறச் சுத்தம் பேணுவதற்குப் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு யாது?

6. பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| நஜீஸ்கள் | சுத்தம் செய்யும் முறை |
|---|---|
| 1. நாய் நக்கிய பாத்திரம் | |
| 2. இரண்டு வயது பூர்த்தியாகாத தாய்ப் பால் மட்டும் குடிக்கும் ஆண் குழந்தையின் சிறுநீர் பட்ட ஆடை | |
| 3. இரத்தம் தோய்ந்த ஆடை | |
| 4. மலம், சலம் பட்ட ஆடை | |
| 5. மதுபானம் கொட்டப்பட்டுள்ள தரை | |

# 8

# அத்தஹாரத் - II

## வுழூ

சுத்தம் செய்வதற்கு குளித்தல், வுழூச் செய்தல் போன்ற நடைமுறைகளை இஸ்லாம் அறிமுகம் செய்துள்ளது. தொழுதல், தவாப் செய்தல் போன்ற இபாதத்துகளை நிறைவேற்றுவதற்கு வுழூ இன்றியமையாததாகின்றது. வுழூச் செய்வதால் உறுப்புக்கள் கழுவப் படுகின்றன. வுழூ செய்யும்போது நனைந்த உறுப்புக்கள் மறுமைநாளில் பிரகாசமளிக்கும் என ஹதீஸ்கள் கூறுகின்றன. இப்பிரகாசம் கொண்டோர் மறுமையில் 'குர்ரன் முஹஜ்ஜலீன்' என அடையாளப்படுத்தப்படுவர். எனவே அழகாகவும், நேர்த்தியாகவும் வுழூச் செய்து நன்மைகளை அதிகரித்துக் கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

வுழூவை நேர்த்தியாகச் செய்து கொள்வதற்கு பர்ளு, சுன்னத்துகள், என்பவற்றைப் பேணி வுழூச் செய்வது அவசியமாகும்.


## வுழூவின் பர்ளுகள்

1. வுழூச்செய்ய ஆரம்பிக்கும்போது 'வுழூவை நிறைவேற்றுகின்றேன்' என எண்ணம் (நிய்யத்) கொள்ளல்.
2. முகத்தை முழுமையாகக் கழுவுதல். (உயரத்தால் முன் நெற்றி முதல் நாடிக்குழி வரையும் அகலத்தால் இரு காதுகளுக்கிடையிலும் முழுமையாகக் கழுவப்படல் வேண்டும்).
3. இரண்டு கைகளையும் முழங்கை உட்படக் கழுவுதல்.
4. தலையை மஸ்ஹு செய்தல்.

5. இரு கால்களையும் கரண்டைக்கால் உட்படக் கழுவுதல்.

6. மேலே கூறப்பட்ட ஒழுங்கைப் பேணிச் செய்தல்.

வுழூவை நிறைவேற்றுகின்ற போது பர்ளுகளுடன் ஸுன்னத்துக்களையும் பேணிக்கொள்ள வேண்டும்.



## வுழூவின் ஸுன்னத்துக்கள்

1. வுழூச்செய்யும்போது கிப்லாவை முன்னோக்குதல்.
2. வுழூச்செய்ய ஆரம்பிக்கும் போது பிஸ்மி கூறுதல்.
3. இரு முன்னங் கைகளையும் மணிக்கட்டு வரைக் கழுவுதல்.
4. பற்களைத் துலக்குதல். (மிஸ்வாக் செய்தல்)
5. வாய் கொப்பளித்தலும் நாசிக்கு நீர் செலுத்துதலும்.

6. வலது பக்க உறுப்புக்களை முற்படுத்தல்.

7. தலை முழுவதையும் மஸ்ஹு செய்தல்.

8. இரு காதுகளையும் மஸ்ஹு செய்தல்.

9. ஒவ்வொன்றையும் மும்மூன்று முறை செய்தல்.

10. வுழூவின் துஆவை ஓதுதல்.

### வுழூவின் துஆ

கீழுள்ளவாறு இரண்டாம் கலிமா ஓதிய பின்னர் தொடர்ந்து அதன் கீழுள்ள துஆவை ஓதுதல்,

أَشْهَدُ أَنْ لاَإِلٰهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَ أَشْهَدُ أَنَّ مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ

اَللّٰهُمَّ اجْعَلْنِيْ مِنَ التَّوَّابِيْنَ وَاجْعَلْنِيْ
مِنَ الْمُتَطَهِّرِيْنَ وَاجْعَلْنِيْ مِنْ عِبَادِكَ الصَّالِحِيْنَ

'வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் அவன் தனித்தவன் இணையற்றவன் என்றும் சாட்சி பகர்கின்றேன். மேலும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனின் அடியாரும் ரஸூலுமாவார் என்றும் சாட்சி பகர்கிறேன்.

இறைவா! என்னைப் பாவமீட்சி தேடுபவர்களுள் ஒருவராகவும் தூய்மையானவர்களுள் ஒருவராகவும் நல்லடியார்களுள் ஒருவராகவும் ஆக்குவாயாக'.

வுழூவை முறிக்கும் காரியங்கள் முப்திலாத் எனப்படுகின்றன. அவற்றில் ஏதாவது ஒன்று இடம்பெற்றுவிட்டால் வுழூ முறிந்து விடும்.

**வுழூவை முறிக்கும் காரியங்கள் (முப்திலாத்)**

1. முன் பின் துவாரங்களிலிருந்து ஏதாவது வெளிவருதல்.
2. புத்தி நீங்குதல். (மயக்கம், தூக்கம், போதை என்பவற்றால்)
3. அஜ்னபியான ஆண் பெண்கள் திரையின்றி இச்சையுடன் தொடுதல்
4. எவ்விதத் திரையுமின்றி அபத்தைத் தொடுதல்.

மேலே கூறப்பட்ட வுழூவின் பர்ளுகள், சுன்னத்துக்கள் என்பவற்றைப் பேணி முப்திலாத்களிலிருந்து தவிர்ந்து வுழூவை முறையாகப் பேணுவோம்.

**பயிற்சி**

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. வுழூவின் பர்ளுகள் (ஆறு / மூன்று / நான்கு) ஆகும்.
2. இரு காதுகளையும் மஸ்ஹு செய்தல் வுழூவின் (பர்ளு / ஸுன்னத் / முப்திலாத்) ஆகும்.
3. இரு கால்களையும் கரண்டை உட்படக் கழுவுதல், வுழூவின் (பர்ளு / ஸுன்னத் / முப்திலாத்) களில் ஒன்றாகும்.
4. வுழூவை முறிக்கும் காரியங்களில் ( பற்களைத் துலக்குதல் / மயக்கம் ஏற்படல் / உணவுண்ணல்) ஒன்றாகும்.
5. வுழூச்செய்யும் போது ஒவ்வொரு உறுப்பையும் ( ஒவ்வொரு / இவ்விரண்டு / மும்மூன்று) முறை கழுவுவது ஸுன்னத்தாகும்.

**செயற்பாடு**

வுழூச் செய்ததும் ஓத வேண்டிய துஆவை அறபியில் எழுதுக. அதனை மனனமிட்டு ஓதிக் காட்டுக.

# 9

# தொழுகை - 1

இஸ்லாம் வலியுறுத்தும் ஐம்பெரும் கடமைகளுள் தொழுகை பிரதானமானதாகும். அது இளையவர் முதியவர், பலசாலி பலவீனர், நோயாளி, ஆண் பெண் வேறுபாடுகள் ஏதுமின்றி முஃமின்கள் எல்லோர் மீதும் விதியாக்கப்பட்டுள்ள கட்டாய கடமையாகும்.

கலிமாவை மொழிந்து அல்லாஹ்வை இரட்சகனாகவும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தூதராகவும் ஏற்றுக் கொண்டவர்கள் தொழுகையைத் தவறாமல் தொடர்ந்து நிறைவேற்றி வர வேண்டும். அப்போதுதான், அவரது இறை விசுவாசம் செயல் வடிவில் உறுதிசெய்யப்படுகிறது. அவ்வாறன்றி, ஒருவர் அதனை நிறைவேற்றாது அலட்சியம் செய்யும் போது அவருக்கும் இறை நிராகரிப்பாளர்களுக்கும் இடையிலான வேறுபாடு இல்லாது போகின்றது என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள்.



ஒரு பிள்ளை ஏழு வயதானதும் பெற்றோர் அப்பிள்ளையைத் தொழுவதற்குப் பழக்க வேண்டும். பத்து வயதானதும் அதனைத் தவறாது நிறைவேற்றி வர வேண்டும். அதன் பிறகு எச்சந்தர்ப்பத்திலும் தொழுகையை விட்டுவிடமுடியாது. எனவேதான், பிரயாணத்தின்போது சுருக்கியும் சேர்த்தும் தொழுது கொள்ளவும், நோயாளியாக இருந்தால் உட்கார்ந்த நிலையிலோ, சாய்ந்த நிலையிலோ இயலுமான வகையில் தொழுதுகொள் ளவும் சலுகை வழங்கப்பட்டுள்ளது. நீரைப் பயன்படுத்த முடியாதபோது தயம்மும் செய்து தொழவும் இஸ்லாம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது. ஆதலால், வரையறுக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் தவிர, தொழுகையில் எவருக்கும் சலுகை வழங்கப்படவில்லை. அது முஃமின்கள் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமையாகும்.

இனி, தொழுகையின் அவசியம், அதனை நிறைவேற்றுவதால் கிடைக்கப் பெறும் பயன்கள், அலட்சியம் செய்தல் அல்லது விட்டுவிடுவதால் வழங்கப் படும் தண்டனைகள் பற்றிய அல் குர்ஆன் அல்ஹதீஸ் அறிவுறுத்தல்கள் சிலவற்றை அவதானிப்போம்.

*‘நிச்சயமாக நான்தான் அல்லாஹ்; என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. ஆகவே, என்னையே நீர் வணங்கும். என்னை தியானித்துக் கொண்டிருக்கும் வண்ணம் தொழுகையை நிலைநிறுத்துவீராக’ (20:14)*

*‘உங்கள் குழந்தைகள் ஏழு வயதை அடைந்துவிட்டால் அவர்களைத் தொழும்படி ஏவுங்கள். பத்து வயதை அடைந்தும் தொழாமலிருந்தால் அவர்களை அடித்தாவது தொழச் செய்யுங்கள்’* என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். *(அஹ்மத், அபூதாவூத்)*

மேற்கூறப்பட்ட அல்குர்ஆன் வசனமும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொன்மொழியும் தொடராகவும் ஒழுங்காகவும் தொழுகை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன.

அதேபோல், *‘உங்களை ஸகர் எனும் நரகத்தில் நுழையச் செய்தது எது?’ (என சுவர்க்கத்திலிருந்துகொண்டு கேட்பார்கள்). அதற்கவர்கள், ‘நாங்கள் தொழுபவர்களாக இருக்கவில்லை எனக் கூறுவார்கள்’* என அல் குர்ஆன் குறிப்பிடுகின்றது. *(74:42,43)*

மேலும், *‘யார் தொழுகையைப் பேணிக் கொள்கிறாரோ அவருக்கு அத்தொழுகை பிரகாசமாகவும், அத்தாட்சியாகவும், மறுமை நாளில்*



ஈடேற்றமாகவும் ஆகிவிடும். மேலும், எவன் அதைப் பேணிக் கொள்ளவில்லையோ அவனுக்கு அத்தொழுகை பிரகாசமாகவோ, சாட்சியாகவோ, ஈடேற்றமாகவோ இருக்காது. மாறாக, அவன் மறுமை நாளில் காறூன், பிர்அவ்ன், ஹாமான், உபை பின் கலப் போன்றோருடன் இருப்பான்’. என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (அஹ்மத்)

மேற்கூறப்பட்ட அல்குர்ஆன் வசனங்களும், நபிமொழிகளும் தொழுகையை விடுவதன் மூலம் ஏற்படும் விபரீதங்களை எடுத்துக் காட்டுகின்றன.

எனவேதான், நாம் தொழுகையில் எக்காரணம் கொண்டும் அசட்டை செய்துவிடலாகாது. அத்துடன் கடமையான தொழுகைகளை எப்போதும் ஜமாஅத்துடன் (கூட்டாக) நிறைவேற்றப் பழகிக் கொள்ளவேண்டும். ஏனெனில், ‘கூட்டாகத் தொழுவது தனியாகத் தொழுவதைவிடவும் இருபத்தேழு (27) மடங்கு நன்மைகளை அதிகரிக்கின்றது’ என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி, முஸ்லிம், திர்மிதி)

தொழுகையின் மூலம் நாம் அல்லாஹ்வுக்கு அடிபணிகிறோம். அவனை நெருங்குகிறோம். அவனுக்கு வழிபடும் பயிற்சியைப் பெற்றுக் கொள்கிறோம். அத்தோடு எமது தேவைகளை அவனிடம் முறையிடவும்,

எமது பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்கவும் தொழுகை வாய்ப்பாக அமைகிறது. மேலும், தொழுகை மூலம் நாம் அல்லாஹ்வை நினைவுபடுத்து கிறோம். அல்லாஹ்வின் அருட் கொடைகளுக்காக நன்றி செலுத்துகிறோம்.

தொழுவதற்காக ஐந்து நேரம் வுழூச் செய்கிறோம். இதன் மூலம் எமது உடலின் வெளி உறுப்புக்கள் சுத்தமடைகின்றன. அத்தோடு உள்ளமும் தூய்மையடைகிறது. இதனால், உடல் உள ஆரோக்கியம் கிடைப்பதுடன் பாவங்களும் களையப்படுகின்றன.

**ஆகவே, சுவர்க்கத்தின் திறவுகோல் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் சிறப்பித்துக் கூறப்பட்ட தொழுகையை நாம் உரிய நேரத்தில் குறைவில்லாமலும், தொடராகவும் நேர்த்தியாகவும் நிறைவேற்றுவோம். அதன் மூலம் அல்லாஹ்வின் நெருக்கத்தையும் அன்பையும் இம்மையிலும் மறுமையிலும் பெற்றுக்கொள்வோம்.**

***பயிற்சி***

*(அ) அடைப்புக்குறிக்குள் இருப்பவற்றில் மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.*

*1. ஒரு முஸ்லிம் தொழுகையை ஆரம்பிக்க வேண்டிய ஆகக் குறைந்த வயது (பதினைந்து, ஏழு, பத்து) ஆகும்.*

*2. ஒரு முஸ்லிமை இறை நிராகரிப்பிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் அடையாளமாக (திக்று, தொழுகை, நோன்பு) விளங்குகிறது.*

*3. தொழுகையை நாம் தினமும் (மூன்று வேளை, பதினேழு வேளை, ஐந்து வேளை) கட்டாயம் நிறைவேற்ற வேண்டும்.*

*4. அல்லாஹ்வுடன் மிக நெருக்கமாக உரையாடும் சந்தர்ப்பம் (தர்மத்தில், தொழுகையில், அதானில்) கிடைக்கும்.*

*5. சுவர்க்கத்தின் திறவுகோல் என வர்ணிக்கப்படும் வணக்கம் (ஹஜ், நேர்ச்சை, தொழுகை)ஆகும்.*

*(ஆ) தொழுகை பற்றிய அல் குர்ஆன் வசனம் ஒன்றையும் ஹதீஸ் ஒன்றையும் எழுதுக.*

# 10

# தொழுகை - 2

தொழுகை ஒரு கட்டாயக் கடமை என்பதை அறிந்து கொண்டோம். நாம் நாளாந்தம் நிறைவேற்றும் தொழுகை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு தொழுகைக்குரிய ஷர்த், பர்ளு என்பன சரியாகக் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். அத்தோடு தொழுகையைப் பாழாக்கி விடக்கூடிய முப்திலாத்கள் பற்றியும் நாம் அறிந்து அவற்றைத் தவிர்ந்துகொள்ள வேண்டும். இவ்வொழுங்குகள் பேணப்படாது நிறைவேற்றப்படும் தொழுகையில் எப்பயனும் கிட்டாது என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்.

## தொழுகையின் ஷர்த்துக்கள்

ஷர்த்துக்கள் என்பதன் தமிழ் கருத்து 'நிபந்தனைகள்' என்பதாகும். தொழுகையை நிறைவேற்றுவதற்கும் அவை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் இந்த நிபந்தனைகள் அனைத்தும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். அவற்றில் ஏதாவது ஒன்று தவறினாலும் தொழுகை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அவை பின்வருமாறு

1. முஸ்லிமாக இருத்தல்
2. தம்யீஸ் எனும் பிரித்து விளங்கிக் கொள்ளும் நிலையிலிருத்தல்
3. சுத்தமாயிருத்தல் (குளிப்புக் கடமையானவர்கள் குளித்திருத்தலும் வுழூ இல்லாதவர்கள் வுழூ செய்திருத்தலும் வேண்டும்)
4. உடல், அணிந்திருக்கும் உடை மற்றும் தொழும் இடம் ஆகியன நஜீஸ் இல்லாது சுத்தமாக இருத்தல்
5. அவ்ரத்தை (மறைக்கப்பட வேண்டிய பகுதிகளை) மறைத்திருத்தல்
6. கிப்லாவை முன்னோக்குதல்
7. தொழுகை தன் மீது கடமை என்பதனை உணர்ந்தவராயிருத்தல்

8. தொழுகையின் நேரத்தை அடைந்திருத்தல்

9. தொழும் முறையை அறிந்திருத்தல்

10. பர்ழை பர்ழ் எனவும் ஸுன்னத்தை ஸுன்னத் எனவும் அறிந்திருத்தல்

அடுத்து தொழுகையின் பர்ளுகள் எத்தனை, அவை எவை என்பதை அறிந்துகொள்வோம்.

**தொழுகையின் பர்ளுகள் - 19**

1. அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன் என மனதில் உறுதியாக நினைத்தல் (நிய்யத்)
2. நின்று தொழ சக்தி பெற்றவர்கள் நின்று தொழுதல்
3. அல்லாஹு அக்பர் என்று ஆரம்பத் தக்பீர் (தஹ்ரீமா) சொல்லல்
4. பிஸ்மிலுடன் ஸூறதுல் பாத்திஹாவை ஓதுதல்
5. றுகூஉ செய்தல்
6. அதில் தாமதித்தல்
7. இஃதிதாலுக்கு வருதல்
8. அதில் தாமதித்தல்
9. முதலாம் ஸுஜூது செய்தல்
10. அதில் தாமதித்தல்
11. நடு இருப்புக்கு வருதல்
12. அதில் தாமதித்தல்
13. இரண்டாம் ஸுஜூது செய்தல்
14. அதில் தாமதித்தல்
15. கடைசி அத்தஹிய்யாத்துக்காக உட்கார்தல்
16. அதில் அத்தஹிய்யாத் ஓதுதல்
17. அத்தஹிய்யாத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்து கூறல்
18. முதல் ஸலாம் கூறுதல்
19. மேற்கூறியவற்றை ஒழுங்குமுறைப்படி செய்தல்

தொழுகையின் முழுமையான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தொழுகைக்குரிய ஸுன்னத்துக்களையும் கடைப்பிடிக்க வேண்டும்.

தொழுகையின் ஸுன்னத்துக்கள் சொல் சார்ந்தவை, செயல் சார்ந்தவை என இரு வகைப்படுகின்றன.

**சொல் சார்ந்த ஸுன்னத்துக்களாவன:**

1. துஆஉல் இஸ்திப்தாஹ் ஓதுதல் (வஜ்ஜஹ்து)
2. ஸூறாக்கள் ஓதும் போது இஸ்திஆதா (அஊது பில்லாஹி) கூறுதல்
3. ஸூறதுல் பாதிஹாவின் முடிவில் ஆமீன் கூறுதல்
4. முதல் இரண்டு ரக்அத்துகளிலும் ஸூறதுல் பாத்திஹாவின் பின் வேறொரு ஸூறாவை அல்லது சில வசனங்களை ஓதல்
5. றுகூஉவில் **ஸுப்ஹான றப்பியல் அழீம் வபிஹம்திஹி** எனும் தஸ்பீஹினை ஓதுதல்
6. இஃதிதாலில் அல்லாஹ்வைப் புகழ்தல்
7. ஸுப்ஹுத் தொழுகையில் இரண்டாவது ரக்அத்தில் இஃதிதாலில் குனூத் ஓதுதல்.
8. ஸுஜூதில் **ஸுப்ஹான றப்பியல் அஃலா வபிஹம்திஹி** எனும் தஸ்பீஹினை ஓதுதல்
9. ஸுஜூதுக்கு இடையிலான நடு இருப்பில் **றப்பிஃபிர்லீ** என ஆரம்பிக்கும் துஆவை ஓதுதல்.
10. இரண்டுக்கு மேற்பட்ட ரக்அத்துக்களைக் கொண்ட தொழுகைகளில் இரண்டாவது ரக்அத்தில் சிறிய அத்தஹிய்யாத்துடன் ஸலவாத் ஓதுதல்.
11. கடைசி அத்தஹிய்யாத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தார் மீது ஸலவாத் சொல்லல்
12. இரண்டாம் ஸலாம் கூறுதல்

### செயல் சார்ந்த ஸுன்னத்துக்களாவன

1. ஆரம்பத் தக்பீரின் போதும், றுகூஉவிற்கு செல்லும் போதும், நிலைக்கு வரும் போதும், முதலாம் அத்தஹிய்யாத்திலிருந்து நிலைக்கு வரும் போதும் கைகளை உயர்த்துதல்.

2. நிலையில் இடது கைமீது வலது கையை வைத்து (உயர்த்திக்) கட்டிக் கொள்ளல்

3. ஸஜதாவுக்குரிய இடத்தை நோக்கிப் பார்வையை வைத்துக் கொள்ளல்

4. நிலையில் நிற்கும் பொழுது இரு கால்களுக்குமிடையில் போதிய இடைவெளியைப் பேணிக் கொள்ளல்

5. றுகூஉவில் கைவிரல்களைப் பிரித்தவாறு உள்ளங்கையால் முழங்கால் களைப் பிடித்தவாறு முதுகையும் தலையையும் சமநிலையிலிருக்குமாறு வளைந்து நிற்றல்

6. ஸுஜூதுடைய உறுப்புக்கள் அனைத்தும் நிலத்தில் நேரடியாக படுமாறு வைத்தல்

7. ஸுஜூதில் ஆண்கள் கைகளிரண்டும் விலாக்களுடனும், வயிறு தொடை களுடனும் படாதவாறு இடைவெளி விட்டவாறு இருத்தல். மேலும், பாதங்களிரண்டும் இணைந்தவாறு விரல்களின் நுனிப்பாகங்கள் கிப்லாவின் பக்கமுமாக உட்பாகம் நிலத்த்தைத் தொட்டவாறும் இருத்தல் வேண்டும்.

8. இரு ஸுஜூதுகளுக்கிடையிலும் முதல் அத்தஹிய்யாத்திலும் ‘இப்திறாஷ்’ எனும் இருப்பும், கடைசி அத்தஹிய்யாத்தில் ‘தவர்ருக்’ எனும் இருப்பும் இருத்தல்.

9. இருப்புக்களின் போது கைகளை விரித்து விரல்களை இணைத்து வைத்தல். அத்தஹிய்யாத்தின் போது வலது கையின் விரல்களை மடித்து சுட்டுவிரலை நிமிர்த்தி வைத்தல்.

10. முதலாம் ஸலாம் கூறும்போது வலது பக்கமும் இரண்டாம் ஸலாம் கூறும்போது இடது பக்கமும் முகத்தைத் திருப்புதல்.

*மேற்சொன்ன விடயங்களைப் பேணித் தொழுகையை நிறைவேற்றும் போது சில காரியங்கள் கட்டாயம் தவிர்க்கப்படல் வேண்டும். ஏனெனில் அவற்றில் ஏதாவதொன்று நிகழ்ந்து விடுமாயின் தொழுகை செல்லுபடியற்றதாகி விடும். அவை 'முப்திலாத்' (தொழுகையை முறிப்பவை) எனப்படும்.*

### முப்திலாத் (தொழுகையை முறிப்பவை)

1. *தொழுது கொண்டிருக்கும் போது தொழுகையை விட்டு விடுவோமா என நினைத்தல்*
2. *தொழுகையில் இல்லாத ஒரு செயலைத் தொடராக மூன்று முறை செய்தல்*
3. *அல்குர்ஆன், துஆ அல்லாத தொழுகையுடன் தொடர்பற்ற வேறொன்றை மொழிதல்*
4. *வேண்டுமென்றே கனைத்தல், பேசுதல்*
5. *சத்தமிட்டுச் சிரித்தல், வேண்டுமென்று அழுதல்*
6. *நோன்பை முறிக்கும் ஏதாவது செயலைச் செய்தல்*
7. *கிப்லாவை விட்டும் நெஞ்சை வேறு பக்கமாக திருப்புதல்*
8. *செயல்முறையான ஒரு பர்ழை வேண்டுமென்று அதிகமாகச் செய்தல்*
9. *அவ்ரத் வெளிப்படும் போது அலட்சியமாய் இருத்தல்*
10. *ஒரு பர்ழை அல்லது ஷர்த்தை வேண்டுமென்று விட்டுவிடுதல்*

***ஆகவே, தொழுகையின் ஷர்த்துகளையும், பர்ழுகளையும் பேணி, ஸுன்னத்துகளுக்கும் முக்கியத்துவமளித்து முப்திலாத்களைத் தவிர்த்து சரிவர தொழுகையினை நிறைவேற்றுவோமாக. அல்லாஹ் நமது தொழுகையினைப் பூரணமாக்கி நற்கூலி தருவானாக.***

**பயிற்சி**

*பின்வருவன தொழுகையின் ஷர்த், பர்ழ், ஸுன்னத், முப்திலாத் ஆகியவற்றுள் எதனைச் சார்ந்தது எனக் கண்டறிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.*

1. முஸ்லிமாக இருத்தல் (................................)
2. ஸூரத்துல் பாத்திஹா ஓதுதல் (................................)
3. வுழூ செய்திருத்தல் (................................)
4. கடைசி அத்தஹிய்யாத் ஓதுதல் (................................)
5. தொழும்போது சாப்பிடுதல் (................................)
6. அவ்ரத்தை மறைத்தல் (................................)
7. ஸுஜூது செய்தல் (................................)
8. ஸலாம் கூறும்போது வலது பக்கமும் இடது பக்கமும் முகத்தைத் திருப்புதல் (................................)
9. ஒரு பர்ழான செயலை வேண்டுமென்றே விட்டுவிடுதல் (................................)
10. தொழும் நேரத்தை அறிந்திருத்தல் (................................)
11. அல்லாஹு அக்பர் என ஆரம்பத் தக்பீர் கூறுதல் (................................)
12. ஸூரத்துல் பாத்திஹாவின் பின் ஆமீன் கூறுதல். (................................)

# 11

# நோன்பு நோற்போம்

*'விசுவாசிகளே நீங்கள் இறையச்சம் உடையோராக மாறவேண்டும் என்பதற்காக உங்கள் முன்னோர் மீது நோன்பு விதியாக்கப்பட்டது போன்றே உங்கள் மீதும் அது விதியாக்கப்பட்டுள்ளது' (2:183)*

மேற்கூறப்பட்ட அல்குர்ஆன் வசனம், நோன்பு இஸ்லாத்தின் பிரதான கடமைகளுள் ஒன்று என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. இஸ்லாமிய வருடத்தின் ஒன்பதாவது மாதமான றமழான் மாதத்திலேயே பர்ழான நோன்பினை முஸ்லிம்கள் நோற்க வேண்டும். இம்மாதத்தில் நோன்பாளியான ஒவ்வொரு முஸ்லிமும் கிழக்கு வெளுத்ததில் இருந்து சூரியன் மறையும் வரை உண்ணாமலும், பருகாமலும், நோன்பை முறிக்கக் கூடிய ஏனைய விடயங்களில் ஈடுபடாமலும் தம்மைக் கட்டுப்படுத்தி நோன்பை நிறைவேற்ற வேண்டும்.

### நோன்பின் பர்ழுகள் இரண்டாகும்

1. 'அல்லாஹ்வுக்காக நோன்பு நோற்கிறேன்' என்ற எண்ணத்தை (நிய்யத்) மனதில் உறுதிப்படுத்தல்.
2. ஸஹர் முடிவிலிருந்து நோன்பு துறக்கும் நேரம் வரை, நோன்பை முறிக்கும் எந்தக் காரியத்திலும் ஈடுபடாமலிருத்தல்.

பருவ வயதை அடைந்த ஆரோக்கியமான முஸ்லிம்கள் அனைவரும் நோன்பு நோற்பது கடமையாகும். அதேபோல், நியாயமான காரணமின்றி நோன்பை விடுவதும் குற்றமாகும்.

நோன்பின் பிரதான இலக்கு இறையச்சத்தைப் பலப்படுத்துதல் என்ற போதிலும், அதன் மூலம் உடல் ஆரோக்கியம் பெறல், உள்ளம் பண்படுத்தப்படல், பொறுமை, கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ளல், சிக்கனம்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக



பேணல், மற்றவர்களின் துன்பங்கள் மற்றும் ஏழைகளின் பசித்துயரை உணர்தல், ஸதகாக்கள் செய்தல் போன்ற நற்பண்புகளும் வளர்க்கப்படுகின்றன. அவை மட்டுமல்லாது, ஒரு முஸ்லிம், நோன்பு நேரங்களில் ஆகுமானவற்றைத் தவிர்ப்பதற்கு பழகிக் கொள்வதால் ஹறாமானவற்றை முழுவாழ்விலும் தவிர்த்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை அடைந்துகொள்ளும் பயிற்சியைப் பெற்றுக்கொள்கின்றான். இம்மாதத்தில் துஆக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன; சுவர்க்கம் அலங்கரிக்கப்படுகின்றது; நரகம் மூடப்படுகிறது. குழப்பமேற் படுத்தும் ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றனர்.

எனவே, நல்லமல்கள் செய்து நன்மைகளைத் திரட்டிக் கொள்ள முயல வேண்டும். எமக்காகவும் எமது சமூகத்துக்காகவும் நாட்டின் நன்மைக்காகவும் அல்லாஹ்விடம் துஆக் கேட்க வேண்டும். ஸஹர் நேரத்தில் தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றல், நோன்பு துறக்கும்போது முடிந்தவரை நோன்பாளிகளான நண்பர்கள், சுற்றத்தார், அயலவர்களை எம்முடன் இணைத்துக் கொள்ளல் என்பன சிறப்பானதாகும். அத்துடன் அதிகமதிகம் தர்மம் செய்வதில் ஈடுபடவேண்டும். ஏனெனில், இம்மாதத்தில் வேகமாக வீசும் காற்றைப் போன்று விரைந்து விரைந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸதகா செய்வார்கள் என்பதை இஸ்லாம் நமக்கு எடுத் தியம்புகின்றது.

ரமழான் மாதத்தில் 'லைலதுல் கத்ர்' என்ற ஓர் இரவு இருக்கின்றது. அது ஆயிரம் மாதங்களை விடச் சிறப்பானது. அந்த இரவில்தான் அல்குர்ஆன் இறக்கி வைக்கப்பட்டது. எனவே, இம்மாதத்தில் நாம் அல்குர்ஆனை அதிகமாக ஓதி, அதன் வழிகாட்டல்களை அறிந்து பயன் பெற முயற்சிக்க வேண்டும்.

இம்மாதத்தில் பாவச் செயல்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். வீண் வார்த்தைகள் பேசி, சண்டையிட்டு எமது நோன்பின் பெறுமதியைக் குறைத்துக் கொள்ளக் கூடாது. யாராவது ஏசினால், அல்லது சண்டைக்குத் தூண்டினால், நான் நோன்பாளி என்று கூறி ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என இஸ்லாம் அறிவுறுத்துகின்றது.

'நோன்பாளிகளில் யார் கெட்ட வார்த்தைகளையும், அதனைத் தழுவிய செயல்களையும் விட்டுவிடவில்லையோ அவ்வாறானவர் பசித்திருப்பதிலும் தாகித்திருப்பதிலும் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையுமில்லை'. என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (புஹாரி)

'நோன்பு ஒரு கேடயம்' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டதற்கிணங்க, பாவமான செயல்களில் ஈடுபடாமல் இருக்கவும், ஷைத்தானின் தூண்டுதலால் ஏற்படும் தீங்குகளிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் இக்கேடயம் துணை செய்கின்றது. இவ்வாறு, இம்மையிலும் மறுமையிலும் அதிக பயன் தருகின்ற பர்ழான நோன்பை நோற்பதுடன் ஸுன்னத்தான நோன்புகளையும் நோற்பது சிறப்பானதாகும். ஏனெனில், நமது பர்ழான நோன்புகளில் ஏற்படும் குறைபாடுகள் அவற்றின் மூலம் நிவர்த்திக்கப்படுவதுடன் அல்லாஹ்வுடனான எமது நெருக்கமும் அதிகரிக்கின்றது.

**பயிற்சி**

சுருக்கமான விடை தருக.

1. நோன்பின் பர்ளுகள் எத்தனை? அவை எவை?
2. நோன்பின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடும் அல் குர்ஆன் வசனமொன்றைத் தருக.
3. நோன்பின் பிரதான நோக்கத்தினைக் குறிப்பிடுக.
4. நோன்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஒரு ஹதீஸை குறிப்பிடுக.
5. ரமழானில் உள்ள விசேட இரவு யாது? அதன் சிறப்பு என்ன?

# 12

# பெற்றோரைப் பராமரிப்போம்

رَبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيرًا

*என் இறைவனே! நான் குழந்தையாக இருந்தபொழுது என்னை அவர்கள் வளர்த்துப் பாதுகாத்தவாறே நீயும் அவ்விருவர் மீதும் அன்பும், அருளும் புரிவாயாக. (17:24)*



கீழ்வரும் ஹதீஸ் கூறும் சம்பவத்தை நோக்குவோம்.

'முன்னொரு காலத்தில் மூன்று மனிதர்கள் நீண்டதொரு பயணம் சென்றனர். இடையில் காற்றுடன் கூடிய மழையில் அகப்பட்டுக் கொண்டபோது மலையடிவாரத்திலிருந்த குகையொன்றினுள் அவர்கள் ஒதுங்கினர். அவ்வேளை பெரியதொரு பாராங்கல் உருண்டு வந்து அக்குகையின் வாயிலை அடைத்துக் கொண்டது. அக்கல்லை குகை வாசலை விட்டும் நகர்த்த முடியாது என்பதைக் கண்டு திகைத்தனர். இக்கஷ்டத்திலிருந்து விடுபட அல்லாஹ்விடம் பிரார்த்திக்க முடிவெடுத்தனர். மூவரும் தாம் செய்த நல்ல அமல்களில் சிறப்பானதொன்றை முன்வைத்து அல்லாஹ்விடம் கையேந்தினர். முதலிருவரும் பிரார்த்தித்ததன் பின்னர் அவர்களில் மூன்றாமவர்,

'அல்லாஹ்வே! எனக்கு வயது முதிர்ந்த தந்தையும் தாயும் இருக்கின்றனர். ஒவ்வொரு நாள் இரவும் அவர்களுக்கு நான் பால் கொண்டுவந்து

கொடுப்பேன். அதற்குப் பின்னர்தான் என் பிள்ளைகளுக்குக் கொடுப்பேன். ஒரு நாள் நான் வரத் தாமதமாகிவிட்டது. நான் வரும்போது அவர்களிருவரும் தூங்கிவிட்டனர். அவர்களைத் தூக்கத்திலிருந்து எழுப்ப நான் விரும்பவில்லை. என்றாலும், அவர்கள் பருகுவதற்கு முன்னர் பாலை என் பிள்ளைகளுக்குக் கொடுக்க விரும்பவுமில்லை. அவர்கள் கண்விழிக்கும் வரை தூங்காமல் காத் திருக்க முடிவெடுத்தேன். எனது பிள்ளைகளோ பசியினால் அழுதனர். அவர்களின் அழுகுரல் கேட்டு எனது தந்தையும் தாயும் விழித்தனர். பின்னர் நான் கொண்டுவந்த பாலை அருந்தினர். 'யா அல்லாஹ்! இதனை நான் உன் திருப்பொருத்தத்தை நாடியே செய்தேன். ஆகவே, இக்கல்லை நீக்கி எமக்கு வெளியேற வழியேற்படுத்தித் தருவாயாக!' எனப் பிரார்த்தித்தார். அக்கல் குகை வாசலிலிருந்து விலகியது. அப்போது குகையிலிருந்து அவர்கள் மூவரும் வெளியேறினர்.' (புஹாரி, முஸ்லிம்)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களுக்குச் சொன்ன இந்தச் சம்பவம், பெற்றோருக்குச் செய்த உபகாரத்தின் பயனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. தன் பிள்ளைகளை விடப் பெற்றோருக்கு முன்னுரிமை அளித்த அந்த மனிதரின் பிரார்த்தனைக்கு அல்லாஹ் உடனடியாகப் பதிலளித்துள்ளதை அவதானிக்கலாம். பெற்றோரின் திருப்தி கிடைத்தால் மாத்திரமே இறைவனின் திருப்தி கிடைக்கிறது. அதுவே அவரது பிரார்த்தனைகள் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் ஆபத்து நீங்கவும் வழிவகுத்துள்ளது என்பதை இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

ஒரு மனிதர் செய்கின்ற நற்காரியங்களில் பெற்றோரைப் பேணுவது சிறப்பு மிக்கதாகும். அது அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுக் கொள்ள உதவுகின்றது எனப் பின்வரும் ஹதீஸ் விளக்குகிறது.

'தனது பெற்றோரைத் திருப்திப்படுத்தியவன் அல்லாஹ்வைத் திருப்திப்படுத்தியவன் ஆவான். பெற்றோரை அதிருப்திக்குள்ளாக்கியவன் அல்லாஹ்வின் அதிருப்தியைப் பெற்றவனாவான்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (புஹாரி)

பெற்றோருக்கு நன்மை செய்வது அல்லாஹ்வின் அன்பைப் பெற்றுத் தரும் என்பதைப் பின்வரும் ஹதீஸ் விளக்குகின்றது.

'ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான அமல் எது என வினவப்பட்டது.

அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவது என்றார்கள்' அதன் பின் எது எனக் கேட்டகப்பட்டபோது, 'பெற்றோருக்கு உபகாரம் செய்தல்' என்று பதிலுரைத்தார்கள்.' (புஹாரி, முஸ்லிம்)

அல்லாஹ்வுக்கு அடிபணிந்துவிட்ட முஸ்லிம் அதற்கடுத்ததாகத் தனது பெற்றோருக்கு உபகாரம் செய்ய வேண்டும் என அல்குர்ஆன் கட்டளையிடுகின்றது. இதனை ஸூரா பனீ இஸ்ராஈலின் 23 ஆம் வசனம் தெளிவாக எடுத்தியம்புகின்றது. (17:23)

இவ்வுலகில் ஒன்றும் அறியாத, எதற்கும் சக்தியற்ற நிலையில் பிறக்கின்ற குழந்தையைப் பேணிப் பாதுகாத்து, தேவையான உணவுகளையும் அறிவையும் புகட்டி பெற்றோர் வளர்த்தெடுக்கின்றனர். இதற்காக மாபெரும் அர்ப்பணிப்புக்களைச் செய்கின்ற பெற்றோருக்குக் கடன் தீர்க்க இவ்வுலகில் யாராலும் முடியாது. அதற்கீடாகத்தான் பெற்றோருக்கு உபகாரம் செய்வதை இஸ்லாம் கடமையாக்கியுள்ளது. இந்தவகையில் ஒருவர் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய உபகாரங்களைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

1. நன்றி செலுத்துதல்
2. பெற்றோருக்காகப் பிரார்த்தித்தல்
3. கனிவாகப் பேசுதலும் அவர்களின் சொல்லைக் கேட்டலும்
4. அன்பாகவும், இரக்கமாகவும் நடந்து கொள்ளல்
5. பெற்றோரிடம் அனுமதி பெற்று காரியங்களில் ஈடுபடுதல்
6. பெற்றோரின் நண்பர்களையும் உறவினர்களையும் மதித்தல்

இவற்றை விட பெற்றோருக்கு நோவினை செய்வது பெரும்பாவம் என இஸ்லாம் எச்சரிக்கின்றது. பெற்றோரைப் பராமரிப்பதை ஈமானுக்கு அடுத்த விடயமாகக் கருதும் இஸ்லாம், அவர்களை நிந்திப்பது, அவர்களுக்குக் கட்டுப்படாதிருப்பது, அவர்களைத் தூற்றுவது என்பன ஷிர்க்கிற்கு அடுத்த பெரும்பாவமாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

ஏனைய பாவங்களைச் செய்பவனை அல்லாஹ் மறுமை வரை விட்டு வைக்கின்றான். ஆனால், பெற்றோரைத் துன்புறுத்துபவனை அல்லாஹ் இவ்வுலகிலேயே துன்பத்திற்கு உள்ளாக்குகின்றான்.

*‘அல்லாஹுதஆலா பெற்றோரை நிந்திப்பதைத் தவிர ஏனைய பாவங்களுக்கான தண்டனையை, தான் நாடியவாறு மறுமை வரை பிற்படுத்து கின்றான். ஆனால் பெற்றோரை நிற்திப்பதற்கான தண்டனையை மரணத் திற்கு முன்னர் இவ்வுலகிலேயே வழங்கிவிடுகின்றான்’ (புஹாரி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.*


***எனவே, எமது பெற்றோரைக் கண்ணியப்படுத்தி, அவர்களுக்கு உபகாரம் செய்வதுடன் தினம் அவர்களுக்காகப் பிரார்த்தித்து இம்மையிலும் மறுமையிலும் இறை திருப்தியைப் பெற்றுக் கொள்ள உறுதி கொள்வோமாக!***

**செயற்பாடு**

‘பெற்றோரைக் கண்ணியப்படுத்துவோம்’ எனும் தலைப்பில் உரையாடல் ஒன்றை நிகழ்த்துக.

# 13

# ஆசிரியரை மதிப்போம்




ஜாஹிலிய்யாக் காலமதில்
அறிவொளி பரப்ப வந்தவரே
அற்புதமான ஆசானாம்
எங்க ளன்பு நபியவரே

தங்கம் வெள்ளி நாணயங்கள்
நபிமார் விட்டுச் சென்றதில்லை
கல்வி ஞானம் ஒன்றையே
சொத்தாய் விட்டுச் சென்றனரே

கல்வி யறிவு பெற்றவரே
கண்ணி ரண்டைக் கொண்டவராம்
என்று சான்றோர் புகழ்ந்தனரே
அறிவைத் தேடிப் படிப்பதற்கே

தானும் கற்றுக் கல்விதனை
பிறரும் கற்கச் செய்தவரே
படைத்தவ னருளைப் பெற்றவராம்
பண்புடன் நபிகள் பகர்ந்தாரே



கல்வி யறிவு பெற்றவரே
நபிமார் வாரிசு ஆனவராம்
என்று நபிமணி நவின்றதனால்
ஏற்று நடப்பது கடமையே

பாலர் நாளும் கல்விபெற
பண்புடன் நாடு வாழ்வுபெற
பாதை காட்டும் ஆசானே
பாரில் உயர்ந்த மானிடரே

நீரில் வாழும் மீனினமும்
தரையில் உலாவும் உயிரினமும்
வானில் பறக்கும் பட்சிகளும்
வானவ ரென்ற உத்தமரும்

அறிஞர் தமக்குத் தானாமே
அழகாய் துஆவை இறைஞ்சிடுமாம்
அத்தகு அறிஞர் ஆசிரியர்
அனைவரை மதித்து மகிழ்வோமே

இனமொழி பேதம் பாராமல்
இனிதாய் பாடம் ஊட்டிவிட
ஆர்வம் கொண்ட ஆசானின்
அனந்தரச் சொத்தாய் வளர்வோமே

அல்லாஹ் தந்த அருட்கொடையாம்
எங்கள் அன்பு ஆசானாம்
ஏற்ற முறையில் மதித்திடுவோம்
ஏகனை நித்தம் வேண்டிடுவோம்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**பயிற்சி**

பின்வரும் கருத்துக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.

1. இஸ்லாத்தில் முதலாவது ஆசிரியர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆவார்கள். (   )

2. நபிமார்களின் வாரிசுச்சொத்துகளாக தங்கம், வெள்ளி காணப்படுகின்றன. (   )

3. கல்வியை குர்ஆன் கண்கள் என புகழ்ந்துரைக்கிறது. (   )

4. ‘அறிஞர்கள்தான் நபிமாரின் வாரிசுகளாவர்’ என்பது குர்ஆனின் கருத்தாகும். (   )

5. ஆசிரியரை மதிப்பது நன்மை தரும் செயலாகும். (   )

6. ஆசானுக்காகப் பிரார்த்திப்பது அவரை மதிப்பதாகாது. (   )

7. பாரினில் உயர்ந்தவர் பணம் படைத்தவராவர். (   )

**செயற்பாடு**

இப்பாடலை மெட்டெடுத்து பாட வழிகாட்டுக.

# 14

# நாவைப் பேணுவோம்

ஒரு நாள் ஸஹாபாக்களுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அச்சபையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உற்ற நண்பரான அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் இருந்தார்கள். அங்கு வந்த ஒருவர், அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைக் கடுமையாகத் திட்டித் துன்பத்திற்குள்ளாக்கினார். அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு எதுவும் பேசாமல் மௌனம் காத்தார்கள். இரண்டாவது தடவையாகவும் அம்மனிதர் திட்டினார். அப்போதும் அவர்கள் மௌனமாகவே இருந்தார்கள். அவர் மூன்றாம் முறையாகவும் அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைக் கடுமையாகத் திட்டினார். அப்போது அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அம்மனிதருக்கு மறுப்புத் தெரிவித்தார்கள். உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அச்சபையிலிருந்து எழுந்து சென்றுவிட்டார்கள். இதைக் கண்ட அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு , நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று, 'அல்லாஹ்வின் தூதரே! என்மீது கோபப்பட்டா எழுந்து செல்கிறீர்கள்?' என வினவினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'அந்த மனிதர் உம்மைத் திட்டுவதற்குப் பயன்படுத்திய வார்த்தைகளை வானிலிருந்து இறங்கிய மலக்குகள் பொய்யாக்கிக் கொண்டிருந்தார்கள். நீர் விடையளித்த போது அங்கு ஷைத்தான் பிரசன்னமானான். ஷைத்தான் இருக்கும் இடத்தில் நானும் இருக்காது எழுந்து வந்துவிட்டேன்' எனப் பதிலளித்தார்கள். (அபூதாவூத்)

ஒரு முறை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் உட்கார்ந்திருக்கும் போது அங்கு ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் வந்தார்கள். அவர்களைக் கண்ட ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், ஸபிய்யா கட்டையானவர் என ஏதேதோ

குறையாகச் சொன்னார்கள். அதைச் செவியுற்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆயிஷாவைப் பார்த்து, 'கடலில் போட்டாலும் கடல் நீர் அசுத்தமடையும் தன்மை கொண்ட வார்த்தையைப் பிரயோகித்துவிட்டீர்!' எனக் கண்டித்தார்கள். (அபூதாவூத், திர்மிதி)

ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களிடம் 'புறம் என்றால் என்ன எனத் தெரியுமா?' எனக் கேட்டார்கள். அதற்கு ஸஹாபாக்கள், 'அல்லாஹ்வும் அவனது தூதருமே அறிவார்கள்!' என்றனர். பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'உனது சகோதரன் வெறுக்கின்ற, அவனைப் பற்றிய ஒன்றைக் கூறுவதாகும்' என்றார்கள். அப்போது ஒரு ஸஹாபி, 'நான் கூறுவது அவரிடம் இருந்தால் அது பற்றி என்ன கருதுகிறீர்கள்?' எனக் கேட்டார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நீர் சொல்வது அவரிடம் இருந்தால் அது புறமாகும். இல்லாவிட்டால் அது அவதூறு ஆகும்' என்றார்கள். (முஸ்லிம்)

ஒரு நாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'உங்களில் எனக்கு மிக விருப்பமானவரும் மறுமையில் எனக்கு அருகாமையில் உட்கார்ந்திருப்பவரும் நற்பண்புள்ளவரே. உங்களில் எனக்கு மிகக் கோபத்திற்குரியவரும், மறுமையில் என்னிடமிருந்து மிகத் தூரத்தில் இருப்பவரும், அதிகமாகவும், நீண்ட நேரமாகவும் பேசுபவர்களும் 'முதபய்ஹிகூன்'களுமாவர்' என்றார்கள். அதற்கு ஸஹாபாக்கள் 'அப்படியென்றால், யார் அவர்கள்?' எனக் கேட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'வார்த்தைகளால் பெருமையடிப்பவர்கள்' என்றார்கள். (திர்மிதீ)

ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்களிடம் 'வெற்றி' எது எனக் கேட்கப்பட்டது. அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நாவைப் பேணிக்கொள்! வீட்டை விரித்துக் கொள். உனது குற்றங்களுக்காய் அழு என்றார்கள்' (திர்மிதீ)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விண்ணுலகிற்கு மிஃராஜ் பயணம் சென்றபோது, நரகில் ஒரு குழுவினரைக் கண்டார்கள். அவர்கள் மனித மாமிசத்தைப் புசித்துக் கொண்டும், செம்பினாலான நகங்களால் தமது முகங்களையும் நெஞ்சுகளையும் விராண்டி காயப்படுத்திக் கொண்டுமிருந்தார்கள். அப்போது ஜிப்ரீல்

அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம், 'இவர்கள் யார்? ஏன் இவ்வாறு தண்டிக்கப்படுகின்றனர்?' எனக் கேட்டார்கள். அதற்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம், 'இவர்கள்தான் உலகில் புறம் பேசி மனிதர்களின் மாமிசத்தை உண்டவர்கள்; அவர்களின் மானத்தில் விளையாடியவர்கள்' எனக் கூறினார்கள். (அபூதாவூத்)

ஒரு மனிதர் உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தையும் பதியப்படுகின்றது; அவை விசாரணைக்குட்படுத்தப்படுகின்றன. அதனால் வார்த்தைப் பிரயோகங்களில் அடக்கமும் கட்டுப்பாடும் தேவை என இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

ஒவ்வொரு நாள் காலையிலும் மனிதன் எழுந்துவிட்டால் அவனது உறுப்புக்கள் அனைத்தும் நாவைப் பார்த்து, 'அல்லாஹ்வை அஞ்சிக் கொள்! உன்னில்தான் எங்கள் நிலை தங்கியுள்ளது. நீ ஒழுங்காக இருந்து கொண்டால் நாங்களும் ஒழுங்காக இருந்து கொள்வோம். நீ தவறிவிட்டால் நாங்களும் தவறிவிடுவோம்! என எச்சரிக்கின்றன' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

இச்சம்பவங்கள் அனைத்தும் முஸ்லிமின் நாவொழுக்கம் பற்றிப் பேசுகின்றன. நல்ல விடயங்களை மாத்திரமே பேச வேண்டும் புறம், கோள், திட்டுதல், குறை கூறுதல், பட்டப் பெயர் சூட்டுதல் போன்ற தீய, பாவமான செயல்களைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். எனவே ஒவ்வொரு முஸ்லிமும் இஸ்லாத்தின் போதனைகளுக்கு ஏற்ப நாவைப் பேணிக்கொள்வது கடமையாகும். ஏனெனில் 'நாவைப் பேணுபவனுக்கு சுவர்க்கத்தைப் பெற்றுத்தர நான் பொறுப்பு!' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாக்குறுதி அளித்துள்ளார்கள். 'அல்லாஹ்வையும் மறுமையையும் ஈமான் கொண்டவர் பேசினால் நல்லதைப் பேசட்டும் அல்லது (வாய் மூடி) மௌனித்து இருக்கட்டும்' (புஹாரி, முஸ்லிம்) என்று அறிவுரை பகர்ந் துள்ளார்கள். இவ்வுபதேசங்களைக் கருத்தில்கொண்டு இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெறுவோம்!

**செயற்பாடு**

'நாவின் விபரீதங்கள்' எனும் தலைப்பில் சிற்றுரையொன்றை முன்வைக்குக.

# 15

# அனுமதி பெறுவோம்

மற்றவர்களுக்குச் சொந்தமான வீடுகள், அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் போன்ற இடங்களுக்குள் நாம் செல்ல வேண்டுமானால், முதலில் அவர்களிடம் அனுமதி பெறல் வேண்டும். அதற்காகச் சில இடங்களில் வாசல் மணி பொருத்தப்பட்டிருக்கும். அவர்கள் தமது இடங்களில் சுதந்திரமாக இருப்பார்கள். ஆதலால் மற்றவர்கள் அவர்களிடம் பிரவேசிப்பதற்கு அனுமதி பெறுவது அவசியமாகும். அவ்வாறு அனுமதி கிடைத்து விட்டால் அங்கு செல்வதற்குத் தடை இல்லை. அவ்வாறன்றி அனுமதி மறுக்கப்படுமாக இருந்தால், உள்ளே செல்லாமல் திரும்பிவிட வேண்டும்.

அனுமதி பெறுவது எவ்வாறு? என்பதை இஸ்லாம் கற்றுத்தந்துள்ளது. அதனை அறிந்து கடைப்பிடித்து வாழ வேண்டியது அவசியமாகும். பின்வரும் அல்குர்ஆன் வசனம் பிறர் இல்லங்களுக்குள் நுழைவதற்கு அனுமதி பெற வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது.

'இறைவிசுவாசிகளே! உங்களுடையதல்லாத வீடுகளில் நீங்கள் (நுழையக் கருதினால்) அதில் இருப்பவர்களுக்கு ஸலாம் கூறி (அவர்களுடைய) அனுமதியைப் பெறும்வரையில் நுழையாதீர்கள்'. (24:27)

### அனுமதி பெறுவதற்கான ஒழுங்குகள்...

### 1. பிறர் இல்லத்தினுள் நுழைய முன் ஸலாம் கூறவேண்டும்

ஒரு நபித்தோழர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வீட்டினுள் செல்வதற்காக 'உள்ளே நுழையலாமா?' என்று அனுமதி கேட் டார். உடனே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது ஊழியரிடம், 'நீர் சென்று அனுமதி கோரும் முறையை அவருக்கு கற்பிப்பீராக'

என்று கூறினார்கள். அவர் ‘அஸ்ஸலாமு அலைக்கும் உள்ளே வரலாமா? எனக் கேட்பீராக’ என்று கற்றுக் கொடுத்தார். (அபூ தாவூத்)

## 2. மூன்று தடவைகள் மாத்திரம் அனுமதி கோருதல்

‘அனுமதி கோருதல் என்பது மூன்று தடவைகள்தான். அனுமதி கிடைத்தால் உள்ளே செல்வீராக. இல்லை என்றால் திரும்பி விடுவீராக’ (புகாரி முஸ்லிம்)

பிறர் வீட்டுக்குச் சென்றால் வாசல் மணியை அழுத்தியோ, கதவில் தட்டியோ தான் வந்திருப்பதை உணர்த்த வேண்டும். பின்னர், வீட்டார் வாசலுக்கு வந்தால் ஸலாம் கூறி அனுமதி பெறல் வேண்டும். அவர்கள் அனுமதி வழங்கினால் மாத்திரமே உள்ளே செல்ல வேண்டும். அனுமதி கிடைக்காவிட்டால் உள்ளே செல்லக்கூடாது. வாசல்மணியை அழுத்து வதையோ, கதவில் தட்டுவதையோ மூன்று முறைக்கு மேல் செய்யக்கூடாது.

பிறருடைய வீடு அல்லது அலுவலகம் போன்ற இடங்களில் எவரும் இல்லா விட்டால் அல்லது அனுமதி கிடைக்கா விட்டால் அல்லது திரும்பி விடுங்கள் என்று கூறப்பட்டால் திரும்பி விட வேண்டும்.



## 3. வீட்டுக்குள் உற்றுப் பார்க்காதிருத்தல்

'அனுமதி கோருவது மார்க்கத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. எனவே தவறான பார்வையிலிருந்து தவிர்ப்பதற்காக பிறரின் இல்லதிற்குச் செல்பவர் அனுமதி கோருவதுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். தம் பார்வையை அவ்வீட்டினுள் செலுத்திப் பார்க்கக் கூடாது'. (புகாரி, முஸ்லிம்)

பிறருக்கு சொந்தமான இடங்களினுள் கதவு வழியாகவோ, யன்னல் வழியாகவோ பார்வையைச் செலுத்தி உற்றுப் பார்ப்பது பெரும் தவறாகும். தமது சொந்த வீட்டில் உள்ள மற்றவர்களின் அறைகளுக்குச் செல்வ தாயினும்கூட அவர்களிடம் அனுமதி கோர வேண்டியது அவசியமாகும்.

'உங்கள் குழந்தைகள் பருவமடைந்து விடும் பட்சத்தில் தங்களுக்கு வயதில் மூத்தவர்கள் அனுமதி கோர வேண்டியதன் பிரகாரம் அவர்களும் அனுமதி கோர வேண்டும்'. (24:59)

'ஒருவர் தன்னுடைய பிள்ளைகள், தாய், சகோதரர், சகோதரி, தந்தை ஆகியோரின் வீடுகளுக்குள் நுழைவதற்கும் அனுமதி பெற்றுச் செல்வது அவசியமாகும்'. (அல் - அதபுல் முப்ரத்)

எமது வீட்டினுள் நுழையும் போதும் ஸலாம் கூறவேண்டும் என்பதற்கு பின்வரும் குர்ஆன் வசனம் சான்றாக அமைகிறது.

'நீங்கள் எந்த வீட்டில் நுழைந்தபோதிலும் அல்லாஹ்வால் உங்களுக்கு கற்பிக்கப்பட்ட மிக்க பாக்கியமுள்ள பரிசுத்தமான அஸ்ஸலாமு அலைக்கும் எனும் வாக்கியத்தை நீங்கள் உங்களுக்குள் கூறிக்கொள்ளவும்' (24:61)

ஹஸ்ரத் அனஸ் ரழியல்லாஹுு அன்ஹுு அவர்களைப் பார்த்து நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். 'மகனே! உன் குடும்பத்தாரிடம் நீ சென்றால் ஸலாம் கூறு. அது உனக்கும் உன் குடும்பத் தினருக்கும் (பரகத்தாக) அபிவிருத்தியாக அமையும்'. (திர்மிதி)

சபைகளுக்குச் செல்லும் போதும் அதிலிருந்து விடை பெற்றுச் செல்லும் போதும் அனுமதி பெறும் வகையில் ஸலாம் கூற வேண்டும்.

'உங்களில் ஒருவர் சபைக்கு வருவாரானால் அவர் ஸலாம் கூறட்டும். அங்கிருந்து புறப்பட விரும்பினாலும் ஸலாம் கூறட்டும்' (அபூதாவூத்)

இவ்வாறு அனுமதிபெற்று உட்பிரவேசிக்கும் பண்பாட்டை நாமும் பேணி நடப்போம்.

**பயிற்சி**

*பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக.*

1. பிறரது இடங்களுக்குள் செல்வதற்கு அனுமதி பெறுவது அவசியமாகும். ( )
2. அழைப்பு மணியை அழுத்தியும் அனுமதி கோரலாம். ( )
3. அழைப்பு மணி பொருத்தப்பட்டிருக்காத வீடுகளுக்கே ஸலாம் கூறவேண்டும். ( )
4. அனுமதி கேட்பது மூன்று தடவைகள் ஆகும். ( )
5. ஒரு சபைக்குச் செல்லும்போது ஸலாம் கூற வேண்டும். ( )
6. பிறர் வீட்டினுள் யன்னல் வழியாக உற்றுப் பார்க்கலாம். ( )
7. எமது வீடுகளுக்குள்ளும் ஸலாம் கூறிக் கொண்டுதான் செல்ல வேண்டும். ( )
8. பிறர் வீட்டில் நுழைந்தால் மாத்திரமே அனுமதி கேட்குமாறு அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. ( )
9. பெற்றோரின் அறைகளுக்குள் அனுமதியின்றி நுழையலாம். ( )
10. இஸ்லாத்தில் அனுமதி கோரும் முறையைக் காட்டித் தராமையினால் நாம் விரும்பிய முறையில் அனுமதி கோரலாம். ( )


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# 16

# பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்குவோம்

ஒரு நாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒருவர் வந்தார். அவர் தனது வறுமை பற்றி முறையிட்டார். அவருக்கு உணவு வழங்க தமது வீட்டில் எதுவும் இருக்கவில்லை என்பதால், அவருக்கு உணவளிக்குமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களிடம் கூறினார்கள். 'நான் அவருக்கு விருந்தளிக்கிறேன்' எனக் கூறி ஓர் அன்ஸாரித் தோழர் அவரை அழைத்துச் சென்றார். 'இவர் எமது விருந்தாளி, எவ்வித குறைபாடும் இல்லாமல் இவருக்கு உணவளிக்க வேண்டும்' என்று மனைவியிடம் கூறினார். 'குழந்தைகளுக்குத் தேவையான உணவு மாத்திரமே உள்ளது' என்று மனைவி கூறினார். அதனைக் கொண்டுவந்து விருந்தாளிக்கு வைக்குமாறும், இருவரும் உண்ண ஆரம்பித்ததும் விளக்கின் வெளிச்சத்தைக் கூட்டுவது போல காட்டி அதனை அணையச் செய்யுமாறும் மனைவிக்குக் கூறினார். அவ்வாறே, மனைவியும் செய்தார். விருந்தாளி வயிறு நிறைய உண்டார். இவ்வாறு தாம் பசியோடு இருந்து, விருந்தாளிக்கு உணவளித்தனர்.

மறுநாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்துக்கு அவர் சென்ற வேளை, அத்தோழரை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விளித்து, 'உங்களிருவரினதும் விருந்தோம்பும் பண்பைக் குறித்து அல்லாஹ் மகிழ்ச்சியடைந்தான்' எனக் குறிப்பிட்டார்கள். அவ்வேளையில்தான் பின்வரும் அல்குர்ஆன் வசனம் அருளப்பட்டது.

'தங்களுக்கு தேவையிருந்தும் தமது தேவையைவிட பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்குகின்றனர்' *(59:9)*

நாம் எப்பொழுதும் எல்லா மக்களுடனும் இரக்கத்தோடு நடந்து கொள்ள வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது. பிறர் மீது அன்பு

செலுத்த வேண்டும். இயலுமான உதவிகளைச் செய்ய வேண்டும். மற்றவர்களின் துன்பங்களை நீக்க முயற்சி செய்ய வேண்டும். அன்பு, உதவி தேடி ஏங்கி நிற்கும் அனைவரைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். நமது தேவைகளை விட மற்றவர்களின் தேவைகளுக்கு முடியுமான அளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டும், ஏனென்றால் 'மனிதர்களிடம் அன்பு செலுத்தாதவன் மீது அல்லாஹ் அன்பு செலுத்தமாட்டான்' (புகாரி) என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

எமக்குத் தேவைகள் இருப்பது போலவே, மற்றவர்களுக்கும் தேவைகள் உள்ளன. ஒருவர் தனது தேவையை, தானே நிறைவேற்றிக் கொள்ள முடியாத போது, பிறரின் உதவியை எதிர்பார்ப்பார். அச்சந்தர்ப்பங்களில் நமது தேவைகளைச் சற்றுப் பிற்படுத்தி, மற்றவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். இதுதான் சிறந்த பண்பாகும். 'ஒரு முஃமினின் கஷ்டத்தை நீக்கி வைப்பவருக்கு, அல்லாஹ் மறுமை நாளில் அவரது கஷ்டத்தை நீக்குவான். கஷ்டப்படுபவனுக்கு உதவி செய்து இலகுவை ஏற்படுத்தினால், அவருக்கு இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ் உதவி செய்து அவரது கஷ்டங்களை இலகுவாக்குவான்' (முஸ்லிம்) என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்

நாம் அவசரமான தேவை ஒன்றுக்காக சென்று கொண்டிருக்கிறோம். அப்பொழுது கண் தெரியாத ஒருவர் பாதை தெரியாது தடுமாறிக் கொண்டி ருக்கிறார். நாம் பேரூந்தில் இருக்கையில் அமர்ந்து பயணம் செய்கிறோம். வயோதிபர் ஒருவர் நின்று பயணிக்க முடியாமல் அவதிப்படுகிறார். நாம் வைத்தியசாலையில் மருத்துவரிடம் செல்ல வரிசையில் நிற்கிறோம். நமது முறை வரும் நேரம், ஒரு கடுமையான நோயாளி வருகிறார். இத்தகைய சந்தர்ப்பங்களில் நமது தேவைகளைச் சற்றுப் பிற்படுத்தி, பிறரின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதே சிறந்த பண்பாகும்.

முஹாஜிரீன்கள், மக்காவிலிருந்து தமது வீடு வாசல்களைத் துறந்து மதீனாவுக்கு வந்தார்கள். அவர்கள் அனைத்தையும் இழந்து வந்த போது, மதீனத்து அன்ஸாரீன்கள் அவர்களைத் தமது சகோதரர்களாக ஏற்றுக் கொண்டார்கள். அன்ஸாரீன்கள் தமக்குள் தேவைகள் இருந்த போதிலும், தம்மிடம் இருப்பதில் சரி பாதியை முஹாஜிரீன்களுக்கு வழங்க முன்வந்தார்கள். தமது தேவைகளை விட மற்றவர்களின் தேவைகளுக்கே முன்னுரிமை வழங்கினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம்மை

விட அதிக தேவையுடைய முஹாஜிரீன்களுக்கே தமக்குக் கிடைக்கும் நன்கொடைகளைக் கூட, வழங்குவார்கள். காரணம் பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்குவது முஸ்லிமின் பண்பாகும்.

ஒரு அடியான் மற்றொரு அடியானுக்கு உதவி செய்து கொண்டிருக்கும் பொழுதெல்லாம், அவ்வடியானுக்கு அல்லாஹ் உதவி செய்துகொண்டே இருப்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (முஸ்லிம்)

சில சந்தர்ப்பங்களில் சகோதரர்களுக்கிடையேயும் நண்பர்களுக்கிடையேயும் சிற்சில முரண்பாடுகள் ஏற்படுகின்றன. இதற்கு மற்றவர்களது தேவையை விடத் தமது தேவையை முற்படுத்தும் சுயநலமே காரணமாகும். மாறாக ஒவ்வொருவரும் மற்றவரின் தேவைக்கு முன்னுரிமை கொடுக்கப் பழகிக் கொண்டால், அனைவரின் வாழ்க்கையும் மகிழ்ச்சியாக அமைந்துவிடும்.

‘உங்களில் ஒருவர் தான் விரும்புவதை தன் சகோதரனுக்கும் விரும்பாத வரை உண்மை விசுவாசியாக மாட்டார்’. (புகாரி, முஸ்லிம்) என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஸஹபாக்கள் எப்பொழுதும் பிறர் தேவைக்கு முன்னுரிமை கொடுத்தே வந்துள்ளனர். இதற்கு ஆதாரமாகப் பின்வரும் சம்பவத்தை எடுத்துக் காட்டலாம்.

யர்மூக் போரின் பின், களத்தில் பலர் காயமுற்று குற்றுயிராய்க் கிடந்தனர். அவர்களுக்கு நீர் புகட்ட ஒருவர் நீரை எடுத்துச் சென்றார். ஒருவருக்கு நீர் புகட்ட முற்பட்டபோது மற்றொருவர் தண்ணீர் எனச் சத்தமிட்டார். குரல் கேட்டதும், அவர் இரண்டாம் நபருக்கு நீரை வழங்குமாறு சைகை காட்டினார். அவரிடம் நீர் கொண்டு செல்லப்பட்ட போது பிறிதொருவர் நீருக்காக குரல் எழுப்பினார். அப்பொழுது இரண்டாமவர் மூன்றாமவருக்கு நீரை வழங்குமாறு சைகை காட்டினார். மூன்றாமவரிடம் நீர் கொண்டு செல்லப்பட்ட போது அவர் மரணமடைந்துவிட்டார். இரண்டாமவரிடம் திரும்பி வந்த போது அவரும் மரணித்திருந்தார். உடனே முதலாமவரிடம் நீரைக்கொண்டு வந்த போது அவரும் நீரை அருந்து முன்பே மரணித்துவிட்டார்.

இங்கு தமது உயிர் பிரியும் நேரத்திலும் கூடத் தம்மைவிட மற்றவருக்கு முதன்மை வழங்கியுள்ள பெருந்தன்மையைக் காண்கிறோம்.

எனவே நாம் நம்மைப் பற்றி மாத்திரம் சிந்திக்காமல், மற்றவர்களின் தேவையின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது தேவைகளைவிட, பிறர் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளார்கள். அவ்வாறே செயற்படுமாறும் உபதேசித்துள்ளார்கள்.

**எனவே எம்மால் முடிந்தளவு பிறருக்கு விட்டுக் கொடுத்து, அவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயல்படுவோம்.**

**பயிற்சி**

(அ) அடைப்புக்குறிக்குள் இருக்கும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. பிறரின் தேவைகளை (அல்லாஹ்வுக்காக, மனசாட்சிக்காக, மனிதருக்காக) முதன்மைப் படுத்த வேண்டும்.
2. மனிதர்களிடம் அன்பு செலுத்துபவர்கள் மீது (மலக்குகள், நபிமார்கள், அல்லாஹ்) அன்பு செலுத்துவான்.
3. தமது தேவைகளை விட முஹாஜிரீன்களுடைய தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கியோர், (ஸஹாபாக்கள், அன்ஸாரீன்கள், குறைஷியர்கள்)
4. எமக்கிடையே சண்டை ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று (சுயநலம், உடற்பலம், பொதுநலம்)
5. ஒருசில ஸஹாபாக்கள் மரண வேளையிலும் தண்ணீர் அருந்தாமல் மரணித்ததற்கான காரணம் (தண்ணீர் குடிக்க முடியாமை, தண்ணீர் போதாமை, பிறர் தாகம் தீர்க்க முற்பட்டமை)

**செயற்பாடு**

பிறர் தேவைக்கு முன்னுரிமை வழங்குதல் என்ற தலைப்பில் குறுநாடகம் ஒன்றைத் தயாரித்து நடித்துக் காட்டுக.

# 17

# அல்குர்ஆன் அறிமுகம்

அல்குர்ஆன் அல்லாஹ்வினால் மனிதர்களுக்கு அருளப்பட்ட பொதுவான வழிகாட்டியாகும். ஆதலால் அதனை வாழ்க்கைக்கான வழிகாட்டியாக ஏற்று, அதன்படி வாழ்வது கடமையாகும். அப்போதுதான் அல்லாஹ்வுக்கும் எமக்குமிடையிலான தொடர்பு வளரும். அதனை ஓதவும் படிக்கவும் ஆர்வம் ஏற்படும். அதன் போதனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளம் இடம் கொடுக்கும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது நாற்பதாவது வயதில் இக்ரஃ என்ற வார்த்தையுடன் ஆரம்பமாகும் ஸூரதுல் அலக்கின் (96) முதல் ஐந்து வசனங்கள் அருளப்பட்டன. அதிலிருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வபாத் வரை, 23 வருடங்களாக அல்குர்ஆன் வசனங்கள் பகுதி பகுதியாக அருளப்பட்டு நிறைவு பெற்றன. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழங்கப்பட்ட அல்குர்ஆன் உலகுக்கு அருளப்பட்ட இறுதி வேதமாகும். அதற்கு அல்புர்கான், அல்கிதாப், அத்தன்ஸீல் போன்ற இன்னும் பல பெயர்களும் உள்ளன.



நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் அல்குர்ஆன் நூலுருவில் காணப்படவில்லை. பொதுவாக ஸஹாபாக்கள் எல்லோரும் தேவையான அளவு மனப்பாடம் செய்திருந்தனர். மனனமாகவே ஓதி வந்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் நியமிக்கப்பட்ட ஸஹாபாக்கள் ஏடுகளில் எழுதி பாதுகாத்து வைத்திருந்தனர். அவர்கள் குத்தாபுல் வஹீ (வஹீயை எழுதுவோர்) எனப்பட்டனர். அவற்றைத் தொகுத்தே முதலில் அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்திலும் பின்னர் உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்திலும் முஸ்ஹப் ஆக்கப்பட்டது. அந்தப் பிரதியின் அடிப் படையிலேயே இன்று அல்குர்ஆன் நூலுருவில் அச்சடிக்கப்பட்டு வருகின்றது.

அல்குர்ஆனில் மொத்தமாக 6666 வசனங்கள் உள்ளன. அவை 114 அத்தியாயங்களில் இடம்பெற்றுள்ளன. வசனங்கள் 'ஆயத்' எனவும், அத்தியாயங்கள் 'ஸூறா' எனவும் அழைக்கப்படுகின்றன. அல்குர்ஆன் வசனங்கள் 30 **ஜுஸ்உ**க்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஏழு நாட்களில் ஓதி முடிக்க விரும்புபவர்களுக்கு ஏற்றாற்போல 7 **மன்ஸில்**களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

அல்குர்ஆன் நூல் வடிவத்தில் காணப்பட்டாலும் அது அல்லாஹ்வின் பேச்சு (கலாமுல்லாஹ்) ஆகும். அதனால், ஒவ்வொரு முஸ்லிமும் அதனைத் தன் உயிரை விடவும் மேலாக மதிக்க வேண்டும். தினமும் அதனை ஓதிவரவும் வேண்டும். ஏனெனில், அல்குர்ஆனை ஓதுதல் (கிராஅதுல் குர்ஆன்) அதிகம் நன்மைகளை ஈட்டித்தரும் ஒரு இபாதத் ஆகும்.

அல்குர்ஆனை ஓதும்போது பின்வரும் ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

- ★ வுழூச் செய்து சுத்தமாகிக் கொள்ளல்
- ★ உடல், ஆடை என்பவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ளல்
- ★ அல்குர்ஆனை ஓத ஆரம்பிக்கும்போது 'அஊது' சொல்லி ஷைத்தானிலிருந்து பாதுகாப்புத் தேடுதல்
- ★ அதைத் தொடர்ந்து 'பிஸ்மில்லாஹ்' சொல்லல்
- ★ தஜ்வீத் முறையினைப் பேணி அழகாக ஓத முயற்சித்தல்

★ ஸஜ்தாவுடைய வசனங்களை ஓதும்போது ‘ஸஜ்தா திலாவத்’ செய்தல்

★ ஏனையோருக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஓதுவதைத் தவிர்த்தல்

★ அல்குர்ஆன் ஓதப்பட்டால் மௌனமாக இருந்து அதனை செவிமடுத்தல்

★ மலசலகூடம் போன்ற தடுக்கப்பட்ட இடங்களில் அல்குர்ஆன் ஓதுவதைத் தவிர்த்தல்

★ நஜீஸான இடங்களுக்குக் கொண்டு செல்வதைத் தவிர்த்துக் கொள்ளல்

மறுமையில் எமக்காக ஷபாஅத் செய்யும் அல்குர்ஆனைத் தினமும் ஓதுவோம். அதன் பொருளை விளங்க முயற்சிப்போம். அதன்படி வாழ்ந்து ஈருலகிலும் வெற்றி பெறுவோம்.

***பயிற்சி***

*1.* பின்வரும் அரபுச் சொற்களின் பொருளைத் தருக


★ கிராஅதுல் குர்ஆன் ★ ஸஜ்தா

★ கலாமுல்லாஹ் ★ குத்தாபுல் வஹி

*2.* அல்குர்ஆன் எத்தனை ஜுஸ்உக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன?

*3.* அல்குர்ஆன் ஓதும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

# 18
# அல்குர்ஆனை ஓதுவோம் - I
## (இறுதி மூன்று ஸூறாக்கள்)



### ஸூறதுல் இஹ்லாஸ் - ஸூறதுல் பலக் - ஸூறதுன் நாஸ்

இவை அல் குர்ஆனில் இறுதியாக அமைந்துள்ள 03 ஸூறாக்களாகும். இவற்றை ஓதுவதனால் அதிக நன்மைகள் கிடைக்கின்றன. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு தொழுகையின் பின்னரும் இந்த ஸூராக்களை ஓதும்படி பணித்துள்ளார்கள். இவை காலையிலும் மாலையிலும், அநேக ஸுன்னத்துத் தொழுகையின் பின்னரும் ஓதப்படுகின்ற ஸூறாக்களாகும். 'நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொருநாள் இரவும் தூங்கச்செல்லும் போது இம் மூன்று

ஸூறாக்களையும் மூன்று முறை ஓதி தனது இரு உள்ளங் கைகளிலும் ஊதி தனது முழு உடம்பிலும் தேய்ப்பார்கள்' (புகாரி) என ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள்.


நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள், 'இந்த இரவு இறங்கப்பட்ட வசனங்களைப் போன்ற வசனங்கள் இதற்கு முன் இறங்கியதை நான் காணவில்லை. அதுதான் ஸூறதுல் இஹ்லாஸ், ஸூறதுல் பலக், ஸூறதுன் நாஸ் என்பனவாகும்'.

## ஸூறதுல் இஹ்லாஸ்

ஸூறதுல் இஹ்லாஸ் அல்குர்ஆனில் அமைந்துள்ள 112 வது ஸூறாவாகும். இது நான்கு ஆயத்துக்களைக் கொண்ட மிகச் சிறிய ஸூறாவாகும். இது மக்காவில் இறங்கப்பட்ட மக்கீ ஸூறாவாகும். இந்த ஸூரா அல்லாஹ் ஒருவன் என்பதையும் அவன்தான் உண்மையான இறைவன் என்பதையும் வலியுறுத்துகின்றது. இதனால் இதற்கு 'ஸூரத்துல் அஹத்', 'ஸூறதுத் தௌஹீத்' என்ற பெயர்களும் உண்டு. இஹ்லாஸ் என்ற அரபுச் சொல்லின் கருத்து தூய்மை என்பதாகும். அல்லாஹ் சகல ஷிர்க்குகளில் இருந்தும் பரிசுத்தமானவன். அவனுக்கு தாய், தந்தை, பிள்ளைகள் மற்றும் சகோதர சகோதரிகள் என்று யாரும் கிடையாது. அதே போன்று யாரிடமும் எந்தத் தேவையும் அல்லாஹ்வுக்கு கிடையாது என்றும் இந்த ஸூரா சுருக்கமாக விளக்குகின்றது.

மக்காவில் வாழ்ந்த காபிர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து 'நீங்கள் கூறும் இறைவன் எப்படிப்பட்டவன்? என்று வினவினர். அதற்கு பதிலளிப்பதற்காகவே இந்த ஸூறா இறக்கியருளப் பட்டது' (திர்மிதி). 'அல் குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதிக்கு இந்த ஸூறா சமமானது' (புஹாரி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

## ஸூறாவும் அதன் பொருளும்




*அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஓதுகின்றேன்.*

*1. (நபியே மனிதர்களை நோக்கி) நீர் கூறும், அல்லாஹ் ஒருவன் தான்.*

*2. (அந்த) அல்லாஹ் எவ்விதத் தேவையுமற்றவன். (யாவும் அவன் அருளையே எதிர்பார்த்திருக்கின்றன)*

*3. அவன் (எவரையும்) பெறவுமில்லை (எவராலும்) பெறப்படவுமில்லை. (ஆகவே அவனுக்குத் தகப்பனுமில்லை, சந்ததியுமில்லை)*

*4. தவிர அவனுக்கு ஒப்பாகவும் ஒன்றுமில்லை.*

## ஸூறதுல் பலக்

*ஸூறதுல் பலக் அல் குர்ஆனில் அமைந்துள்ள 113 வது ஸூறாவாகும்.இது 05 வசனங்களைக் கொண்ட மக்கீ ஸூறாவாகும். 'பலக்' எனும் அறபுச் சொல்லின் கருத்து அதிகாலை என்பதாகும். இந்த ஸூறா இருளின் கேடு களில் இருந்தும் பொறாமைக்காரர் சூனியக்காரர்களின் தீங்குகளில் நின்றும் பாதுகாப்பு தேடும் வகையில் உள்ளது.*

## ஸூறாவும் அதன் பொருளும்




*அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஓதுகின்றேன்.*

1. *(நபியே நீர் பிராத்தனை செய்து) கூறுவீராக வைகறையின் இறைவனிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்.*

2. *அவன் படைத்திருப்பவைகளின் தீங்கைவிட்டும்.*

3. *மேலும் (யாவையும்) மறைத்துக்கொள்ளப் படரும் இருளின் தீங்கைவிட்டும்.*

4. *மேலும் முடிச்சுப் போட்டு ஊதும் (சூனியக்காரப்) பெண்களின் தீங்கைவிட்டும்.*

5. *பொறாமைக்காரன் பொறாமைப்படும் போது நேரும் தீங்கைவிட்டும் (இரட்சிக்கக் கோருகின்றேன்).*

## ஸூறதுன் நாஸ்

ஸூறதுன் நாஸ் அல் குர்ஆனில் அமைந்துள்ள 114 வதும் இறுதியானதுமான ஸூறாவாகும். இது 06 வசனங்களைக் கொண்ட மக்கீ ஸூறாவாகும். நாஸ் எனும் அறபுச் சொல்லின் கருத்து ‘மனிதர்கள்’ என்பதாகும். இந்த ஸூறா தீங்கான மனிதர்கள், ஜின்கள் மற்றும் மனதில் தோன்றும் சந்தேகங்கள் என்பவற்றில் இருந்தும் பாதுகாப்புத் தேடும் வகையில் அமைந்துள்ளது.

### ஸூறாவும் அதன் பொருளும்




அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஓதுகின்றேன்.

1. (நபியே பிரார்த்தனை செய்து) நீர் கூறுவீராக மனிதர்களின் இறைவனிடம் நான் பாதுகாவல் தேடுகின்றேன்.

2. (அவன் தான்) மனிதர்களின் (உண்மையான) அரசன்.

3. (அவனே) மனிதர்களின் (வணக்கத்துக்குரிய உண்மையான) இறைவன்.

4.-5. மனிதர்களுடைய இருதயங்களில் (வீணான) சந்தேகங்களை உண்டு பண்ணிவிட்டு மறைந்து கொள்ளும் விஷமிகளின் தீங்கைவிட்டும் (பாதுகாக்கக் கோருகின்றேன்.)

6. (அத்தகைய விஷமிகள்) ஜின்களிலுமிருக்கின்றனர். மனிதர்களிலுமிருக்கின்றனர்.

## பயிற்சி

சுருக்கமான விடை தருக.

1. இஹ்லாஸ் என்பதன் கருத்து யாது?
2. ஸூறத்துல் இஹ்லாஸ் அல்குர்ஆனின் எத்தனையாவது ஸூறாவாகும்?
3. ஸூறத்துல் இஹ்லாஸுக்கு வேறு இரு பெயர்களைத் தருக.
4. பலக் என்பதன் கருத்து யாது?
5. ஸூறத்துல் பலக்கில் உள்ள வசனங்கள் எத்தனை?
6. அல்குர்ஆனின் இறுதி ஸூறா எது?


## செயற்பாடு

மேற்கூறப்பட்ட மூன்று ஸூறாக்களையும், அவற்றின் பொருளையும் மனனமிடுக.

# 19

# அல்குர்ஆனை ஓதுவோம் - II

## (ஸூறதுல் பீல்)



ஸூறதுல்பீல் 05 வசனங்களைக் கொண்ட மக்காவில் இறக்கப்பட்ட மக்கீ ஸூறாவாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்த ஆண்டில் ஏற்பட்ட மிக முக்கியமான சம்பவத்தை நினைவுகூரும் வகையில் இந்த ஸூறா அமைந்துள்ளது. இது அல்குர்ஆனின் 105 ஆம் அத்தியாயமாகும்.


மன்னன் ஆப்றஹா கஃபாவின் மீது பொறாமை கொண்டான். மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து அதனைத் தரிசிப்பதை அவன் விரும்பவில்லை. எனவே கஃபாவை விட அழகான வணக்கஸ்தலம் ஒன்றை நிர்மாணித்தான். அதற்கு மக்களை வரவழைப்பதற்குப் பல வழிகளிலும் முயற்சி செய்தான். எனினும் மக்கள் யாரும் அங்கு செல்லவில்லை. எனவே, இறுதியாக கஃபாவை தகர்த்து அழித்துவிடுவதற்குத் திட்டமிட்டான். அதற்காகச் சக்தி

வாய்ந்த யானைப் படை ஒன்றைத் தயார் செய்து கஃபாவை அழிப்பதற்கு மக்காவிற்கு அனுப்பி வைத்தான்.

எனினும், அல்லாஹ் தனது மாளிகையைத் தகர்க்க வந்த ஆப்ரஹாவின் யானைப் படையை 'அபாபீல்' எனும் சிறிய பறவைக் கூட்டத்தைக் கொண்டு அழித்துவிட்டான். இப்பறவைகள் சிறிய கற்களை யானைப்படை மீது எறிந்தன. அதனால் யானைப் படை உருக்குலைந்தது.

அல்லாஹ், ஆப்றஹாவையும் அவனது முழு யானைப் படையையும் அழித்துவிட்டான். இவை அல்லாஹ்வின் சக்தியையும் வல்லமையையும் கஃபாவின் மகிமையையும் உணர்த்துகின்றன. 'பீல்' என்பதன் கருத்து யானை என்பதாகும். இதனாலேயே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்த வருடம் ஆமுல் பீல் (யானை வருடம்) என அழைக்கப்படுகின்றது.

### ஸூறாவும் அதன் பொருளும்



سُورَةُ الْفِيلِ مَكِّيَّةٌ وَهِيَ خَمْسُ آيَاتٍ

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

أَلَمْ تَرَ كَيْفَ فَعَلَ رَبُّكَ بِأَصْحَابِ الْفِيلِ ﴿١﴾ أَلَمْ يَجْعَلْ

كَيْدَهُمْ فِي تَضْلِيلٍ ﴿٢﴾ وَأَرْسَلَ عَلَيْهِمْ طَيْرًا أَبَابِيلَ ﴿٣﴾

تَرْمِيهِمْ بِحِجَارَةٍ مِنْ سِجِّيلٍ ﴿٤﴾ فَجَعَلَهُمْ كَعَصْفٍ مَأْكُولٍ ﴿٥﴾

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஓதுகின்றேன்.

1. (நபியே அப்ரஹாவின்) யானைப் படையினரை உமதிறைவன் எவ்வாறு (அழியச்) செய்தான் என்பதனை நீர் (நினைத்துப் பார்க்கவில்லையா?

2. அவர்களுடைய சூழ்ச்சியை அவன் வீணாக்கவில்லையா?

3. அவர்கள் மீது அபாபீல் பட்சிகளைக் கூட்டம் கூட்டமாக அவன் அனுப்பி வைத்தான்.

4. (கெட்டியான) சுடப்பட்ட சிறிய கற்களை அவை அவர்கள் மீது எறிந்தன.

5. அதனால், அவன் அவர்களைப் பறவைகளால் கொத்தித் தின்னப்பட்ட கதிர்களைப் போல ஆக்கி (அழித்துவிட்டான்).

**பயிற்சி**

1. மக்காவில் இறக்கப்பட்ட ஸூறாக்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

2. யானை வருடத்தை அரபியில் எவ்வாறு அழைப்பர்?

3. யானைப்படையை அழித்த பறவைக்கூட்டத்தின் பெயர் என்ன?


4. அல்லாஹ், யானைப் படையிடமிருந்து கஃபாவைக் காப்பாற்றிய முறையை சுருக்கமாக விபரிக்குக.

**செயற்பாடு**

ஸூறதுல் பீலையும், அதன் பொருளையும் மனனமிடுக.

# 20

# அல் ஹதீஸ்




அல்லாஹ் நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களை மனிதர்களுக்கு வழிகாட்டுவதற்காக அனுப்பி வைத்தான். அத்தோடு நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்குர்ஆனையும் இறக்கிவைத்தான். அல்குர்ஆனின் போதனைகளை மக்களுக்கு எத்தி வைத்த முஹம்மத் நபி ஸல்லல்லாஹுு அலைஹிவஸல்லம் அவர்களின் வாழ்க்கை முழு மனித சமூகத்துக்கும் முன்மாதிரியாக அமைந்துள்ளது. இவ் வாழ்க்கை முறை 'ஸுன்னா' என அழைக்கப்படுகின்றது.

இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களாக அல்குர்ஆனும் ஸுன்னாவும் காணப்படுகின்றன. அல்லாஹ்வின் விசேட ஞானத்துடன் தொடர்பு பட்டிருப்பதால் அல்குர்ஆன் முதலாவது சட்ட மூலாதாரமாக ஏற்றுக்கொள்ளப் படுகின்றது. அல்குர்ஆனின் விளக்கமாகவும் நடைமுறையாகவும் ஸுன்னா அமைவதால் அது இரண்டாவது மூலாதாரமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

**ஹதீஸ் என்பது** நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சொல், செயல், அங்கீகாரம், பண்புகள், வர்ணணைகள் என்பவற்றைக் குறிக்கின்றது. அதாவது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சொன்னவை, செய்தவை, செய்யுமாறு ஏவியவை மற்றும் அவர்களது கட்டளைகள், கடிதங்கள், உடன்படிக்கைகள், அங்கீகாரங்கள் யாவும் ஹதீஸ்கள் எனப்படுகின்றன. ஹதீஸ், ஸுன்னா ஆகிய இரு சொற்களும் பொதுவாக ஹதீஸ் துறை அறிஞர்களால் ஒரே கருத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

அல்குர்ஆனுக்கு விளக்கமாகவே ஹதீஸ் அமைந்துள்ளது. ஹதீஸ் இல்லாமல் அல்குர்ஆனை விளங்க முடியாது. அல் குர்ஆனில் சுருக்கமாக கூறப்பட்ட விடயங்களுக்கு விரிவான விளக்கம் ஹதீஸின் மூலமே கிடைக்கின்றது. அல்லாஹ் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை அல்குர்ஆனைக் கற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்புடன் அனுப்பிவைத்தான். அதனால் அல்குர்ஆனின் நடைமுறை வடிவமாகவே ஹதீஸ் காணப்படுகின்து. ஆகவே, ஸஹீஹான ஹதீஸ் ஒருபோதும் அல்குர்ஆனுக்கு மாற்றமாக அமையாது.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களது காலத்தில் ஸஹாபாக்கள் மனனமிடுவதன் மூலம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஹதீஸ்களைப் பாதுகாத்து வந்தனர். ஸஹாபாக்களில் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா, இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு, அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு என்போர் ஹதீஸ் துறையில் சிறப்புற்று விளங்கினர். இதன் பின்னர் பிற்காலத்தில் தோன்றிய அறிஞர்களினால் ஹதீஸ்கள் நூலுருவில் தொகுக்கப்பட்டன. அவற்றுள் அஸ்ஸிஹாஹுஸ் ஸித்தா என வழங்கப்படும் 6 ஹதீஸ் கிரந்தங்கள் மிக முக்கியமானவையாகும்.

அல்குர்ஆனும் ஸுன்னாவும் ஹதீஸின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறுகின்றன. அல்குர்ஆனில் அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

'ரஸூல் உங்களிடம் கொண்டு வந்தவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள் அவர் தடுத்தவற்றைத் தவிர்ந்துகொள்ளுங்கள்' (59:7) மற்றுமொறு இடத்தில் 'அல்லாஹ் வின் தூதரிடத்தில் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது' (33:21) என்றும் அல்குர்ஆன் ஸுன்னாவின் முக்கியத்துவத்தை குறிப்பிடுகின்றது.

அதேபோன்று 'நான் உங்கள் மத்தியில் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். அவையிரண்டையும் பின்பற்றும் காலமெல்லாம் நீங்கள்

வழிதவற மாட்டீர்கள் ஒன்று அல்லாஹ்வின் வேதம். அடுத்தது எனது வழிமுறை' (முவத்தா) எனவும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

எனவே ஹதீஸ்களைக் கற்பதும் பின்பற்றுவதும் அதனைப் பாது காப்பதும் போதிப்பதும் எமது கடமையாகும். இப்போது நாங்கள் சில ஹதீஸ்களை நோக்குவோம்.

### ஹதீஸ் 1

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ، قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ:

''إِنَّ اللَّهَ لا يَنْظُرُ إِلَى صُوَرِكُمْ وَأَمْوَالِكُمْ وَلَكِنْ يَنْظُرُ

إِلَى قُلُوبِكُمْ وَأَعْمَالِكُمْ'' (متفق عليه)

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள் நிச்சயமாக அல்லாஹுத் தஆலா உங்கள் தோற்றங்களையோ, செல்வங்களையோ பார்க்க மாட்டான் எனினும் உங்கள் உள்ளங்களையும் செயல்களையுமே பார்க்கின்றான்'. (புகாரி, முஸ்லிம்)

### ஹதீஸ் 2

عَنْ أَبِيْ مُوْسَى الْأَشْعَرِي رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللَّهِ صَلَّى اللَّهُ

عَلَيْهِ وَسَلَّمَ: ''أَطْعِمُوا الْجَائِعَ، وَعُوْدُوْا الْمَرِيْضَ، وَفُكُّوْا الْعَانِيَ''

(رواه البخاري)

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ மூஸா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள் 'பசித்தவருக்கு உணவளியுங்கள். நோயாளியை நோய் விசாரியுங்கள். கைதியின் விடுதலைக்கு உதவுங்கள்'. (புகாரி)

## ஹதீஸ் 3

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ، قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ:

"وَالَّذِي نَفْسِي بِيَدِهِ لاَ تَدْخُلُوا الْجَنَّةَ حَتَّى تُؤْمِنُوا ، وَلاَ تُؤْمِنُوا

حَتَّى تَحَابُّوا ، أَوَلاَ أَدُلُّكُمْ عَلَى شَيْءٍ إِذَا فَعَلْتُمُوهُ تَحَابَبْتُمْ ؟

أَفْشُوا السَّلاَمَ بَيْنَكُمْ". (رواه مسلم)

*நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். 'எனது உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக நீங்கள் ஈமான் கொள்ளும் வரை சுவர்க்கத்தில் நுழைய மாட்டீர்கள். நீங்கள் ஒருவருக்கு ஒருவர் அன்பு கொள்ளும் வரை ஈமான் கொள்ள மாட்டீர்கள். நீங்கள் ஒரு விஷயத்தை செய்தால் உங்களுக்கு மத்தியில் அன்பு ஏற்பட்டுவிடும் அதை நான் உங்களுக்குக் கூறவா? எனக் கேட்டுவிட்டு 'உங்களுக்கு மத்தியில் ஸலாத்தைப் பரப்புங்கள்' என்று கூறினார்கள். (முஸ்லிம்)*

## ஹதீஸ் 4

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ مَسْعُودٍ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ:

قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ:

" وَإِنَّ الْكَذِبَ يَهْدِي إِلَى الْفُجُورِ وَإِنَّ الْفُجُورَ يَهْدِي إِلَى النَّارِ

وَإِنَّ الرَّجُلَ لَيَكْذِبُ حَتَّى يُكْتَبَ عِنْدَ اللَّهِ كَذَّابًا " [البخاري]

*நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதாக இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள் 'நிச்சயமாக பொய் பாவத்தின் பக்கம் வழிகாட்டும் பாவம் நரகத்தின் பக்கம் வழிகாட்டும். ஒருவர் அதிகம் பொய் உரைப்பவராக இருந்தால் அவர் அல்லாஹ்விடத்தில் பொய்யர் என எழுதப்படுவார்'. (புகாரி)*

**பயிற்சி**

**சரி பிழை கூறுக.**

1. அல்ஹதீஸ் இஸ்லாத்தின் முதலாவது சட்டமூலாதாரமாகும். (   )
2. அஸ் ஸிஹாஹுஸ் ஸித்தா என்பது குர்ஆன் விளக்கவுரை நூலாகும். (   )
3. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கை முறை சுன்னா என அழைக்கப்படும். (   )
4. ஹதீஸ், ஸுன்னா என்பன இருவேறுபட்ட சொற்களாகும். (   )
5. ஹதீஸிற்கு விளக்கமாக அல்குர்ஆன் அமைந்துள்ளது. (   )
6. ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹதீஸ்களை நூருவில் தொகுத்தார்கள். (   )
7. இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹதீஸ்களை மனனம் செய்தவருள் முக்கியமானவராவார். (   )
8. அல்லாஹ் மனிதர்களின் உள்ளங்களையே பார்க்கிறான். (   )

**செயற்பாடு**

நீர் கற்ற ஹதீஸ்களையும், அவற்றின் பொருள்களையும் பிரிஸ்டல் அட்டையில் எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

# 21

# ஸீரதுர் ரஸூல் - I

## முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறப்பும் இளமையும்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறப்பதற்கு சில நாட்களுக்கு முன் யெமன் நாட்டிலிருந்து ஆப்றஹா எனும் மன்னன் பெரும் படையுடன் கஃபாவைத் தாக்க வந்தான். எனினும், அல்லாஹுத் தஆலா அபாபீல் எனும் சிறிய பறவைகள் மூலம் அப்படையை அழித்தொழித்தான். இவ்வற்புதம் நிகழ்ந்த ஆண்டு 'யானை வருடம்' (ஆமுல் பீல்) எனப்படுகின்றது. இவ்வாண்டில் றபீஉல் அவ்வல் மாதம் பிறை 12 திங்கட்கிழமை அதிகாலையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்தார்கள். இது கி.பி 571 ஆம் ஆண்டு எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தந்தையின் பெயர் அப்துல்லாஹ், தாயாரின் பெயர் ஆமினா.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறப்பதற்கு முன்பே தந்தையை இழந்தார்கள். அரேபியரின் வழக்கப்படி ஹலீமத்துஸ் ஸஃதிய்யா என்பவரிடம் பாலூட்டி வளர்க்க ஒப்படைக்கப்பட்டார்கள். சுமார் நான்கு வருடங்கள் ஹலீமாவின் பராமரிப்பில் வளர்ந்தார்கள். பின்னர் தாயார் ஆமினாவிடம் ஒப்படைக்கப்பட்டார்கள்.

ஆறாவது வயதில் தாயாருடன் உறவினரைத் தரிசிப்பதற்காக யத்ரிபுக்குப் பயணம் செய்தார்கள். யத்ரிபிலிருந்து மக்காவுக்குத் திரும்பி வரும் வழியில் 'அப்வா' எனும் இடத்தில் தாயார் ஆமினா வபாத்தாகிவிட்டார்கள். பின்னர் சிறுவர் முஹம்மதைப் பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்கள் பராமரித்தார்கள். எட்டாவது வயதில் பாட்டனாரும் மரணித்து விட்டார். அதன் பின்னர் தந்தையின் சகோதரர் அபூதாலிபினால் பராமரிக்கப்பட்டார்.

அபூதாலிப் ஏழையாக இருந்த போதிலும் சிறுவர் முஹம்மதைத் தன் பிள்ளைகளை விடவும் அன்புடன் ஆதரித்து அரவணைத்தார். அப்போது நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது ஒன்றுவிட்ட சகோதரருடன் சேர்ந்து சென்று அபூதாலிபின் ஆடுகளை மேய்த்து வந்தார்கள்.

பன்னிரண்டாவது வயதில் தந்தையின் சகோதரர் அபூதாலிபுடன் வியாபாரத்துக்காக சிரியாவுக்குச் சென்றார். சிரியாவின் தென்பகுதியை அண்மித்தபோது புஸ்ரா என்ற இடத்தில் புஹைரா என்ற கிறிஸ்தவ மதகுரு சிறுவர் முஹம்மதிடம் இருந்த நுபுவ்வத்தின் அடையாளங்களைக் கண்டார். இதனால் அம் மதகுரு சிறுவர் முஹம்மதுவை வரவேற்று கௌரவித்து விருந்தளித்து உபசரித்தார். யூதர்களினால் இச்சிறுவனுக்கு ஆபத்து நேரலாம் என எச்சரித்து அவரை மக்காவுக்குத் திருப்பி அழைத்துச் செல்லுமாறு அபூதாலிபுக்கு அறிவுறுத்தினார்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்து வளர்ந்த அன்றைய அரேபியாவில் மக்கள் அறியாமையில் ஆழ்ந்திருந்தனர். மது, சூது, கொள்ளை, பழிக்குப் பழி போன்ற பாவ காரியங்களில் சர்வசாதாரணமாக ஈடுபட்டனர், அல்லாஹ்வின படைப்புகளான மரங்கள், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், நெருப்பு போன்றவற்றை வணங்கினர்.

ஒழுங்கான குடும்ப அமைப்போ சமூக அமைப்போ அங்கு காணப்படவில்லை. பெண்கள் மிக இழிவாகவே நடத்தப்பட்டனர். மக்கள் கோத்திரங்களாகப் பிரிந்திருந்தனர். அற்ப காரணங்களுக்காக அக்கோத்திரங்கள் தமக்கிடையே போரிட்டுக்கொண்டன. அதிகமான மக்கள் எழுத வாசிக்கத் தெரியாத ‘உம்மீ’ க்களாகவே இருந்தனர். இத்தகைய தன்மைகளைக் கொண்ட அன்றைய அரேபியாவின் சமூகநிலையை ‘அய்யாமுல் ஜாஹிலிய்யா’ அறியாமைக் காலம் எனக் குறிப்பிடுவர்.

மக்காவின் தீய சூழலில் வாழ்ந்த சிறுவர் முஹம்மதிடம் சிறுபராயம் முதலே நல்லொழுக்கமும் அருங்குணங்களும் காணப்பட்டன. அன்னார் எவரையும் எவ்வுயிரினத்தையும் துன்புறுத்தியது கிடையாது. அன்றைய அரபு மக்கள் செய்து வந்த பாவ காரியங்கள், கேளிக்கைகள், வீண் விளையாட்டுக்கள் எவற்றிலும் அவர் ஈடுபடவில்லை. சிலை வணக்கத்தை வெறுத்து ஒதுக்கினார். மற்றவர்களுக்கு முன்மாதிரியாக, நற்குணசீலராக வாழ்ந்தார்.

பொய் பேசவில்லை. எப்பொழுதும் உண்மையையே உரைத்தார். இதனால் ‘அஸ்ஸாதிக்’ உண்மையாளர் என்று அழைக்கப்பட்டார். எவருக்கும் துரோகம் செய்யாது நம்பிக்கையோடும் நாணயத்தோடும் நடந்து கொண்டார். இதனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘அல்அமீன்’ நம்பிக்கைகுரியவர் என அழைக்கப் பட்டார்கள்.

## வாலிபப் பருவம்

முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது வாலிபப் பருவத்தில் சேற்றில் முளைத்த செந்தாமரையாக சிறப்புற்றிருந் தார்கள். அன்றைய சூழலில் அவர்கள் ஒருபோதும் சோம்பேறியாக இருந்த தில்லை. பகலில் உழைத்தார்கள்; இரவில் சமூகத்தைப் பற்றிச் சிந்தனை செய்தார்கள். அன்றைய சமூகத்தில் காணப்பட்ட தவறான நடவடிக் கைகளினால் கவரப்பட்டு அவர் வழிதவறவில்லை. அனைவராலும் அன்பாகவும் கௌரவமாகவும் போற்றப்பட்டார்கள்.

**ஹர்புல் புஜ்ஜாரும் (பிஜார்), ஹில்புல் புழூல் உருவாக்கமும்:** பொதுவாக அரேபிய மக்கள் கோத்திரமுறை வாழ்க்கையையே மேற்கொண்டனர். இதனால் கோத்திரத்தவர்களிடையே போட்டி, பொறாமை, குரோதம், வஞ்ச கம் என்பன நிலவின. அற்ப காரணங்களுக்காக வருடக் கணக்கில் சண்டையிட்டுக் கொண்டனர். எதிரியைப் பழிவாங்குவதில் ஈவிரக்கமற்ற முறையில் நடந்துகொண்டனர். இந்த வகையில் பல வருடங்களாக மக்காவில் ஹர்புல் புஜ்ஜார் (பிஜார்) எனும் சண்டை இடம்பெற்று வந்தது. இச்ச ண்டையால் மக்காவின் சொத்துக்கள் மற்றும் மக்களுக்குப் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டது.

இதனை உணர்ந்த சில நல்லுள்ளம் படைத்த ஊர்த் தலைவர்களால் மக்காவை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. அர்த்தமற்ற சண்டைகள் மூளாமல் இருப்பதை உத்தரவாதப்படுத்தவும் சமூக நலத்திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இது ஹில்புல் புழூல் என வரலாற்றில்



கஃபதுல்லாஹ்வின் பழைய தோற்றம்

இடம்பெற்றது. நியாயமின்றி நடைபெற்ற சண்டையில் கலந்துகொள்ளாது விலகியிருந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சண்டையின் பிற்பாடு ஏற்படுத்தப்பட்ட சமூகநலத் திட்டத்தில் ஆர்வத்துடன் இணைந்து கொண்டார்கள்.

**திருமணம்:** நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது வாலிபப் பருவத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டார்கள். நம்பிக்கை, நாணயம், நேர்மை மிக்க வியாபாரியாகத் திகழ்ந்தார்கள். ஒரு முறை கதீஜா என்ற பெண் வர்த்தகரின் வர்த்தகப் பங்காளியாக சிரியாவுக்குச் சென்றார்கள். நாணயத்துடன் நடந்து அதிக இலாபமீட்டினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் காணப்பட்ட நற்குணங்களால் கவரப்பட்ட கதீஜா அவரை மணமுடிக்க விரும்பினார்கள். குடும்பத்தாரின் சம்மதத்துடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வயது இருபத்தைந்து. கதீஜா அம்மையாருக்கு வயது நாற்பது.

**கஃபா புனர் நிர்மாணம்:** நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 35 ஆவது வயதில் கஃபா புனரமைக்கப்பட்டது. அப்போது ‘ஹஜருல் அஸ்வத்’ எனும் கல்லைப் பதிப்பது தொடர்பாகக் கோத்திரத் தலைவர்களிடையே போட்டியேற்பட்டது. நிறுத்தப்பட்டிருந்த கோத்திரப் போர் மீண்டும் மூண்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. அதனைத் தவிர்ப்பதற்காகப் பொது முடிவுக்குக் குறைஷியர் வந்தனர். அதாவது யார் முதலில் கஃபாவுக்கு வருகிறாரோ, அவரின் முடிவின்படி செயற்படுவோம் என்ற முடிவுக்கு வந்தனர். அடுத்தநாள் காலை எல்லோரும் எதிர்பார்த்திருந்த அம்மனிதர் கஃபாவுக்கு வந்தார். அவர்தான் முஹம்மத் என்ற இளைஞர் ஆவார்.

மக்காவிலேயே மிக நல்லவர் வந்துவிட்டார் எனக்கூறி, கோத்திரத் தலைவர்கள் அகமகிழ்ந்தனர். நீதியான, நடுநிலையான முடிவு கிடைக்கும் என நம்பினர். அவர்கள் எதிர்பார்த்தது போலவே முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அழகான முடிவொன்றைச் சொன்னார்கள். அதாவது அக்கல்லினை ஒரு துணியில் வைத்து கோத்திரத் தலைவர்களைத் துணியின் முலை ஓரங்களால் பிடித்து தூக்கச் சொன்னார்கள். அவ்வாறே அவர்களும் தூக்கினர். கல்லை வைக்க வேண்டிய இடம் வந்ததும் முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அத்துணியிலிருந்த கல்லை உரிய இடத்தில் வைத்தார்கள். இந்த புத்திசாதுரியமான முடிவு மக்காவைக் குழப்பத்திலிருந்து பாதுகாத்தது.

**பயிற்சி**

கீழே அடைப்பினுள் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து பொருத்தமான விடையைத் தெரிந்து வெற்றிடங்களை நிரப்புக.

(ஹலீமா, யானை வருடம், வீண் விளையாட்டுக்கள், சிரியா, அப்துல் முத்தலிப், ஜாஹிலிய்யாக் காலம், ஆறாவது, போர்)

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்து வளர்ந்த அன்றைய அரேபியாவின் சமூக நிலையை ......................... எனக் குறிப்பிடுவர்.

2. அற்ப காரணங்களுக்காக ஜாஹிலிய்யாக் காலத்தில் கோத்திரங்களுக்கிடையில் ...... மூண்டது.

3. கஃபாவைத் தாக்க வந்த ஆப்ரஹாவின் யானைப்படை அழித்தொழிக்கப்பட்ட வருடம் .................................. எனப்படுகின்றது.

4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பாலூட்டி பராமரித்த கிராமத்துப்பெண் ................. ஆவார்.

5. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ............................ வயதில் தாயார் ஆமினா மரணித்தார்கள்.

6. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் எட்டாவது வயதில் பாட்டனார் ..................... மரணித்தார்கள்.

7. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது பன்னிரண்டாவது வயதில் தந்தையின் சகோதரர் அபூதாலிபுடன் வியாபாரத்திற்காக ............................ நாட்டுக்குச் சென்றார்கள்.

8. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது இளமைக்காலத்தில் பாவ காரியங்கள், கேளிக்கைகள் ............... என்பவற்றிலும் ஈடுபடவில்லை.

# 22

# ஸீரதுர் ரஸூல் - 2


## நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மக்கா வாழ்க்கை

### வஹி அருளப்படலும் பிரச்சாரமும்

முன்னைய பாடத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பிறப்பு, இளமைக்கால முன்மாதிரிகளைப் பற்றிக் கற்ற நாம், இப்பாடத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வஹீ அருளப்பட்ட வரலாற்றையும் பிரச்சாரத்தையும் பற்றி அறிந்துகொள்வோம்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது நாற்பதாவது வயதை நெருங்கும் போது சமூதாயத்தின் நிலை கண்டு பெருங் கவலைப் பட்டார்கள். சமூகத்தைச் சீர்திருத்துவதற்காகத் தீவிரமாகச் சிந்தித்தார்கள். தனிமையை நாடினார்கள். இதற்காகக் கஃபாவிலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள ஹிரா எனும் குகைக்கு அடிக்கடி சென்று வந்தார்கள். அங்கு தனியாகத் தங்கியிருந்து அல்லாஹ்வைத் தியானித்தார்கள்.

இவ்வாறு மூன்று வருடங்கள் கடந்தன. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு நல்ல கனவுகள் தென்பட ஆரம்பித்தன. பின்னர் ரமழானில் ஒரு தினத்தில் ஹிராவில் இருந்தபோது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவர்முன் தோன்றி 'இக்ரஃ - ஓதுவீராக' எனக் கூறினார்கள். 'எனக்கு ஓதத் தெரியாதே' என நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பதிலளித்தார்கள். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் மீண்டும் மீண்டும் மூன்று முறை அவர்களைக் கட்டியணைத்து ஓதச் சொன்னார்கள். அப்போதும் 'எனக்கு ஓதத் தெரியாது' என்றே பதிலளித்தார்கள். மூன்றாவது முறை ஸூரா அலக்கின் முதல் ஐந்து ஆயத்துக்களையும் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஓதிக்காட்டினார்கள். நபி ஸல்லல்லாஹு



அலைஹிவஸல்லம் அவர்கள் அதனை மனனமிட்டுக் கொண்டார்கள். இதுவே நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குக் கிடைத்த முதல் வஹீயாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இந்நிகழ்வால் அதிர்ச்சியடைந்து நடுநடுங்கியவாறு வீட்டுக்கு விரைந்தார்கள். தன்னைப் போர்த்துமாறு மனைவி கதீஜாவைக் கேட்டுக் கொண்டார்கள். மனைவி கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் போர்த்தி ஆறுதல் படுத்தி ஹிராவில் நடந்தவற்றை விசாரித்தார்கள். உடனே தனது உறவினரும் முன்னைய வேதங்களை நன்கறிந்தவருமான வரக்கத் இப்னு நௌபல் என்பவரிடம் அழைத்துச் சென்றார்கள். அவரிடம் நிகழ்ந்தவற்றை விபரித்தார்கள். இவற்றை கேட்ட வரகத் இப்னு நௌபல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு 'நுபுவ்வத்' நபிப் பட்டம் கிடைத்திருக்கின்றதெனவும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தவர் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் என்றும், இவர்தான் முன்னைய நபிமார்களுக்கும் தூது கொண்டு சென்ற மலக்கு எனவும் விளக்கமளித்தார். இதனைக் கேட்ட கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நபியாக ஏற்றுக்கொண்டார்கள்.

## நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பிரசாரம்

வஹீ அருளப்பட்ட திடுக்கத்திலிருந்து மீண்டதும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு இறை தூதை எத்தி வைக்கும் கட்டளையும்

வந்தது. அதனைத் தொடர்ந்து நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தமது பிரசாரத்தை ஆரம்பித்தார்கள். ஆரம்பத்தில் மிக நெருங்கிய உறவினர் நண்பர்களிடமே இஸ்லாத்தின் தூதை இரகசியமாக எத்தி வைத் தார்கள். இதன்போது முதன் முதலில் பெண்களில் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் ஆண்களில் அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் சிறுவர்களில் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் மற்றும் பலரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

நுபுவ்வத் கிடைக்கப்பெற்று முதல் மூன்று வருடங்களும் இரகசியமாகவே இறைத்தூதை முன்வைத்தார்கள். பின் ஸபா மலை மீது ஏறிப் பகிரங்கமாக இஸ்லாத்தை முன்வைத்தார்கள். அன்று முதல் அபூலஹப் உட்பட பலர் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை எதிர்க்க ஆரம்பித்தார்கள். **அஸ்ஸாதிக், அல்அமீன்** எனப் புகழப்பட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை சாஸ்திரக்காரன், சூனியக்காரன், கவிஞன் என்றெல்லாம் வசை பாடினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் செல்லும் பாதையில் முட்களைப் பரப்பினர்; தலையில் குப்பைகளைக் கொட்டினர்; தொழுது கொண்டிருந்த நபியின் தோளில் ஒட்டகையின் அழுகிய குடலை போட்டனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை மட்டுமன்றி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஸஹாபாக்களையும் துன்புறுத்தினர். இஸ்லாத்தை விட்டுவிடுமாறு அச்சுறுத்தினர். ஆனால், நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் முஸ்லிம்களும் இஸ்லாத்தை விட்டுக் கொடுக்கவில்லை. கோபமடைந்த மக்கா குறைஷியர் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களையும் அவரது குடும்பத்தாரையும் ஷிஃபு அபூதாலிப் எனும் பள்ளத்தாக்கில் தடுத்து வைத்துத் துன்பத்திற்குள்ளாக்கினர்.

இக்கால கட்டத்தில்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குப் பேருதவியாக இருந்த அவர்களது அன்பு மனைவி கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அம்மையார் வபாத்தானார்கள். அதைத் தொடர்ந்து ஓரிரு மாதங்களில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குப் பாதுகாப்பளித்து வந்த அபூ தாலிப் அவர்களும் மரணமானார்கள். இதனால் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பெரும் கவலைக் குள்ளானார்கள். இதனால் இவ் ஆண்டு 'ஆமுல் ஹுஸ்ன்' (துக்க ஆண்டு) எனப்படுகின்றது.

தொடர்ந்தும் பிரச்சாரத்தைக் கைவிடாத நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தாயிபுக்குச் சென்றார்கள். அங்கும் கல்லால்

அடித்துத் துன்புறுத்தப்பட்டார்கள். இவ்வாறு பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கிய நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு இறுதியில் கொலை அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது. பின்னர் ஹஜ்ஜுக்காக மக்காவுக்கு வரும் வெளிநாட்டவர்களை இரகசியமாகச் சந்தித்து இஸ்லாத்தை எத்தி வைத்தார்கள்.

இவ்வேளையில் யத்ரிப் வாசிகள் (மதீனா வாசிகள்) சிலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். இவர்களது அழைப்பின் பிரகாரமும் அல்லாஹ்வின் கட்டளைப்படியும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஸஹாபாக்களும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். இந்நிகழ்வு நுபுவ்வத் கிடைத்து பதின்மூன்றாம் வருடம் இடம்பெற்றது. அத்தோடு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மக்கா வாழ்வு முடிவுற்று மதீனா வாழ்வு ஆரம்பமானது.

**பயிற்சி**

அ பகுதிக்கு பொருத்தமான விடையை ஆ பகுதியிலிருந்து தெரிந்து உரிய இலக்கத்தை அடையாளக் குறியினுள் எழுதுக.

(அ)

1. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தியானித்த இடம் ( )
2. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு வஹி கொண்டு வந்த மலக்கு ( )
3. முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்ற பெண்மணி ( )
4. கதீஜா ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் உறவினரும் முன்னைய வேதங்களை நன்கறிந்தவரும் ( )
5. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் முதன்முதலில் பகிரங்கமாக இஸ்லாத்தை போதித்த இடம் ( )

(ஆ)

1. ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் 2. வரகத் பின் நௌபல் 3. ஸபா
4. ஹிரா 5. கதீஜா ரழியல்லாஹு அன்ஹா

# 23

# உம்மஹாத்துல் முஃமினீன்களை அறிந்து கொள்வோம்

'நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மனைவியர் விசுவாசிகளுக்கு அன்னையராவர்' என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. 'உம்மஹாதுல் முஃமினீன்' என்பதன் பொருள் 'இறை நம்பிக்கையாளர்களின் அன்னையர்' என்பதாகும். ஸஹாபாப் பெண்களில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மனைவியருக்கே இச்சிறப்புப் பெயர் வழங்கப்படுகின்றது. இவ்வகையில் உம்மஹாதுல் முஃமினீன் எனும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மனைவியராக பின்வருவோர் இருந்தனர்.

1. அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா
2. அன்னை ஸவ்தா ரழியல்லாஹு அன்ஹா
3. அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா
4. அன்னை ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா
5. அன்னை ஸைனப் பின்த் குஸைமா ரழியல்லாஹு அன்ஹா
6. அன்னை உம்மு ஸல்மா ரழியல்லாஹு அன்ஹா
7. அன்னை உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா
8. அன்னை ஜுவைரியா ரழியல்லாஹு அன்ஹா
9. அன்னை ஸைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா
10. அன்னை ஸபிய்யா ரழியல்லாஹு அன்ஹா
11. அன்னை மைமூனா ரழியல்லாஹு அன்ஹா




## அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

இவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முதல் மனைவி ஆவார்கள். இவர் மக்காவில் குறைஷிக் கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தை குவைலித் என்பவராவார்.

அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் திருமணம் செய்வதற்கு முன் வேறு இருவரை மணமுடித்திருந்தார்கள். அபூஹாலா, அதீக் ஆகிய அவ்விருவரும் ஒருவர் பின் ஒருவராக மரணமடைந்தனர். பின்னர் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் விதவையாகவே தமது வாழ்வைக் கழித்தார்கள். கணவரின் வர்த்தகத்தில் தனது கவனத்தைச் செலுத்தி வந்த கதீஜாவுக்கு வர்த்தகத்தை நடாத்திச் செல்ல நம்பிக்கைக்குரிய ஒருவர் தேவைப்பட்டார். அப்போது 'அல்அமீன்' (நம்பிக்கைக்குரியவர்) என எல்லோராலும் புகழப்பட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களே மிகப் பொருத்தமானவர் என்பதைத் தெரிந்து கொண்டார்கள். தமது வியாபாரப் பொருட்களை ஷாமுக்கு (சிரியா) கொண்டு சென்று வியாபாரம் மேற்கொள்ளும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் நம்பிக்கையோடும் நேர்மையோடும் வியாபாரம் நடத்தி பெரும் இலாபத்துடன் திரும்பினார்கள்.

கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், நற்குணங்களும் நல்லொழுக்கமும் கொண்டவர். பேரழகும் பெருந்தன்மையும் தாராள மனப்பாங்கும் கொண்டவர். விதவையான இவரைக் குறைஷித் தலைவர்கள் பலர் திருமணம் முடிக்க விரும்பினர். எனினும் அவர்கள் எவரையும் திருமணம் செய்ய விரும்பவில்லை. ஆனால், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நற்குணங்களால் கவரப்பட்டு அவரையே திருமணம் செய்ய விரும்பினார். பின்னர் திருமணப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இரு குடும்பத்தவர்களதும் சம்மதத்துடன் திருமணம் நிகழ்ந்தது. அப்போது கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வயது 40 ஆகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் சுமார் 25 வருடங்கள் இல்லறம் நடத்தினார்கள். அவர்களுக்கு ஆறு குழந்தைகள் பிறந்தனர். அவர்களுள் நால்வர் பெண்கள். இருவர் ஆண்கள்.

**பெண் பிள்ளைகள்**

ஸைனப் ரழியல்லாஹு அன்ஹா

ருகையா ரழியல்லாஹு அன்ஹா

உம்மு குல்தூம் ரழியல்லாஹு அன்ஹா

பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா

**ஆண் பிள்ளைகள்**

காஸிம்

அப்துல்லாஹ்

இரு ஆண் பிள்ளைகளும் இளம் பருவத்திலேயே மரணமடைந்து விட்டார்கள். பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் தவிர ஏனைய மூன்று பெண் பிள்ளைகளும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மரணிக்குமுன்பே மரணமடைந்து விட்டனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு நல்ல மனைவியாகவும் உற்ற துணைவியாகவும் கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் வாழ்ந்துள்ளார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வாழ்க்கையில் முக்கியமான கட்டங்களில் முதல் ஆலோசகராகவும் ஆதரவாளராகவும் செயற்பட்டார்கள். இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகத் தனது சொத்து செல்வங்களை அர்ப்பணம் செய்தார்கள். நபி

ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஹிறாக் குகையில் இருந்தபோது தேவையான உணவுகளை வழங்கி வந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு வஹீ கிடைத்த அதிர்ச்சியினால் பயந்து வீடு வந்தபோது அன்போடு அரவணைத்து ஆறுதல் கூறித் தேற்றினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு வழங்கப்பட்ட இறைத் தூதையும், இஸ்லாம் மார்க்கத்தையும் சந்தேகமின்றி முதன்முதலில் ஏற்றுக் கொண்டார்கள்.

குறைஷிக் காபிர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் ஸஹாபாக்களையும் துன்புறுத்தியபோது ஆறுதல்கூறி உதவி புரிந்தார்கள். ஷிஃபு அபூதாலிப் எனும் பள்ளத்தாக்கில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் குடும்பத்தாரும் தடுத்து வைக்கப்பட்டு கொடுமைப்படுத்தப் பட்டபோது கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடனிருந்தார்கள்.

இவ்வாறு சிறந்த மனைவியாக நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடன் வாழ்ந்து இஸ்லாத்துக்காகத் தன்னை அர்ப்பணித்த கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், நுபுவ்வத் பத்தாம் ஆண்டில் மரணமடைந்தார்கள். அப்போது அவர்களின் வயது 65. அவர்கள் இறந்த ஆண்டு 'ஆமுல் ஹுஸ்ன்' - துக்க ஆண்டு என அழைக்கப்படுகின்றது. 'தாஹிரா' (பரிசுத்தவாளர்) எனும் சிறப்புப் பெயரைக்கொண்ட அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் முன்மாதிரிகளை ஏற்று நடக்க நாமும் முயற்சிப்போம்.

### அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அபூபக்ர் ஸித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் இளைய மகள். இவரது தாய் உம்மு ரூமான் ஆவார். இவர்கள் நுபுவ்வத் இரண்டாம் ஆண்டு பிறந்தார்கள். அபூபக்ர் ஸித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் உற்ற நண்பர்கள். இருவரும் சகோதரர்களைப் போல் வாழ்ந்து வந்தார்கள். அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார்கள்.

நுபுவ்வத் பத்தாம் ஆண்டு ஷவ்வால் மாதம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் முடித்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மணமுடித்தவர்களில் கன்னிப்பெண் இவர் மட்டுமே. ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் பயபக்தியுடையவர். அதிகமாக நோன்பு நோற்பவர்.

தானதர்மம் செய்பவர். மிக விவேகமுள்ளவர். கல்வியிலும், ஞானத்திலும் சிறந்து விளங்கிய இவர், பெண்களில் அதிகமான ஹதீஸ்களை அறிவித்தவராவார். ஸஹாபாக்களுக்கு ஏற்படும் மார்க்கப் பிரச்சனைகளுக்குத் தீர்வு வழங்கியுள்ளார்கள். பெண்கள் தொடர்பான அநேக விடயங்களுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் கேட்டு விளக்கமளித்துள்ளார்கள்.

இவருக்கு 'அஸ்ஸித்தீக்கா', 'ஹுமைரா' எனும் சிறப்புப் பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தன. துணிவு, வீரம், பொறுமை போன்ற நற்பண்புகள் இவரிடம் காணப்பட்டன. பொதுப்பணி செய்வதில் மிகவும் ஆர்வம் காட்டினார்கள். உஹத் யுத்தத்தில் காயமுற்றோருக்குக் குடிநீர் வழங்கி உதவி புரிந்தார்கள். அடிமைகள் பலரை விலைக்கு வாங்கி விடுதலையளித்துள்ளார்கள்.

ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் இல்லத்திலேயே நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வபாத்தானார்கள். இவ்வாறு பல சிறப்புகளுக்குரிய ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹிஜ்ரி 58 ஆம் ஆண்டு தனது 68 ஆவது வயதில் வபாத்தானார்கள்.

**பயிற்சி**

சுருக்கமான விடை தருக

1. 'உம்மஹாத்துல் முஃமினீன்' என்போர் யாவர்?
2. கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் தந்தையின் பெயர் என்ன?
3. கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் எத்தனையாவது வயதில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் திருமணம் செய்தார்கள்?
4. கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
5. ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் தந்தை யார்?
6. ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் தனிச் சிறப்புப் பெயர்கள் இரண்டைக் குறிப்பிடுக.
7. ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
8. ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு மரணித்தார்கள்?

# 24

# நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உத்தமத் தோழர்களில் இருவர்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தமது வாழ்நாளில் நேரடியாகக் கண்ட முஸ்லிம்கள் ஸஹாபாக்கள் எனப்படுகின்றனர். இவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் நெருங்கியிருந்து இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகத் தமது உயிர், உடல், பொருள், சக்தி, நேரம், அறிவு, சுகம் போன்ற அனைத்தையும் அர்ப்பணித்தவர்களாவர். இதனால் தான் அல்லாஹ் அவர்கள் அனைவரையும் பொருந்திக் கொண்டான். இது பற்றி அல்லாஹ் அல்குர்ஆனிலும் பிரஸ்தாபித்திருக்கிறான்.

'அல்லாஹ்வும் அவர்களைப் பொருந்திக் கொண்டான். அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக்கொண்டார்கள்' (98:8)

ஆகவேதான் ஸஹாபாக்களின் பெயர்கள் உச்சரிக்கப்படும் பொழுது 'ரழியல்லாஹு அன்ஹு' என்று நாம் கூறுகின்றோம். இதன் பொருள் 'அல்லாஹ் அவர்களைப் பொருந்திக்கொண்டான்' என்பதாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் 'காலங்களில் சிறந்தது நானும் எனது ஸஹாபாக்களும் வாழ்ந்த காலமாகும்' எனக் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார்கள். இந்த ஹதீஸ் ஸஹாபாக்களின் சிறப்புக்குத் தக்க சான்றாகும்.

**ஸைத் பின் ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு:** மதீனாவில் பத்றுப் போருக்காக அழைப்பு விடுக்கப்பட்டது. ஒரு சிறுவனும் அங்கு வந்தான். சிறுவர்கள் போர் செய்ய அனுமதிக்கப் படமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டதும் ஏமாற்றமடைந்த அச்சிறுவன், தாயிடம் மீண்டான். அவனது கவலையை அவதானித்த தாய் குர்ஆன் ஸூராக்களைப் பாடமிட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒப்புவிக்குமாறு கூறினார். போரிலிருந்து மீண்டபோது அச்சிறுவன் தான் மனனமிட்டதை நபி ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம் அவர்களிடம் ஒப்புவித்தார். அப்போது நபி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரை கைதி ஒருவரிடம் அனுப்பி எழுத, வாசிக்கக் கற்றுக் கொள்ளுமாறு வேண்டினார்கள். குறுகிய காலத்தில் கற்றுக்கொண்ட அச்சிறுவன் பிற்காலத்தில் நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அபரானி, சுர்யானி மொழிகளையும் கற்றுக் கொண்டார்.

இச்சிறுவனே பிற்காலத்தில் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றிய ஸைத் பின் ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்களாவர். இவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு நெருக்கமாக வாழ்ந்த முக்கியமான ஸஹாபாக்களில் ஒருவராவார். அன்று அரபு நாட்டில் இருந்த எழுத வாசிக்கத் தெரிந்தவர்களில் இவரும் ஒருவர். அல்குர்ஆனை மிகவும் திறம்பட ஓதக் கூடியவரான இவர் மிகச் சிறந்த அறிஞருமாவார்.

அல்குர்ஆனைக் கற்பதிலும் அதனை மனனம் செய்வதிலும், பிரதி பண்ணிப் பாதுகாப்பதிலும் பெரும் பங்கு வகித்தவர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் ரமழானில் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அல்குர்ஆனை ஓதிக் காண்பித்தபோது அதனை உடனிருந்து செவிமடுத்தவர். அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் அல்குர்ஆனை ஒன்று சேர்த்து நூலுருப்படுத்திய இவர், உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் அல்குர்ஆனைப் பிரதி பண்ணுவதிலும் பங்களிப்பு செய்துள்ளார்.

**ஸல்மானுல் பாரிஸி ரழியல்லாஹு அன்ஹு:** ஸல்மானுல் பாரிஸி ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் ஸஹாபாக்களில் மிக முக்கியமான ஒருவர். ஸல்மான் என்ற பெயரையுடைய இவர் பாரசீக நாட்டைச் சேர்ந்தவர். இதனால் ஸல்மானுல் பாரிஸி என்று அழைக்கப்பட்டார். இவர் நெருப்பை வணங்கும் மஜூஸி குடும்பத்தில் பிறந்த ஒருவராவார்.

நெருப்பை வணங்கும் மார்க்கத்தில் உண்மையில்லை என்பதை இளமை யிலேயே ஸல்மான் அவர்கள் உணர்ந்திருந்தார்கள். இதனால் உண்மையான மார்க்கத்தை அறிந்துகொள்ள ஆவல் கொண்டார்கள். முதலில் கிறிஸ்தவ சமயத்தைப் பற்றி அறிந்து கொள்ள சிரியாவுக்குச் சென்றார்கள். அங்கு ஒரு கிறிஸ்தவ மதபோதகர் மூலம் அரேபியாவில் நபியொருவர் அனுப்பப்படுவார் என்ற செய்தியையும் அவரது குணப்பண்புளையும் அறிந்து கொண்டார்கள். இதனால் அவரைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் அவரில் மேலிட்டது. பின்னர் சிரியாவிலிருந்து ஒரு வியாபாரக் குழுவுடன் அரேபியாவுக்குச் சென்றார்கள். செல்லும் வழியில் அந்த வியாபாரக் குழுவினர் அவரை ஒரு யூதனுக்கு அடிமையாக விற்று விட்டனர். சில

நாட்களுக்குப் பின்னர் அந்த யூதனின் சிறிய தந்தையின் மகன் அவரை விலைக்கு வாங்கி மதீனாவுக்கு அழைத்துச் சென்றான். அச்சந்தர்ப்பத்தில் மதீனாவில் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இருப்பதை அறிந்து, அவர்களைக் காண ஆர்வம் கொண்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைச் சந்தித்தபோது நுபுவ்வத்தின் அடையாளங்களை அவர்களில் கண்டு கொண்டார்கள். இவர்கள்தான் அல்லாஹ்வின் இறுதித்தூதர் என்பதை உறுதியாக அறிந்துகொண்டார்கள். அதன் பின் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கரத்தைப் பற்றிப் பிடித்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த யூதனுக்கு உரிய தொகையைக் கொடுத்து அவர்களை விடுதலை செய்தார்கள்.

இவர்கள் மிகவும் எளிமையாகவே வாழ்ந்தார்கள். எளிமையையே விரும்பினார்கள். தமக்கென ஒரு குடிசையைக் கூட வைத்திருக்கவில்லை. தன் கைகளினாலேயே சம்பாதித்து உண்பார்கள். அவற்றிலிருந்து ஒரு பங்கை தர்மம் செய்பவராகவும் இருந்தார்கள். பிற்காலத்தில் 'மதாயின்' பகுதியின் தலைவராக நியமிக்கப்பட்டபோதும் தமது எளிமையைக் கைவிடவில்லை. இவர்கள் இஸ்லாத்துக்காக பல்வேறு பணிகளைச் செய்துள்ளார்கள். அகழி யுத்தத்தின்போது இவரது ஆலோசனைப் படியே அகழி தோண்டப்பட்டது. இவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்களின் ஹதீஸ்கள் பலவற்றைக் கற்று அவற்றை அறிவிப்புச் செய்துள்ளார்கள். இவ்வாறு இஸ்லாத்துக்காக அரும் பணியாற்றிய ஸல்மானுல் பாரிஸி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரி 35 ஆம் ஆண்டு மதாயினில் வபாத்தானார்கள்.

### பயிற்சி

1. ஸஹாபாக்கள் என்போர் யாவர்?
2. நபியவர்களால் சிறந்த காலம் என குறிப்பிடப்பட்ட காலப்பகுதி எது?
3. ஸைத் பின் ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கற்றுக்கொண்ட மொழிகள் இரண்டும் எவை?
4. ஸைத் பின் ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் பணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
5. ஸல்மானுல் பாரிஸி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
6. ஸஸ்மானுல் பாரிஸி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் குணப்பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

# 25

# அஹ்லுல் பைத்களை அறிந்து கொள்வோம்

நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தினரே அஹ்லுல் பைத்கள் என அழைக்கப்படுகின்றனர்.

நபி ஸல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவியர், அருமை மகள் பாத்திமா ரழியல்லாஹுு அன்ஹா, நபி ஸல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களின் மருமகனும் ஒன்றுவிட்ட சகோதரருமான அலி ரழியல்லாஹுு அன்ஹுு, சிறிய தந்தைகளான ஹம்ஸா ரழியல்லாஹுு அன்ஹுு, அப்பாஸ் ரழியல்லாஹுு அன்ஹுு, பேரப்பிள்ளைகளான ஹஸன் ரழியல்லாஹுு அன்ஹுு, ஹுுஸைன் ரழியல்லாஹுு அன்ஹுு போன்றோர் அஹ்லுல் பைத் களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களின் சிறப்புக்களையும் இஸ்லாத்திற்காக இவர்கள் ஆற்றிய பணிகளையும் அறிந்து கொள்ள வேண்டும். அத்துடன் அவர்களின் முன்மாதிரி களைப் பின்பற்றி நடப்பதுடன் அவர்களை நேசிப்பதும் அவசியமாகும்.

## பாத்திமா ரழியல்லாஹுு அன்ஹா அவர்கள்

இவர்கள் முஹம்மத் நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் கதீஜா ரழியல்லாஹுு அன்ஹா அவர்களுக்கும் மகளாக நுபுவ்வத்துக்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர் மக்காவில் பிறந்தார்கள். ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு அலி ரழியல்லாஹுு அன்ஹுு அவர்களைத் திருமணம் செய்தார்கள். இவர்களுக்கு ஹஸன், ஹுுஸைன் ரழியல்லாஹுு அன்ஹுுமா ஆகிய ஆண் குழந்தைகளும், மூன்று பெண் குழந்தைகளும் பிறந்தனர். பாத்திமா ரழியல்லாஹுு அன்ஹா அவர்கள் இஸ்லாத்தைப் பேணுதலாகக் கடைப்பிடித்து ஒழுகினார்கள். இவர்கள் கடும் வறுமையிலும் பொறுமையாக இருந்தார்கள். விருந்தினர்களை விருப்பத்துடன் உபசரித்தார்கள். தம்மிடம் இருப்பதை வாரி வழங்கினார்கள். ஒருமுறை தன்னிடமிருந்த கம்பளிப் போர்வையை யூதன்

ஒருவனுக்கு விற்றார்கள். அப்போது ஒரு யாசகன் வந்த போது, அப்பணத்தை அவனுக்கே வழங்கி விட்டார்கள்.

ஒருமுறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கஃபாவில் தொழுது கொண்டிருந்தார்கள். அப்போது குறைஷிக் காபிர்களில் சிலர் அவர்களது மேனியில் ஒட்டகையின் குடல்களைப் போட்டு விட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தலையை உயர்த்த முடியாமல் ஸுஜூதிலேயே இருந்தார்கள். அப்போது அங்கே வந்த மகள் பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா தன் கரத்தினாலேயே அவற்றை அகற்றினார்கள்.

தொழுகையிலும் நோன்பு நோற்பதிலும் அதிக காலத்தைக் கழித்தார்கள். அன்பும் ஆதரவும் ஈகையும் இரக்கமும் இவர்களிடம் காணப்பட்டன. ஆடம்பரத்தை வெறுத்து எளிமையை விரும்பினார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தனது மகள் பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் 'அகில உலகப் பெண்களின் தலைவி' என்றும் 'சுவர்க்கத்துப் பெண்களின் தலைவி' என்றும் பாராட்டப் பட்டார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வபாத்தாகி ஆறு மாதங்களின் பின்னர் தனது இருபத்தெட்டாவது வயதில் பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மதீனாவில் வபாத்தானார்கள்.

**பயிற்சி**

சுருக்கமான விடை தருக.

1. அஹ்லுல் பைத்கள் யாவர்?
2. பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் எப்போது பிறந்தார்கள்?
3. பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் குணப்பண்புகள் மூன்றினை குறிப்பிடுக.
4. பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வர்களால் எவ்வாறு புகழப்பட்டார்கள்?
5. பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் எத்தனையாவது வயதில் மரணித்தார்கள்?

# 26

# ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்

உலகின் முதல் மனிதன், ஆதம் அலைஹிஸ்ஸலாம் ஆவார். இதனால் அவர் 'அபுல் பஷர்' (மனித இனத்தின் தந்தை) எனவும் அழைக்கப்படுகின்றார்.

அல்லாஹ், ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மண்ணால் படைத்தான். பூமியின் எல்லாப் பகுதியிலிருந்தும் அதற்காக மண் பெறப்பட்டது. இதனால், மண்ணின் நிறத்துக்கும் தன்மைக்குமேற்ப சிலர் வெண்மையாகவும், சிலர் கருமையாகவும் சிலர் செவ்வையாகவும், சிலர் இடைப்பட்ட நிறங்களிலும் காணப்படுகின்றனர். சிலர் மென்மையானவர்களாகவும், சிலர் கடுமையானவர்களாகவும், சிலர் நடுநிலமையானவர்களாகவும் இருப்பதற்கு இதுவே காரணம் என ஹதீஸ் (அஹ்மத்) கூறுகின்றது.

அல்லாஹ், ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் படைக்குமுன், மலக்குகளை ஒளியினாலும் ஜின்களை நெருப்பினாலும் படைத்தான். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் படைக்கு முன், பூமியில் தனது பிரதிநிதியைப் படைக்கப்போவதாக மலக்குகளிடம் கூறினான். அதற்கு 'குழப்பம் செய்து இரத்தமோட்டக் கூடியவர்களையா நீ படைக்கப் போகிறாய்?' என மலக்குகள் தமது ஆதங்கத்தினை வெளிப்படுத்தினர். அப்போது 'நீங்கள் அறியாததை நான் அறிவேன்' என அல்லாஹ் பதிலளித்தான். மனித இனத்தின் தந்தையாக ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் படைத்தான்.

அல்லாஹ், ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு எல்லாப் படைப்பினங்களின் பெயர்களையும் கற்றுக்கொடுத்தான். பின்னர், மலக்கு களை அழைத்தான். அப்படைப்பினங்களின் பெயர்களைக் கூறுமாறு கேட் டான். அவர்களோ, 'நாம் உம்மைத் தூய்மைப்படுத்துகின்றோம். நீ கற்பித்ததைத் தவிர வேறெதனையும் நாம் அறிய மாட்டோம்' எனப் பதிலளித்தனர்.

பின்னர் அல்லாஹ்வின் கட்டளைப்படி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அப்பெயர்களைக் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து மலக்குகளை நோக்கி, ஆதமுக்கு ஸுஜூது செய்யுமாறு பணித்தான். எல்லா மலக்குகளும் ஸுஜூது செய்தனர். ஆனால் உடனிருந்த ஜின் இனத்தைச் சேர்ந்த இப்லீஸ் ஸுஜூது செய்ய மறுத்துவிட்டான். 'நான் ஆதமைவிட உயர்ந்தவன். ஆதம் மண்ணால் படைக்கப்பட்டவர். நான் நெருப்பால் படைக்கப்பட்டவன்' என்று காரணம் காட்டி, தனது செயலை நியாயப்படுத்தினான். அல்லாஹ்வின் கட்டளையை மீறியதால் அவன் சாபத்துக்குள்ளானான்.

இப்லீஸ் தான் சாபத்துக்கு உள்ளாவதற்குக் காரணமாக அமைந்த ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை வழிகெடுக்க உறுதி பூண்டான்.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், மனைவி ஹவ்வாவுடன் சுவனத்தில் இருந்தார்கள். அங்கு சுவன இன்பங்களை அனுபவிக்க அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால், குறிப்பிட்ட ஒரு மரத்தை மாத்திரம் அணுக வேண்டாமென தடுக்கப்பட்டார்கள். இப்லீஸ் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த எண்ணினான். குறிப்பிட்ட மரத்தின் பழங்களைச் சுவைத்தால் சுவனத்தில் நிரந்தரமாக வாழலாம் என அவர்களுக்கு ஆசையூட்டினான். அவனது மாய வார்த்தையை நம்பிய அவர்கள் உண்மையை மறந்து குறிப்பிட்ட மரத்தின் கனியைப் புசித்தனர். இதனால் அல்லாஹ்வின் கோபத்துக்கு உள்ளாகினர்.

அல்லாஹ் அவர்களைப் பூமிக்கு இறக்கினான். தம்பதியர் இருவரும் இரண்டு பிரதேசங்களில் இருந்தனர். தாம் செய்த தவறை நினைத்து நீண்ட காலம் அழுதனர். தம்மை மன்னிக்குமாறு அல்லாஹ்விடம் மன்றாடினர்.

'எங்கள் இறைவனே, எங்களுக்கு நாங்கள் தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு அருள்புரியாவிட்டால் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்' (7:23) என்று பிரார்த்தித்தார்கள்.

அல்லாஹ் அவர்களை மன்னித்தான். இருவரையும் ஓரிடத்தில் சந்திக்க வைத்தான். அவர்கள் குடும்ப வாழ்வை நடத்தினர். அவர்களுக்குத் தேவையான வாழ்க்கை வசதிகளை அல்லாஹ் ஏற்படுத்திக் கொடுத்தான். அவர்களிலிருந்தே மனித இனம் பெருகியது. ஆணும் பெண்ணுமாக இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றனர். அவர்களின் சந்ததிகளே பூமியில் வாழ்கின்ற மனிதர்களாவர்.

‘சூரியன் உதயமாகும் நாட்களில் மிகச் சிறந்தது வெள்ளிக் கிழமையாகும். அந்நாளில்தான் ஆதம் அலைஹிஸ்ஸலாம் படைக்கப்பட்டார்கள். சுவர்க்கத்தில் இருத்தப்பட்டார்கள். சுவர்க்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். அந்நாளிலேயே மரணமானார்கள்’. (முஸ்லிம்) என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். அவரது மரணத்தின் பின்னர், அவர் மகன் ஷீது அலைஹிஸ்ஸலாம் நபியானார்கள். மக்களுக்கு வழிகாட்டினார்கள். அவர்களுக்கு ஸுஹ்புகள் வழங்கப்பட்டன.

**பயிற்சி**

1. சுருக்கமான விடை தருக

   (அ) ஆதம் அலைஹிஸ்ஸலாம் எதனால் படைக்கப்பட்டார்கள்?

   (ஆ) அவர்களது மனைவியின் பெயர் என்ன?

2. அல்லாஹ்விடம் ஆதம் அலைஹிஸ்ஸலாம் (மனித இனம்) பற்றி மலக்குகள் தெரிவித்த கருத்தைத் தருக

3. இப்லீஸ், ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஸுஜூது செய்ய மறுத்தது ஏன்?

4. ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் வெள்ளிக் கிழமைக்குமுள்ள தொடர்பை எடுத்துக்காட்டுக.

5. மனிதர்களுக்கும், ஜின்களுக்குமிடையிலான வேறுபாடுகள் இரண்டைத் தருக

# 27

# அயலவருடன் நல்லுறவைப் பேணுவோம்

நாம் குடியிருக்கும் கிராமத்தில் அல்லது நகரத்தில் பல குடியிருப்புக் களைக் காண்கிறோம். அங்கு பல இன மக்கள் வாழ்கிறார்கள். எமது வீட்டிற்கு முன்னாலும், பின்னாலும், வலப்புறமாகவும், இடப்புறமாகவும் பல வீடுகள் காணப்படுகின்றன. அவற்றுள் சில எமக்கு அருகாமையிலும்,வேறு சில சற்றுத் தூரமாகவும் அமைந்திருகின்றன. இவ்வீடுகளில் வாழும் ஒவ்வொருவரும் மற்றவருக்கு அயலவர் ஆவர். அயலவரை அண்டை வீட் டார், பக்கத்து வீட்டார் எனவும் அழைப்பர்.

திடீர் ஆபத்து அல்லது தேவை ஏற்படும்போது முதலில் உதவிக்கு வருவோர்அயல் வீட்டினரேயாவர். ஆதலால் அயல் வீடுகளில் வாழ்வோருடன் எமது உறவைச் சீராக்கிக் கொள்ள வேண்டும். சிறிய சிறிய விடயங்களைப் பெரிதுபடுத்தவோ, அதற்காகக் கோபித்துக் கொள்ளவோ கூடாது. சண்டையிடக்கூடாது. அவர்களுடன் விட்டுக்கொடுத்து வாழவேண்டும். சில விடயங்களை மன்னித்து மறந்து விட வேண்டும். அப்போதுதான் நல்லுறவோடு வாழும் நிலை ஏற்படும். இதுதான் முஃமின்களின் பண்பாடாகும்.

அயலவர் மூன்று வகையில் அமைவர்.

1. அயல் வீடுகளில் வாழும் உறவினர்கள்.

2. அயல் வீடுகளில் வாழும் முஸ்லிம்கள்.

3. அயல் வீடுகளில் வாழும் முஸ்லிம் அல்லாதவர்கள்.

இம்மூன்று வகை அயலவர்களுடனும் நாம் நல்லுறவைக் கட்டியெழுப்ப வேண்டும்.




இவர்களில் எவரையும் ஒதுக்கி வைக்கக்கூடாது. அவர்களுடன் கனிவாக நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் தனது அயல் வீட்டாருடன் அழகிய முறையில் நடந்து கொள்பவரே, அல்லாஹ்விடத்தில் நல்ல அயல் வீட்டார் ஆவார்' (திர்மிதி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஒரு வீட்டாரைப் பற்றி அறிந்து கொள்ள அயல் வீட்டாரிடம் விசாரிப்பது வழக்கமாகும். ஏனெனில் அயல் வீட்டார்தான் பக்கத்து வீட்டார் பற்றி நன்கு அறிந்தவர்களாவர். ஒருவரைப் பற்றி அவரின் அயல் வீட்டார் சொல்லும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்க நிலையை அடையும். அயல் வீட்டாருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளக்கூடியவர் அனேகமாக நல்லவராகவே இருப்பார்.

ஒரு முறை, 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர் முஃமின் அல்ல. அல்லாஹ் மீது சத்தியமாக அவர் முஃமின் அல்ல. அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர் முஃமின் அல்ல', என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். 'யார் அவர்?' எனக் கேட்கப்பட்ட போது, 'எவருடைய தீங்கைக் கண்டு அயல் வீட்டார் பயப்படுகிறார்களோ அவர்தான்', என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சத்தியம் செய்து கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

அண்டை வீட்டில் வாழ்வோருக்கு அநீதி இழைப்பதை இஸ்லாம் பாரிய குற்றமாகக் கருதுகிறது. அண்டை வீட்டாரின் உரிமைகள், கடமைகள் பற்றி இஸ்லாம் அதிகமாக வலியுறுத்தியுள்ளது. ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அண்டை வீட்டார் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அடிக்கடி உபதேசம் செய்வார்கள். அண்டை வீட்டாரையும் வாரிசுரிமை உடையவர்களாக ஆக்கி விடுவார்களோ, என தாம் எண்ணும் அளவு அயல் வீட்டாரின் உரிமைகள் பற்றி ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வலியுறுத்திக் கொண்டே இருந்ததாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆதலால் அயல் வீட்டாருடன் நாம் கனிவாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஸலாம் கூற வேண்டும். உதவி தேவைப்பட்டால் உதவி செய்ய வேண்டும். கடன் கேட்டால் முடிந்த வரை கொடுத்துதவ வேண்டும். அவர்களுக்கு நல்லது ஏற்பட்டால் வாழ்த்துக் கூற வேண்டும். துன்பம் ஏற்பட்டால் ஆறுதல் கூற வேண்டும். நோயுற்றால் நோய் விசாரிக்க வேண்டும். மரணித்தால் ஜனாஸாவுக்குச் செல்ல வேண்டும். அன்பளிப்புகளைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

ஒற்றுமை பலமாகும். பிரிந்திருப்பது பலவீனமாகும். ஆதலால் அயல் வீட்டாருடன் சமாதானமாக வாழ வேண்டும். அவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் காரியங்களைச் செய்யக்கூடாது. அயல் வீட்டாரின் குறைகளைத் தேடித் திரியக்கூடாது. அவர்களைப் பற்றிப் புறம் பேசக்கூடாது. பொறாமைப்படக் கூடாது. குத்தலாகப் பேசக்கூடாது. கேலி செய்யக் கூடாது. இழிவு படுத்தக்கூடாது. இதனால் அயல் வீட்டு உறவு முறிந்து விடும்.

ஏழைகளுக்கும், உறவினரான அயல் வீட்டாருக்கும், உறவினர் அல்லாத அயல் வீட்டாருக்கும் நன்மை செய்யுமாறு அல்குர்ஆன் கூறுகிறது, ‘பக்கத்து வீட்டார் பசித்திருக்க தான் மட்டும் வயிறு நிறைய உண்பவர் உண்மை விசுவாசியல்ல’ (தபறானி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

சுற்றுச் சூழலில் அதிகமான வீடுகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் எமக்கு யாருடைய வாசற் கதவு மிக அருகில் இருக்கிறதோ, அவருக்கே முன்னுரிமை வழங்க வேண்டும் பின்பு அடுத்தவர், அதற்கடுத்தவர் எனத் தொடரலாம். இவ்வாறு அயலவரை மதித்து நடப்போம். அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுப்போம். அவர்களுடன் விட்டுக்கொடுத்து வாழ்வோம். அவர்களுக்கு எம்மாலான உதவிகளைச் செய்து அவர்களின் அன்பைப் பெறுவோம். நல்ல அயலவராக வாழ்வோம்.

**பயிற்சி**

அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிந்து வெற்றிடங்களை நிரப்புக.

(பசித்திருக்க, வாரிசுரிமையில், நோயுற்றால், உதவிக்கு, முஃமின், ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் , அயலவர், உறவு, மூன்று, அநீதி)

1. ஒரு வீட்டிற்கு நாற்புறமும் வாழ்வோர் ........................ ஆவர்.
2. அயலவர் ..................... வகைப்படுவர்.
3. அண்டை வீட்டாருக்கு ..................... செய்வது பாரிய குற்றமாகும்.
4. அண்டை வீட்டார் ............................... உரித்துடையவராக ஆக்கப்படுவாரோ எனுமளவு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பயந்தார்கள்.
5. அயல் வீட்டார் .......................... நோய் விசாரிக்க வேண்டும்.
6. அயல் வீட்டாரை இழிவாகப் பேசினால் ............. கெட்டுவிடும்.
7. பக்கத்து வீட்டார் ........... தான் மட்டும் உண்பவன் முஃமினல்ல.
8. ஆபத்துகளின் போது முதலில் ......... வருபவர் அயலவர் ஆவர்.
9. அண்டை வீட்டார் பற்றி ......... அவர்கள் நபிகளாரிடம் அடிக்கடி உபதேசம் செய்வார்கள்.
10. அண்டை வீட்டாருக்குத் தீங்கு செய்பவன் ................. அல்லன்.

**சுருக்கமான விடை தருக.**

1. அண்டை வீட்டாருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஐந்தினைத் தருக.
2. அண்டை வீட்டார் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள ஹதீஸ்கள் இரண்டைத் தருக.

# 28

# சுற்றாடலைப் பாதுகாப்போம்

ஆறாம் வகுப்பு மாணவர்கள் கல்விச் சுற்றுலா ஒன்றுக்காக மலைநாட்டிற்குச் சென்றிருந்தனர். அது ஓர் இனிய மாலை வேளை. நுவரெலியாவிலுள்ள பூங்கா ஒன்றுக்குள் நுழைந்தனர். பூங்காவைச் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தனர். ஓரிடத்தில் இஸ்லாம் பாட ஆசிரியரைச் சுற்றி வட்டமாக அமர்ந்தனர். அப்பொழுது ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே உரையாடல் இடம்பெற்றது.

**ஆசிரியர்**

பிள்ளைகளே! நாம் சுற்றுலாவைத் திட்டமிட்டபோது 'சுற்றாடல் பற்றிக் கலந்துரையாடுவோம் எனச் சொல்லி இருந்தேன் அல்லவா?' நீங்கள் இந்தச்



சுற்றுலாவில் பல பயனுள்ள விடயங்களை அறிந்து கொண்டிருப்பீர்கள். சுற்றுச் சூழலில் நீங்கள் அவதானித்த இயற்கைக் காட்சிகள், அதன் பயன்கள் அதனைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் முதலியன பற்றிய உங்கள் கருத்துக் களை ஒருவர் பின் ஒருவராகக் கூறுங்கள் பார்க்கலாம்.

**அப்ளல்**

நான் இந்தச் சுற்றாடலை எண்ணிப் பார்க்கிறேன். எவ்வளவு அழகான காட்சிகள். உயரமான மலைகள், உள்ளத்தை மகிழ்விக்கும் நீர்வீழ்ச்சிகள், பச்சைப் பசேலென்ற மரம், செடி, கொடிகள், பாடி மகிழும் பறவையினங்கள், சில்லென்ற குளிர்காற்று, வரிசையாகச் செல்லும் கால்நடைகள், கண்ணைக் கவரும் கட்டிடங்கள், பார்க்கப் பார்க்க ஆனந்தமாக இருக்கிறது. நான் இந்த இயற்கையை மனமாற விரும்புகிறேன்.

**ஆசிரியர்**

நன்றாகக் கூறினீர்கள். பிள்ளைகளே! இவைதான் எம்மைச் சூழவுள்ள சுற்றாடல். இவை அல்லாஹ் எமக்களித்த அருட்கொடைகள். மனிதனைப் படைப்பதற்கு முன்பே இவை பூமியில் படைக்கப்பட்டு விட்டன. அல்லாஹ் பூமியைப் படைத்து அதில் மலைகளை முளைகளாக ஆக்கி வைத்தான். அதன் பிறகுதான் பூமி தளம்பாது நிலை பெற்றது. அது மனிதனும் ஏனைய ஜீவராசி களும் வாழப்பொருத்தமாக அமையப் பெற்றுள்ளது. சரி உங்கள் கருத்துக் களைக் கூறுங்கள்.

**அர்ஹம்**

எம்மைச் சூழவுள்ள சுற்றாடல் எமது வாழ்வை வளப்படுத்துகிறது. எமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள உதவுகிறது. 'பூமியிலுள்ள யாவற்றையும் உங்களுக்காகவே படைத்துள்ளோம்' (2:29) என அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதை நாம் அறிவோம். இயற்கை வளங்கள் எல்லாம் மனித ருக்காகவே படைக்கப்பட்டுள்ளன. அவற்றைக் காப்பது எமது கடமையாகும்.

**நஸீம்**

எனக்குக் கவலையாக இருக்கிறது. சூழல் பற்றிய போதிய விளக்க மின்மையால் காடழிப்பு, இரசாயனக்கழிவுகள், அளவுக்கதிகமான புகை போன்றவற்றால் இயற்கை வளங்கள் பாதிப்படைகின்றன. இதன் காரணமாக உலகில் உணவுப்பஞ்சம், நன்னீர் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற செய்தியை பத்திரிகையில் படித்தேன்.

**ருஷைத்**

ஒரு முஸ்லிம் சூழலை மாசுபடுத்தக்கூடாது. 'ஈமானின் மிகத் தாழ்ந்த நிலை பாதையில் இடையூறானவற்றை அகற்றுவதாகும்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உபதேசித்துள்ளார்கள். தேவையின்றி மரங்களை வெட்டுவதை இஸ்லாம் தடைசெய்துள்ளது. பயிர் செய்து நன்மை பெறவும், மரம் நாட்டி சூழலை அழகுபடுத்தவும் இஸ்லாம் ஊக்குவிக்கிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸல்மானுல் பாரிஸீ ரழியல்லாஹு அன்ஹு என்ற தோழரின் விடுதலைக்காக அவரது எஜமானனின் தோட்டத்தில் முன்னூறு பேரீத்த மரங்கள் நாட்டிய சம்பவத்தைக் கேள்விப்பட்டுள்ளேன்.

**ஆசிரியர்**

பிள்ளைகளே! நீங்கள் தெரிவித்த விடயங்கள் அனைத்தும் உண்மை தான். இது அல்லாஹ் படைத்த உலகம். இவ்வுலகில் இருப்பவை எல்லாம் அவனுக்கே சொந்தம். அவை பூமியின் அழகுக்காகவும், பாதுகாப்புக்காகவும், மனிதனின் வாழ்வாதாரத்திற்காகவும் படைக்கப்பட்டுள்ளன. இந்தப் பௌதிகச் சூழலைப் பாதுகாப்பது எமது கடமையும் பொறுப்புமாகும். இது பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

**சரபத்**

மனிதனால் மாசடையும் வளியானது, தாவரங்களால் தூய்மையாக்கப்படுகிறது. நீர் நிலைகள், மைதானம், பழமரங்கள் உள்ள இடங்களில் மலசலம் கழித்து அவற்றை அசுத்தப்படுத்தக் கூடாது. சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதன் மூலம் எமது சிந்தனை சீரடையும். சுகாதாரம் பேணப்படும். வளங்கள் பெருகும். வாழ்க்கை வளம் பெறும்.

**சிமாக்**

மண்ணை வளப்படுத்துவதிலும் தாவர வளர்ச்சிகளிலும் மண்புழு, பூச்சிகள் உதவுகின்றன. ஆதலால் முழு சுற்றாடலையும் பேணிப் பாதுகாப்பது அறிவுள்ள மனிதனின் கடமையாகும். 'உங்களுக்கு வழங்கப்பட்ட அருட்கொடைகள் பற்றி மறுமை நாளில் நிச்சயமாக விசாரிக்கப்படுவீர்கள்' (102:8) என அல் குர்ஆன் எச்சரிக்கின்றது. உலகை வெறுத்து ஒதுக்குமாறு இஸ்லாம் போதிக்கவில்லை. மறுமை வாழ்வை மறக்காமல், இயற்கை

வளங்களைப் பயன்படுத்த வேண்டும். அதனைப் பாதுகாக்கவும் வேண்டும். வருங்கால சந்ததிகளுக்காக வளமான பூமியை விட்டுச் செல்ல வேண்டும். இது நம் அனைவரினதும் கடமையாகும்.

***ஆசிரியர்***

பிள்ளைகளே! நீங்கள் நல்ல பல கருத்துக்களைக் கூறினீர்கள். நீங்கள் சிறந்த அவதானம் உள்ளவர்கள். நல்ல பல தகவல்களைத் திரட்டியுள்ளீர்கள். சுற்றாடலிலுள்ள வளங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் அருட்கொடைகளாகும். அவை உயிரினங்களின் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானவை என்பதால் சுற்றாடலை சுத்தமாக வைப்பது பர்ளு கிபாயா எனும் கடமையாகும். அவற்றை மாசுபடுத்தாது, பாதுகாத்து பயனுள்ளதாக்குவோம். சுற்றாடலை நேசித்து வாழ்வோம்.

***பயிற்சி***

சுருக்கமான விடை தருக

*1.* சுற்றாடல் என்றால் என்ன?

*2.* சுற்றாடலில் காணப்படும் இயற்கை வழங்கள் மூன்றினைத் தருக.

*3.* மலைகள் படைக்கப்பட்டதற்கான காரணம் யாது?

*4.* சூழலை மாசுபடுத்தும் காரணிகள் இரண்டைத் தருக.

*5.* சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதனால் கிடைக்கும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக.

*6.* இயற்கை வளங்கள் யாருடைய அருட்கொடைகள்?

*7.* பாடத்தில் இடம் பெற்ற அல்குர்ஆன் வசனத்தை தருக.

*8.* சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் பற்றிச் சுருக்கமான விளக்கம் தருக.

# 29

# உயிர்களுக்கு அன்பு காட்டுவோம்

'முன்னொரு காலத்தில் ஒரு மனிதன் பாதை வழியே சென்று கொண்டிருந்தான். அவனுக்குத் தாகம் ஏற்பட்டு, நா வரண்டது. குடிப்பதற்குத் தண்ணீர் தேடினான். அப்போது அவன், அங்கே ஒரு கிணற்றைக் கண்டான். தண்ணீரை அள்ளி எடுக்கப் பாத்திரம் எதுவும் இல்லாததால் உள்ளே இறங்கி நீர் அருந்தி தனது தாகத்தைப் போக்கிக் கொண்டான். கிணற்றிலிருந்து வெளியேறிய அவன், தாகத்தால் துன்பப்படும் நாயொன்றைக் கண்டான். தாக மேலீட்டால் அந்த நாய் ஈர மண்ணை நக்கிக் கொண்டிருந்தது. 'பாவம்! இந்த நாய், தாகத்தால் கஷ்டப்படுகிறதே! எனக்குத் தாகம் ஏற்பட்டு நா வரண்டது போல இந்த நாய்க்கும் தாகம் ஏற்பட்டுவிட்டதே', என்று தனக்குள்ளேயே கூறிக்கொண்ட அம்மனிதன், உடனடியாக அக்கிணற்றுக்குள் இறங்கினான். தனது காலணியில் நீரை நிரப்பி கிணற்றை விட்டு வெளியேறி நாய்க்கு நீர் புகட்டி அதன் தாகம் தீர்த்தார். அம்மனிதனுக்கு அல்லாஹ் நன்றி கூறி அவனது பாவங்களையும் மன்னித்துவிட்டான்.'

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய இச்சம்பவத்தைக் கேட்ட ஸஹாபாக்கள், 'மிருகங்களுக்கு உதவுவதற்கும் எங்களுக்கு நன்மை கிடைக்குமா?' என ஆச்சரியத்தோடு வினவினர். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'உயிருள்ள பிராணிகள் விடயத்தில் செய்யும் ஒவ்வொரு நல்லவற்றுக்கும் நிச்சயமாகக் கூலி உண்டு' எனப் பதிலளித்தார்கள்.

மனிதனைப் படைத்த அல்லாஹ், அவனை ஏனைய உயிரினங்களை விடவும் மேன்மைப்படுத்தினான். தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மிருகங்களை மனிதனுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளான். உண்பதற்கு இறைச்சியையும், குடிப்பதற்குப் பாலையும் அவற்றிலிருந்து

பெற்றுக்கொள்வதற்கு அருள் புரிந்துள்ளான். மேலும், ஆடை நெய்வதற்கு நூல், செருப்பு, பை என்பன செய்வதற்குத் தோல் என பல்வேறு பயன்களும் அவற்றிலிருந்து கிடைக்கின்றன. இன்னும் சில உயிரினங்களை அழகுக்காகவும், பாதுகாப்புக்காகவும் பயன்படுத்தும் அதேவேளை, வேட்டையாடுதல், உழுதல், பிரயாணித்தல், பாரம் தூக்குதல் போன்ற சில வேலைகளுக்காகவும் மிருகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவையெல்லாம் மனிதனுக்கு அல்லாஹ் வழங்கிய அருள் என அல்குர்ஆன் விபரிக்கின்றது.

*'மனிதர்களே! கால்நடைகளையும் உங்களுக்காக அவனே படைத்திருக்கிறான். அவற்றில் (குளிரைத் தடுக்கும்) பொருள்களும் பல பயன்களும் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றைப் புசிக்கின்றீர்' (16:5)*

மனிதனைப் போலவே ஏனைய 'உயிரினங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் படைப்பு' என்பதால், இறைவனின் பிரதிநிதியான மனிதன், அவற்றோடு நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும் என அல்குர்ஆனும், ஹதீஸும் எமக்குக் கற்றுத் தருகின்றன.

*'பூமியில் ஊர்ந்து திரியக்கூடியவையும் தம்முடைய இரு இறக்கைகளால் (ஆகாயத்தில்) பறக்கக் கூடியவையும் உங்களைப்போன்றே (ஜீவனுள்ள) சிருஷ்டிப்புகளேயன்றி வேறில்லை' (6 : 38)*

ஆகையால், அல்லாஹ்வின் அடியார்களான முஸ்லிம்கள், உயிரினங்களோடு நல்ல முறையில் நடந்து கொள்வதும் அவற்றை அன்பாகப் பராமரிப்பதும் மார்க்கக் கடமையாகின்றது. அந்த வகையில், உயிரினங்களோடு ஒரு முஸ்லிம் நடந்து கொள்ள வேண்டிய, இஸ்லாம் கற்றுத் தருகின்ற நடைமுறைகளுள் சில பின்வருமாறு:-



### 01. இரக்கம் காட்டுதல்

மிருகங்களைச் சுய தேவைகளுக்காகப் பயன்படுத்துவோர் அவற்றின் மீது இரக்கம் காட்ட வேண்டும். அவற்றுக்குத் தேவையான உணவு, நீர் மற்றும் பொருத்தமான உறைவிடம் என்பவற்றை ஏற்பாடு செய்ய வேண்டும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது குதிரையின் முகத்தைத் தமது சால்வையால் துடைத்து விடுவார்கள். அதே போல் ஸஹாபாக்களும் இரக்கமாக நடந்து கொண்டார்கள்.

ஒரு முறை அபூகதாதா ரழியல்லாஹு அன்ஹு என்ற ஸஹாபி, தாகத் தினால் நீரைத் தேடிக்கொண்டிருந்த ஒரு பூனையைக் கண்டார்கள். உடனே நீர்ப் பாத்திரத்தைச் சாய்த்து அது தாகம் தீர நீர் அருந்த வழிசெய்தார்கள்.

உயிரினங்களைத் துன்புறுத்தக் கூடாது. அவற்றோடு இரக்கமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்ன இன்னொரு சம்பவத்தை அவதானியுங்கள்.

'முன்னொரு காலத்தில் ஒரு பெண் பூனையை கட்டிப் போட்டுவிட் டாள். அதற்கு நீரோ உணவோ கொடுக்கவில்லை. நிலத்தில் வரும் புழு, பூச்சிகளையும் உண்ண விடவில்லை. இதனால் அவள் நரகம் புகுந்தாள்' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

மிருகங்களுக்கும், உயிரினங்களுக்கும் உணவளிப்பது ஸதகா - தர்மம் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். 'ஒரு முஸ்லிம் பயிரிட்டாலோ, அல்லது விவசாயம் செய்தாலோ அதிலிருந்து ஏதாவதொன்றை மனிதனோ, பறவையோ, மிருகமோ தின்று விட்டால் அது அவ் விவசாயிக்கு தர்மமாகும்'. (முஸ்லிம்)

### 02. அளவுக்கு அதிகமான சுமை ஏற்றாதிருத்தல்



'ஒரு நாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்ஸாரி ஸஹாபிக்குச் சொந்தமான ஒரு தோட்டத்திற்குள் சென்றார்கள். அங்கு ஒரு ஒட்டகம் நிற்பதைக் கண்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்ட அந்த ஒட்டகம் கனைத்தது. அதன் கண்களிலிருந்து கண்ணீர்

வழிந்தோடியது. அதைக் கண்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஒட்டகத்திற்கு அருகே சென்று அதன் காதுகளுக்குப் பின்னால் தடவி னார்கள். உடனே அது அமைதி யாகியது. 'இதன் உரிமையாளர் யார்?' என வினவினார்கள். ஓர் அன்ஸாரி இளைஞர் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே, நான்தான் அதன் உரிமையாளர்' எனக் கூறினார். அவ்விளைஞனைப் பார்த்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'உமக்கு அல்லாஹ் சொந்தமாக்கியுள்ள இந்த மிருகத்தின் விடயத்தில் நீர் அல்லாஹ்வை அஞ்ச வேண்டாமா? நீர் அதனைப் பசியில் போட்டு வாட்டுவதாகவும், அதிகமான வேலை கொடுத்து களைப்படையச் செய்வதாகவும் என்னிடம் முறையிடுகின்றதே' எனக் கண்டித்தார்கள். (அபூ தாவூத்)

அல்லாஹ் இரக்கமானவன்; இரக்கமாக இருப்பவனையே அவன் விரும்புகின்றான். அதனையே அவன் திருப்தி கொள்கின்றான். துன்புறுத்தலுக்கு அவன் உதவாது இரக்கத்துக்கு உதவுகிறான். வாய் பேசாத இந்த மிருகங்களில் நீங்கள் சவாரி செய்தால் இடையிடையே அவற்றுக்கு ஓய்வளியுங்கள் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள். (மாலிக்)

### 03. துன்புறுத்தக் கூடாது

இஸ்லாம் அன்பையும் இரக்கத்தையும் தூண்டுகின்றது. எனவே, எந்தவொரு உயிரினத்தையும் வேதனை செய்யக் கூடாது. குறிப்பாக நெருப்பால் சுடக்கூடாது.

ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஸஹாபாக்களால் எரிக்கப்பட்ட எறும்புக் கூட்டைக் கண்டார்கள். 'இதை எரித்தவர் யார்?' எனக் கேட்டார்கள். அதற்கு ஸஹாபாக்கள், 'நாங்கள்தான்' எனப் பதிலளித்தார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நெருப்பைப் படைத்த ரப்பைத் தவிர வேறு யாரும் நெருப்பைக் கொண்டு எந்த உயிரையும் எரித்து நோவினை செய்யக் கூடாது' எனக் கண்டித்தார்கள். (அபூதாவூத்)

இன்னொரு சம்பவத்தைப் பாருங்கள்!

'ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முகத்தில் நெருப்பால் குறி சுடப்பட்ட ஒரு கழுதையைக் கண்டார்கள். அதைக்கண்டு கோபமுற்ற நபி(ஸல்) அவர்கள், இந்தக் கழுதைக்கு சுட்டுக் குறியிட்டவனை அல்லாஹ் சபிப்பானாக!' எனத் திட்டினார்கள். (முஸ்லிம்)

ஆயிஷா ரழியல்லாஹுு அன்ஹா அவர்கள் ஒரு முறை நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களுடன் ஒரு பயணத்தில் சென்றார்கள். ஒரு கழுதையில் அவர்கள் பயணித்தார்கள். அக் கழுதையை ஆயிஷா ரழியல்லாஹுு அன்ஹா அவர்கள் அதட்டிப் பயங்காட்டிய போது 'இரக்கமாக நடத்துங்கள்' எனக் கூறினார்கள். (முஸ்லிம்)

## 04. உயிரினங்களின் உறுப்புக்களைச் சிதைக்கக் கூடாது

பொதுவாக சிறுவர்கள் தும்பி, ஓணான் போன்ற உயிரினங்களை இவ்வாறு துன்புறுத்துவதும் உண்டு. பறவை வளர்ப்பவர்கள் அவை பறந்து சென்றுவிடாமல் பாதுகாப்பதற்காக அவற்றின் இறக்கைகளை வெட்டி விடுவதுண்டு. இவை உயிரினங்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்துவதாகவும் துன்புறுத்தல்களாகவும் அமைகின்றன. இவற்றைத் தவிர்த்து இரக்கமாக நடக்க வேண்டும்.

'யார் மிருகங்களின் உறுப்புக்களை உயிரோடு வைத்து சிதைக்கின்றாரோ அவரை அல்லாஹ்வும் மலக்குகளும் மனிதர்களும் லஃனத் (சாபம்) செய்கிறார்கள்'. (தபரானி)

## 05. தாயையும் சேயையும் பிரிக்கக் கூடாது

மிருகங்களின் அல்லது பறவைகளின் தாயை விட்டும் குஞ்சுகளைப் பிரிக்கக்கூடாது. அவற்றின் கூடுகளைக் கலைக்கக் கூடாது.

'ஒரு முறை நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களுடன் ஒரு பிரயாணம் சென்றார்கள். அப்போது ஸஹாபாக்கள் குருவியொன்றைக் கண்டனர். அக்குருவியோடு இரண்டு



குஞ்சுகளும் இருந்தன. அப்போது அவர்கள் அவற்றில் ஒன்றைப் பிடித்துக் கொண்டார்கள். அதைக் கண்ட தாய்க்குருவி ஸஹாபாக்களிடம் வந்து சிறகடித்து கொண்டு நின்றது. குருவியின் நிலமையை விளங்கிக் கொண்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இதன் குஞ்சுகளை யார் பிரித்தது? அதன் குஞ்சுகளை அதற்கே கொடுத்து விடுங்கள்' என்று ஸஹாபாக்களுக்கு கூறினார்கள். (அபூதாவூத்)

## 06. நோயுற்றால் சிகிச்சையளித்தல்

தனது பொறுப்பில் இருக்கின்ற உயிரினம் நோய்வாய்ப்பட்டு விட்டால் உரிய வைத்தியத்தைச் செய்து அதனைப் பராமரிக்க வேண்டும். 'ஒவ்வொரு மேய்ப்பாளனும் தனது மேய்ப்பு பற்றி மறுமையில் விசாரிக்கப்படுவான்' என்ற ஹதீஸுக்கு அமைய ஒவ்வொரு முஃமினும் நடந்து கொள்ள வேண்டும். மாணவர்களே! உயிர்களிடத்தில் நாம் அன்பு செலுத்தினால் அல்லாஹ் எம்மீது அன்பு செலுத்துவான். எனவே, எல்லாம் வல்ல அல்லாஹ் எமக்காகப் படைத்து, எமக்கு வசப்படுத்தித் தந்துள்ள உயிரினங்களை உதாசீனம் செய்யாது, அவையும் அல்லாஹ்வின் படைப்பு என்ற எண்ணத்தோடு மேற்சொன்ன விடயங்களைக் கருத்திற்கொண்டு செயற்பட முயற்சிப்போமாக!

**பயிற்சி**

சரி, பிழை கூறுக.

1. இஸ்லாம் மனிதன் பற்றி மட்டுமே பேசுகின்றது. ( )
2. மனிதன் விரும்பும் விதங்களில் மிருகங்களைப் பயன்படுத்தலாம். ( )
3. வீட்டில் தொல்லை தரும் தாய்ப் பூனையைத் தனியே விட்டு குட்டிகளைத் தூரத்தில் கொண்டு வைப்பதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. ( )
4. உயிரினங்களுக்கு அன்பு காட்டுவதை அல்லாஹ் விரும்புகின்றான். ( )
5. உயிரினங்களை நெருப்பால் சுடுவது பாவமான செயலாகும். ( )